# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 26 ஞாயிற்றுக்கிழமை (09.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 164


# புலிகளுக்குப் புத்துயிர் கொடுக்க உங்கள் மண்ணில் இடந்தராதீர்!

## மேற்குலக நாடுகளுக்கு பிரதமர் அவசர வேண்டுகோள்



கொழும்பு,மே9

**எமது நாட்டில் அழித்து ஒழிக்கப்பட்டுவிட்ட விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் கொடுக்க உங்கள் மண்ணில் இடங்கொடுக்காதீர்கள்! உங்கள் நாட்டை அதற்காகப் பயன்படுத்தும் தமிழர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்!!**

**இவ்வாறு மேற்குல நாடுகளுக்கு அவசர அழைப்பு விடுத்திருக்கிறார் பிரதமர் டி.எம்.ஜயரத்தினா.**

**கொழும்பில் வெளிநாட்டு ஊடகவியலாளர் சங்கத்துடன் நடத்திய சந்திப்பின் போதே பிரதமர் தமது வேண்டுகோளை விடுத்தார்.**

வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் பிரதமர் மேலும் தெரிவித்தவையாவது:-

வெளிநாடுகளில் வசித்துவரும் சுமார் 15 லட்சம் புலம்பெயர் தமிழ்மக்கள் இலங்கையில் தங்கள் சமூகத்தினருக்கென சுதந்திர தாயகம் ஒன்றை உருவாக்குவதற்காக பிரிவினைப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கென இயக்கமொன்றை ஏற்படுத்திக் கொள்ள திட்டமிட்டு வருகிறார்கள்.

வெளிநாடுகளிலுள்ள விடுதலைப் புலிகள் அனுதாபிகள் எதிர்வரும் 17ஆம் திகதி தொடக்கம் சுவிற்ஸர்லாந்தில் மூன்று நாள் நிதிசேகரிப்பு இயக்கம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள்.

மற்றுமொரு நாட்டுக்கு எதிராக எவரும் எமது மண்ணைப் பயன்படுத்த நாம் அனுமதி அளிக்கமாட்டோம். மேற்கு நாடுகள் இலங்கைக்கு விரோதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தடுப்பதற்கு ஆவன செய்வதில்லை என்று நான் கருதுகிறேன். மேற்கு நாடுகள் அத்தகையோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தத் தீவில் தமிழர் தாயகம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக 37 வருடங்களாகப் போராடி வந்த தீவிரவாதத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை படையினர் கடந்த வருடம் மே மாதம் கொன்றனர்.

ஆயினும் வெளிநாடுகளில் வாழும் தமி ழர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக் குப் புத்துயிர் அளித்து இலங்கையில் செயலிழந்திருக்கும் தீவிரவாதிகளை மீண்டும் செயற்பட வைப்பதற்குத் திட்டமிட்டு வருகிறார்கள்.

மேற்கு நாடுகளில் உள்ள தமிழர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக அந்த நாடுகள் நடவடிக்கை எடுப்பதாக இல்லை. - என்றார். (அ-1)

## இலங்கையர் 38 பேர் கேரளாவில் கைது

சென்னை,மே9

கேரளா மாநிலத்தின் கோலம் பகுதியில் இலங்கையைச் சேர்ந்த ஐந்து பெண்கள், சிறுவர்கள் உட்பட 38 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விடுதி ஒன்றில் தங்கியிருந்த இவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார் இவர்களைக் கைது செய்து தடுத்துவைத்து விசாரணைகளைச் செய்து வருகின்றனர்.

இவர்களில் சிலர் இராமேஸ்வரம் கடல் வழியாகவும் சிலர் விமானம் மூலமும் வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்களும், சிறுவர்களும் ஹோட்டலில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆண்கள் தொடர்ந்து விசாரணை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சாத்தியங்கள்: டில்லியில் அரசியல் புலமையாளர்கள் சுயாதீன மாநாடு

### இரண்டு நாள்கள் நடைபெறும்

புதுடில்லி,மே9

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வுகாண எவ்வாறு உதவமுடியும் என இலங்கை - இந்திய நாடுகளின் அரசியல், அரசமைப்பு நிபுணர்கள், சட்ட வல்லுநர்கள், அரசியல் புலமையாளர்கள், கல்வியியலாளர்கள் ஒன்று கூடி ஆராயும் மாநாடு புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் நடைபெறும் இந்த மாநாட்டில் இலங்கை, இந்திய அரசியல் சார் அறிஞர்கள் (Think Tank) கலந்துகொண்டு தமது ஆலோசனைகளைச் சமர்ப்பிப்பர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13+ அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு காண உதவுவதற்காக சுயேச்சை அமைப்பு ஒன்றினால் கூட்டப்பட்ட இம்மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த எந்த ஒரு கட்சியினரும் அழைக்கப்படவில்லை.

எனினும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருமா ராவ் மாநாட்டில் கலந்துகொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் எவ்வாறான தீர்வைப்பெற்றுக் கொடுக்க உதவமுடியும் என்று அரசியல், அரசமைப்பு நிபுணர்களும் புலமையாளர்களும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதும் அது தொடர்பில் இந்தக் குழுவினரால் கலந்தாலோசிக்கப்படும் எனவும் தெரியவந்துள்ளது. (அ-6)

## வெள்ளைவானில் கடத்தப்பட்டவர் தாக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டார்

### வட்டுக்கோட்டையில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,மே9

வட்டுக்கோட்டை, சங்கரத்தையில் வீட்டிலிருந்த குடும்பஸ்தரை வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதவர்கள் அழைத்துச் சென்று கடுமையாகத் தாக்கியுள்ளனர். அப்போது படுகாயமடைந்த சம்பந்தப்பட்டவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் நடைபெற்றது. சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த குடும்பஸ்தரான புலேந்திரன் (வயது34) என்பவர் தனது வீட்டில் அம்மன் கோயில் வைத்து சாத்திரம் மற்றும் 'பார்வை' பார்த்துக் குறி சொல்பவர் ஆவார்.

இவரது வீட்டிற்கு நேற்றிரவு 8 மணிக்கு வெள்ளை வானில் சென்ற 9 பேர் தமது நெருங்கிய உறவினர் ஒருவர் சுகயீனமுற்றிருப்பதாகவும் அவரை தமது வீட்டுக்கு வந்து பார்வையிடுமாறு கூறி வானில் அழைத்துச் சென்று சங்கானை வைத்தியசாலைக்கு அருகில் வைத்துக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

மீண்டும் வானில் ஏற்றிச்சென்று அவரது வீட்டுக்கு அருகில் வைத்துத் தாக்கிய போது தாக்கப்பட்டவர் சத்தமிட அயலவர்கள் கூடியபோது அந்த இடத்தை விட்டு தாக்குதல் நடத்தியோர் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸாரிடமோ இராணுவத்தினரிடமோ எதுவும் தெரிவிக்கக் கூடாது எனவும் வெள்ளை வான் கும்பலினர் மிரட்டிச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-10-78)


கல்வனைஸ்ட் கூரைத் தகடுகள்
Five Star Brand
G.I. ROOFING SHEETS
6 அடி தொடக்கம் 10 அடிவரை பெற்றுக்கொள்ளலாம்
Jeysons Trading Company
123, Maha Vidyalaya Mawatha, Colombo - 13.
Contact No: 0777410503.


## பிரிட்டனில் கூட்டணி அரசமைக்க கன்சர்வேடிவ் கட்சி பேச்சுவார்த்தை

லண்டன்,மே9

பிரிட்டனில் நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அறுதிப்பெரும்பான்மையை எந்தக் கட்சியும் பெறாத நிலையில் கூட்டணி அரசாங்கம் ஒன்றை அமைக்க பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் கூடுதல் ஆசனங்களைப் பெற்ற கன்சர்வேடிவ் கட்சி, லிபரல் ஜனநாயக் கட்சியுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

கன்சர்வேடிவ் கட்சியினர் தங்களோடு ஒத்துவருவதாக தெரிவித்த விடயங்கள் குறித்து விவாதிப்பதற்காக லிபரல் ஜனநாயகக் கட்சித் தலைவர் நிக் கிளெக் தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துள்ளார். (26ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்டப் பொலிஸ் நிலையங்களுக்கு அடுத்த மாதத்தில் 400 பேர் நியமனமாவர்

யாழ்ப்பாணம்,மே9

யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பணிபுரிய 400 பொலிஸார் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

யாழ். பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் பொலிஸ் சேவைக்கு ஆள்சேர்ப்பதற்காக குடாநாட்டைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை, மருத்துவப் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றித் தெரிவானவர்களுக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வினவியபோதே, மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது. 400 பேருக்கு நியமனம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நடைபெற்ற தேர்தல்கள் காரணமாக நியமனங்கள் வழங்கப்படவில்லை. எனினும் இவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அடுத்த மாதமளவில் இந்த நியமனம் வழங்கப்படும் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)


விக்னேஸ்வரா நகைப்பூங்கா
அக்ஷய திருதியை தங்கத் திருநாள் மே 16 ஞாயிறு தங்கம் வாங்குவதற்கு சிறந்த நாள் ஆகிய இத்தினத்தில் எம்மிடம் தங்கம் வாங்கும் உங்களுக்காக விசேட விலைக் கழிவுகளும் பரிசுப்பொருள்களும் வழங்கப்படும். அக்ஷய தினத்தன்று
விக்னேஸ்வரா நகைப்பூங்கா 01. 205/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
02. 34 D கந்தசாமி கோயில் வீதி, வவுனியா.
காலை 8 மணி தொடக்கம் மாலை 6மணி வரை திறந்திருக்கும்.
இத்தினத்தை முன்னிட்டு உங்களால் மே 10 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதிவரை ஓடர் செய்யப்படும் தங்க நகைகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு பொருள்களை அனுப்ப நம்பிக்கையான ஒரே இடம் விக்னேஸ்வரா நகைப்பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

பிறப்பு
1935
★
06
★
15



இறப்பு
2010
★
04
★
09

## திருமதி தம்பிப்பிள்ளை பார்வதி

கடந்த 09.04.2010 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு அனுதாபம் கூறி எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாரியம்மன் வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (97994)

குடும்பத்தினர்.
தகவல் : த.ஜெயராஜா(மகன்)
(ஒளியருவி பந்தல் சேவை)

# 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
15
★
04
★
1942



மறைவு
09
★
04
★
2010

## அமரர் முத்தையா கந்தசாமி

பார் போற்றும் வண்ணம் வாழ்ந்து உறவுகள் மீது
நிறைவான மனதுடன் அன்பு கொண்டு
நேர்மையுடன் வாழ்ந்தீர்கள் அண்ணாவே
என்றும் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும்.

இல. 23, B.A.தம்பி லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (97981)

தகவல்:
நாகேந்திரராசா
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெயகலா சிவராசா (மிதிலா)



நல்லூர், வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெயகலா (மிதிலா) சிவராசா 06.05.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தனங்களப்பு சபாபதிப்பிள்ளை சிவராசாவின் அன்பு மனைவியும் தற்போது கனடாவை வதிவிடமாகக் கொண்ட அமரர் கார்த்திகேசு கணேசு மற்றும் இரத்தினேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் கனடாவை வதிவிடமாகக் கொண்டவர்களான பிரபாகரன், வசீகரன், மேகலா, வசீகலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகராஜன் (மட்டக்களப்பு), திருநிறைச்செல்வி (அச்சுவேலி), தேவராஜன் (லண்டன்), ஜெயந்தினி, ஞானம்பிகை, அசோக், சுகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாணி தட்டச்சு களஞ்சியம்,
74,வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
(கணவர்), குடும்பத்தினர்
0778893485.

## சபாபதிப்பிள்ளை மகேந்திரநாதன்



உசனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை மகேந்திரநாதன் நேற்று (08.05.2010) சனிக்கிழமை நண்பகல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதிகளின் மகனும் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் தசீலன்(லண்டன்), தசிகரன்(லண்டன்), தர்சிகா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மதனகாந்தனின் மாமனாரும் சின்னராசாவின் சகோதரனும் கனகரத்தினம், பத்மநாதன், யோகரத்தினம், கமலாதேவி, கனகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.1 மணிக்கு உசன் ஈச்சங்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன், மிருசுவில். (97997)

தகவல்:
ம.சகுந்தலாதேவி(மனைவி),
ச.சின்னராசா(சகோதரன்).

# பாம்புக்கடி முதலுதவி; விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே9

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் 'ஏ' பிரிவினரின் ஏற்பாட்டில் இலங்கையிலுள்ள தவளைகள், பாம்புகள், பல்லிகள், அறணைகள், ஓணான்கள் பற்றியதான விஞ்ஞானக் கருத்தரங்கு வரும் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் நடைபெறவுள்ளது.

கருத்துரைகளை "இலங்கையிலுள்ள தவளைகள், நகருயிர்கள் பற்றிய ஓர் அறிமுகம்" எனும் தலைப்பில் இலங்கையின் மூத்த விஞ்ஞானி ஏ.டிசில்வாவும், "பாம்புக் கடிக்கு முதலுதவியும், அதற்குரிய முகாமைத்துவமும்" எனும் தலைப்பில் பேராசிரியர் எஸ்.ஏ.எம்.குலரத்னவும் வழங்கவுள்ளனர். (10)

# பரிசளிப்பு நிகழ்வு

வலி.வடக்கு,மே9

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் வடமாகாண மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்கள், பெண்களுக்கான வேகநடை, மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் இன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளன.

வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர். ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேசும் கலந்துகொள்வர். (1-86)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்றுவரை
மக்களுடன் நகமும்
சதையும் போல்
ஒட்டி உறவாடி
இன்னல் பல
தீர்த்து கூட்டுறவு
நிறுவனங்களின்
வளர்ச்சிக்காக பல
ஆலோசனைகள்
வழங்கி உதவி
வரும் எமது

## கௌரவ டக்ளஸ் தேவானந்தா

அவர்கள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்கள் அபிவிருத்தி அமைச்சராகப் பதவியேற்று அவர்கள் யாழ்.மக்களுடன் ஒன்று சேர வருகை தருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

*'கூட்டுறவே நாட்டுயர்வு'*

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
புலோலி ப.நோ.கூ.சங்கம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(சி/567519)


# உடன் விற்பனைக்கு

85 Sri XXXX தொடர் இலக்கமுடைய CD200 சிவப்பு நிறமுடைய மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு 0772247481


# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் தங்கராசா



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தங்கராசா நேற்று (08.05.2010) சனிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் குலமணி தேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கலாநிதி மற்றும் தயாபரன் (நியூ சாந்தி மில், வட்டுக்கோட்டை), விமலாநிதி, தயானந்தன் (பவன் மில், செட்டியார் மடம், அராலி), தயாநிதி, தவராசா (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதியின் திருப்பலியும் பொதுவரவேற்பும்

கடந்த 05.05.2010 அன்று யாழ்ப்பாணம் வருகை தந்த பரிசுத்தப் பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற்றின் இலங்கைக்கான பிரதிநிதி



## பேராயர் ஜோசப் ஸ்பிற்றேரி

ஆண்டகை அவர்களுக்கு யாழ்.மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவிகள் இறைமக்கள் பேராயருடன் இணைந்து ஒப்புக்கொடுக்கும் திருப்பலியிலும் அதன் பின் நடைபெறும் வரவேற்பு நிகழ்விலும் அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறும் பேராயரின் ஆசீரைப் பெறவும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

இடம் : யாழ்.மரியன்னை பேராலயம்
நேரம் : 4.15p.m (திருப்பலி ஆரம்பம்)
காலம் : இன்று (09.05.2010) ஞாயிறு
வரவேற்பு : ஆலய வளாகம்
நிகழ்வுகள்

(சி/567508)

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்


# மாபிள் வகைகள் மலிவு விற்பனை

இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர மாபிள் வகைகள், கொமட் செட், சிங்வகைகள், பிளாஸ்ரிக் கதவு வகைகள், பைப் வகைகள், மர அடைப்புகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட 'DUKE' பெயின்ற் வகைகள் என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.

## ஸ்ரார் செரமிக்ஸ்

இல.05, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021- 5672061, 077 7578277- ராஜா

(சி/567231)

# Study in Singapore

With industry attachment
Diploma, Advanced Diploma in
Tourism & Hospitality Management (12 Months)

Hurry, Admission is open for June intake!

Call: Mr.N.Geethan
Mr.N.Sujeevan
Jaffna Technical Institute.
No. 46, Clock Tower Road,
Jaffna.
0773484467 / 0777855800

குறிப்பு: சிங்கப்பூரில் நடைபெறவுள்ள இக் கற்கை நெறிக்கான பதிவுகளினை இன்றிலிருந்து மேற்கொள்ள முடியும். விண்ணப்பதாரிகள் தொலைபேசி அல்லது மேலேயுள்ள முகவரிக்கு ஒரு கிழமைக்குள் கிடைக்கக் கூடியவாறு சுய விவரத்தினை அனுப்புமாறு மகிழ்வுடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

(சி/567516)


# மரண அறிவித்தல்

## நல்லதம்பி சிவஞானம்



உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லதம்பி சிவஞானம் நேற்று (08.05.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பவளம்மா மற்றும் சிவமணிதேவி, சரஸ்வதி, பூபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பிராய் மேற்கு சிவகுல வீதியிலுள்ள அன்னாரது சகோதரியின் இல்லத்தில் இன்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரத்தை நிமிர்த்தி உயர்த்த இங்கு வந்து குவியும் வங்கிகள், நிறுவனங்கள் உதவுமா?

போர் ஓய்ந்து சுமார் ஒரு வருடம் நிறைவடையும் நிலையில் இலங்கையில் மட்டுமன்றி யாழ். மாவட்டத்திலும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. புனரமைப்புப் பணிகள், அபிவிருத்தி நடவடிக்கைகள், புதிய கட்டுமானப்பணிகள் எனப் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச வங்கிகள் முதல் உள்ளூர் வங்கிகள் வரை அனைத்தும் யாழ்ப்பாணத்தில் தமது கிளைகளைத் திறந்துள்ளன. மேலும் கிளைகளைத் திறப்பதற்கான ஏற்பாடுகளையும் அவை மேற்கொண்டுள்ளன. யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகம், மானிப்பாய் போன்ற இடங்கள் இப்போது வங்கிகளின் நகரமாகி வருகின்றன. அது போதாதென்று தென்னிலங்கையில் இருக்கின்ற பல்வேறு நிதி நிறுவனங்களும் யாழ்ப்பாணத்தை விட்டு - வைக்கவில்லை. நாளுக்கு நாள் அவையும் தமது கிளைகளை இங்கு பரப்பி வருகின்றன. ஒட்டுமொத்தத்தில் யாழ்ப்பாணம் உலகின் வர்த்தக நகரங்களில் ஒன்றாக மாறிவருகின்றதோ என நினைக்கத் தோற்றுகின்றது. இவையெல்லாவற்றுக்கும் காரணங்கள் இருக்கவே இருக்கின்றன.

பல பரம்பரைகளாகவே யாழ். மக்கள் சேமிப்புப் பழக்கத்தில் அதிக நாட்டம் கொண்டவர்கள். கடந்த 30 வருட கொடூர யுத்தத்தின் பின்னரும் அவர்கள் தமது சொந்தக் காலில் நிமிர்ந்து நிற்பதற்கு இந்த சேமிப்புப் பழக்கமும் மிக முக்கியமானதொரு காரணியாகும். தம்து மூதாதையர்களிடமிருந்து கற்றுக்கொண்ட இந்தச் சேமிப்புப் பழக்கம் அவர்களுடைய வாழ்க்கையில் பின்னிப்பிணைந்துள்ளது.இன்று வரை அது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. தமது வருமானத்தில் ஒரு பகுதியை சேமித்து அதனை வங்கிகளில் வைப்பில் இட்டு ஒரு பெரிய மூலதனமாகப் பேணுவதில் யாழ். மக்கள் வல்லவர்கள். யாழ். மக்களின் பெரும்பாலானோருக்கு வங்கிக் கணக்குகள் உள்ளன என்பது அனைவருக்கும் தெரிந்ததொரு உண்மை.

இந்த உண்மையை - சேமிப்புப் பழக்கத்தை ஏற்கனவே அறிந்து வைத்துள்ள வங்கிகள், நிதிநிறுவனங்கள் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியான சூழ்நிலையைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்துக்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளன. யாழ்ப்பாண மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியே தமது ஒரே நோக்கம் எனவும் அவர்களிடம் இருந்து பெறப்படும் பணத்தின் மூலம் அவர்களது பிரதேசங்களிலேயே அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று கூறிக்கொள்ளும் வங்கிகள், நிதிநிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்களை தமக்கெனத் திரட்டுவதற்கான கைங்கரியங்களை ஆரம்பித்திருக்கின்றன. அதனால் தான் அவை முண்டியடித்துக்கொண்டு - நான் முந்தி, நீ முந்தி என தமது கிளைகளை நிறுவுவதில் அதீத ஆர்வம், அக்கறை காட்டி வருவதைச் சர்வசாதாரணமாகக் காணமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர் களைக் கவர்ந்திழுப்பதன் மூலம் தமது வியாபார இலக்கை எட்டிப்பிடித்துவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வங்கிகள், நிதிநிறுவனங்கள்செயற்பட்டு வருகின்றன. இதற்காக விளம்பரங்களை கவர்ச்சியான - அட்டகாசமான வகையில் வடிவமைத்து அதில் பல்வேறு சலுகைகளையும் புகுத்தி வெளியிட்டு வருவதன் நோக்கம் என்ன என்பதையும் யாழ்ப்பாண மக்கள் அறியாதவர்கள் அல்லர். எதற்கும் பழக்கப்பட்டுப் போன அவர்களுக்கு இதுவும் நன்கு விளங்கும்.

கடந்த காலங்களில் தொடர்ந்த யுத்த நடவடிக்கைகளால் யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும் எண்ணிக்கையான பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக லட்சக்கணக்கில் செலவழித்து அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்திருந்தமையும் தெரிந்த விடயம். அவ்வாறு வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்த இளைஞர்கள் அங்கு நல்ல வேலைவாய்ப்புக்களைப் பெற்று கைநிறையச் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டார்கள். அதன்

## அதுவே அவற்றின் இலக்காக இருக்கவேண்டும்

எதிரொலியாக வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணத்தில் பெரும் பகுதி யாழப்பாணத்தையே வந்தடைவதாக புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்திருக்கிறது. இலங்கை மத்திய வங்கிக்கும் இந்த உண்மை புரிந்துவிட்டது. அதனால் தான் என்னவோ வடக்குக் கிழக்கில் வங்கிக் கிளைகளையும், நிதிநிறுவனங்களின் கிளைகளையும் நிறுவுவதற்கான அனுமதியை விண்ணப்பித்து ஒரு வாரத்தில் வழங்குவதற்கு மத்திய வங்கியின் ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளதாக அதன் செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ். மக்களின் சேமிப்புப் பணம், வெளிநாட்டில் இருந்து வரும் பணம் என கைநிறையப் பணத்துடன் அவர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த வங்கிகளும் நிதி நிறுவனங்களும் இங்கு தமது பார்வையைத் திருப்பியிருக்கின்றன.

மத்திய வங்கியின் ஆளுநரைக் காண்பதென்றால் அது ஒரு அருமை பெருமையான விடயத்தில் மட்டுமே காணமுடியும் என்ற காலம் மலையேறி தற்போதுள்ள ஆளுநரான அஜித் நிவாட் கப்ராலை இப்போது யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரணமாகக் காணமுடிகின்றது என்கிறார் யாழ். செயலகத்தின் இளைப்பாறிய அரச உயர் மட்ட அதிகாரி ஒருவர். அவரது அந்தக் கூற்றில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. இந்த ஆண்டில் நான்கு மாதங்கள் கழிந்த நிலையில் இதுவரை மத்திய வங்கியின் ஆளுநர் ஐந்து தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து போயிருக்கிறார் என்பதை உங்களால் நம்பமுடிகிறதா? நம்பித்தான் ஆக வேண்டும்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் சில வங்கிகள் குடாநாட்டு மக்களுக்கு விலைமதிப்பற்ற சேவையை வழங்கியிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. மக்களோடு மக்களாக தாமும் இடம்பெயர்ந்து அவர்களது இன்ப,துன்பங்களில் பங்குகொண்டு இக்கட்டான வேளைகளில் இந்த வங்கிகள் வழங்கிய பெருமதிப்பு மிக்க உதவி பாராட்டப்பட வேண்டியது - பதியப்பட வேண்டியது. பொருளாதாரத் தடை, போக்குவரத்து நெருக்கடி போன்ற நெருக்குவாரங்கள் அமுலில் இருந்தபோது இந்த வங்கிகள் எமது மக்களுக்குப் பேருதவியாய் இருந்திருக்கின்றன.

இப்போது ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பொருளாதாரத் தடையில்லை. போக்குவரத்து நெருக்கடி கிடையாது. யாரும் எப்போதும் எங்கும் போகலாம், வரலாம். இந்தச் சூழ்நிலையைத் தமக்கு நன்கு சாதகமாக்கிக் கொண்ட வங்கிகளும்,நிதிநிறுவனங்களும் விழுந்தடித்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு ஓடி வருவது குறித்துச் சிந்திக்க வேண்டிய - விழித்துக்கொள்ள வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.

இதற்கு இன்னொரு காரணம் இலங்கையில் உள்ள பிரபல வர்த்தப் புள்ளிகளில் கணிசமானவர்கள் யாழ்ப்பாணத்திலும் இருக்கிறார்கள். சுமுகமான ஒரு நிலை உள்ளதால் அவர்களுக்கும் இப்போது வியாபாரம் ஆகா! ஓகோ!! என்று நடைபெறு கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் தாமும் அதற்குள் புகுந்து அவர்களைத் தம் பக்கம் இழுத்து அவர்களது வைப்புக்களை கவருவதன் மூலம் தமது இலாபத்தையும் வியாபார இலக்கையும் அதிகரித்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் இந்த வங்கிகளும், நிதிநிறுவனங்களும் வந்திருக்கின்றன என்பது நன்கு புரிந்த விடயம்.

இந்த வங்கிகள், நிதிநிறுவனங்கள் குடாநாட்டுக்குப் படையெடுப்பது தவறு என்றோ அல்லது அவை இங்கு வரக்கூடாது என்றோ நாம் சொல்லவரவில்லை. அவர்களை நாம் இன்முகத்துடன் தாராளமாக வரவேற்கிறோம். அழிந்துபோன எமது தமிழ் இனத்தின் பொருளாதார, வாழ்வியல் கட்டுமானங்களை மீட்டெடுக்கும் உன்னத பணியில் உண்மையுடன் ஈடுபட முன்வரும் எவரும் வரவேற்கப்படவேண்டியவர்களே. யுத்தத்தினால் நொந்து நூலாகிப் போன மக்களின் வாழ்வில் ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் அனைவருக்கும் உண்டு. அதற்கு இந்த வங்கிளும், நிறுநிறுவனங்களும் விதிவிலக்கானவையல்ல. அவற்றின் பணியும் சேவையும் எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கு மிக அவசியமானவை - அவசரமானவை.

**-அதிரன் -**

யுத்தக் கொடூரத்தினால் பல குடும்பங்கள் வீடு வாசல்கள், சொத்துக்கள் என அனைத்தையும் அடியோடு இழந்து நிர்க்கதியான - துர்ப்பாக்கியமான நிலையில் அந்தரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஓலைக் குடிசைகளிலும், ஒழுகும் முகாம்களிலும் அவர்களின் அன்றாட வாழ்வு கழிந்துகொண்டிருக்கிறது. இப்படியான மக்களின் மீது இந்த வங்கிகள், நிதிநிறுவனங்கள் தமது பார்வையைத் திருப்ப வேண்டும் என இச்சந்தர்ப்பதில் உரிமையுடன் கேட்டு நிற்கின்றோம்.

யாழ். மக்களிடம் இருந்து பெறும் வைப்புக்களில் இருந்து கிடைக்கும் இலாபத்தை அந்த மக்களின் வாழ்வியல் விருத்திக்கே செலவிடுவோம் என்ற தாரக மந்திரத்துடன் யாழ்ப்பாணத்துக்கு வரும் இந்த நிறுவனங்கள் தமது தாரக மந்திரத்தின் உண்மைத்தன்மையை வெறும் வாய்ப்பேச்சில் அல்லாமல் செயலில் காட்ட முன்வர வேண்டும். மக்களிடம் இருந்து பெறப்படும் பணத்தின் மூலம் கிடைக்கப்பெறும் இலாபங்களை நொந்து நூலாகிப்போன மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நலத்திட்டங்களை ஆரம்பித்து அவற்றுக்குச் செலவிடவேண்டும். இதில் சிறந்த வெளிப்படைத் தன்மை நிலவ வேண்டும். உண்மையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சரியான முறையில் இனங்காணப்பட்டு அவர்களின் வாழ்வியலை மீளமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் வீழ்ச்சியடைந்துள்ள விவசாயத்துறையை தூக்கி நிமிர்த்துவதற்கான பொருத்தமான திட்டங்கள் விவசாயிகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும். விவசாயிகளுக்கான நவீன தொழில்நுட்பத்துடனான பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கான கடன் திட்டங்கள், நவீன உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான பண உதவிகள் செய்யப்பட வேண்டும். இங்குள்ள சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் இழந்துபோன சொத்துக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். அத்துடன் அவர்கள் தமது தொழிலை மீள ஆரம்பிப்பதற்கு நிதிஉதவிகள் செய்யப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தின் பொருளாதார மூலங்களில் ஒன்றாக விளங்கும் மீன் பிடித்துறையை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்படும் மீன் வகைகளே இலங்கையின் பல பாகங்களிலும் சந்தைப்படுத்தப்பட்டு மக்களின் மீன் தேவையில் கணிசமான அளவை நிறைவு செய்தன. அந்த நிலைமை மீண்டும் ஏற்பட வேண்டும். அதற்காக யாழ்ப்பாண மீனவர்களுக்கு விசேட கடனுதவிகள், கடற்றொழில் உபகரணங்கள் என்பவற்றை வழங்கி அவர்களின் தொழிலை ஓர் உறுதியான நிலைக்கு இட்டச் செல்ல வேண்டும். யாழப்பாண மக்களின் செல்வங்களில் ஒன்றாக இருக்கும் கல்வி செல்வத்தை மேலும் வளர்த்தெடுத்து ஒரு நல்ல நிலைக்கு உயர்த்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். யாழ். மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்வி பெறவும், உயர் தொழில்நுட்ப பயிற்சிகளை பெற்றுக்கொள்ளவும், சிறந்த தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் உரிய உதவிகள், வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும்.

இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்துக்குக் கிளைகளைப் பரப்பும் வங்கிகளிடம் இருந்தும், நிதிநிறுவனங்களிடம் இருந்தும் இதனையே யாழ். மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்களின் பணத்தைப் பெற்று தமது இலாபத்தை எட்டிவிட வேண்டும் என்ற ஒரே நோக்கோடு இல்லாமல் மேற்குறிப்பிட்ட பணிகளை சிறப்பாக நிறைவேற்றும் எவருக்கும் யாழ். மக்களின் மனங்களில் நிச்சயம் உறுதியான இடம் கிடைக்கும். மக்கள் தமது ஆதரவை வழங்குவர். அவ்வாறு செய்யின் அவை இங்கு நிலைத்திருக்க முடியும்.

எனவே இந்த நிறுவனங்கள் மேற்சொன்ன உயரிய இலக்கோடு யாழ். மக்களுக்கு தமது சேவைகளையும், உதவிகளையும் வழங்க முன் வருவார்கள் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி வேலை வாய்ப்பு

* விற்பனைப் பிரதிநிதி (DSR , ஆண்)
* கணக்காளர் (அனுபவமுள்ள ஆண்/ பெண் இருபாலரும்)

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
14.05.2010 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

(சி-567507) வி/ இல.4016, C/O உதயன்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 - 12 - 1936



இறப்பு 21 - 04 - 2009

### மாணிக்கவாசகபிள்ளை கனகசபை

(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

முகம்நக நட்பது நட்பன்று - நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு

உடுக்கை இழந்தவன் கைபோல
ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு

புலவனார் வீதி,
கஸ்தியங்காடு,
(குயின்ஸ் மரக்காலை) (97984)

சு.மயில்வாகனம் (அவுஸ்ரேலியா)
(ஓய்வு பெற்ற கூட்டுறவு பரிசோதகர்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 16 - 12 - 1969



விண்ணில் 21 - 04 - 2009

### அமரர் ஜெயச்சந்திரன் ஜெயவதனா (குட்டியா)

திதி: ஏகாதசி

அன்று உயிர் வாழ்வோமென தப்பி
ஆழியிலே படகினிலே பயணித்த போது
காலனவன் உன்னைக்
கவர்வானென்று யார் நினைத்தது
துடிதுடித்து என்மடியில் ஆவிபிரிகையில்
அனலாகித் துடித்த என் நெஞ்சம்
ஆறிடும் நாள் எப்போது
அன்பான மழலைக்கு அம்மாவும் நான் ஆகிறேன்


அன்னாரின் முதலாம் ஆண்டு பிரார்த்தனைகள் இன்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும். மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சம்பியன்பத்தை,
ஊறணி, வல்வெட்டித்துறை.
தொ.பே.: 0770783457 (97989)

ஜெயச்சந்திரன்
(ஜெயராம் - கணவர்),
குமார் - மகன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 - 02 - 1956



உதிர்வு 20 - 04 - 2009

### அருளப்பு டொன்பொஸ்கோ (ரவி)

திதி: 09.05.2010

எம் அருமை அப்பாவே!
அன்பு பாசத்துடன் எம்மை வளர்த்து
வாழ்வில் சிறப்புற வாழ்ந்து பண்பாளன் என
ஊர் போற்ற வாழ்ந்த எங்கள் அப்பாவே!
ஆண்டொன்று சென்றாலும் என்றும் மாறாது
உங்கள் பசுமையான நினைவுகள்.

நி.முகவரி:
நாரந்தனை வட மேற்கு,
ஊர்காவற்றுறை.

த.முகவரி:
பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை. (96603)

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி,
பிள்ளைகள்-
நிஷுஜா, சஜீபன்.

## வல்லை நெசவு ஆலை புனரமைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 9

வல்லை நெசவு ஆலையை புனரமைத்து செயற்படவைப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு 15 ஆம் கட்டை, உடுப்பிட்டியிலுள்ள பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் குறித்த நெசவு ஆலைக்கு காணிகளை நன்கொடை செய்தவர்களையும் நெசவு ஆலைப் புனரமைப்பில் அக்கறை உள்ளவர்களையும் கலந்துகொள்ளுமாறு உடுப்பிட்டி நலன் புரிச் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (1-10)

## ஆளுநர் - சுகாதார அதிகாரிகள் சந்திப்பு இன்று மு.ப. 11 மணிக்கு

யாழ்ப்பாணம், மே 9

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனத் தலைவர்களுக்கும் மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் இடையிலான சந்திப்பு இன்று முற்பகல் 11 மணிக்கு சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இச் சந்திப்பு பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது என்று சுகாதாரப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், மே 9

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் மாபெரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு மாதனை கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அருகிலுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளன.

விளையாட்டுக்கழகத் தலைவர் எஸ்.பி. விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்துகொள்வார். இறுதிப் போட்டியாக ஐந்து ஓவர்கொண்ட போட்டியில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் எதிர் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக்கழகமும், 15 ஓவர்கொண்ட போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் மந்திகை உதய சூரியன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (1-10)

## மாணவனைக் காணவில்லை என நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணம் சென்ற 14 வயது மாணவன் வீடு திரும்பவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவனான இன்பராசா தர்சிகன் என்பவரே காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், மே 09

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் சமாதான நிகழ்ச்சித் திட்டத்தினால் ''உன்னில் மலரும் சமாதானம்'' எனும் பாடல் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு இன்று மு.ப. 10 மணிக்கு பிரதான வீதியிலுள்ள கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கியூடெக் - கரித்தாஸ் நிறுவன யாழ். மாவட்ட இயக்குநர் சி.ஜீ. ஜெயகுமார் அடிகள் சிறப்பு விருந்தினராகவும், சூரியன் எவ்.எம். சிரேஷ்ட அறிவிப்பாளர் எஸ். முகுந்தன் பிரதம விருந்தினராகவும் கலந்துகொள்வர். (04)


THE ROYAL COLLEGE OF JAFFNA
3 மாதங்களில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில.
By: நு.விக்கினேஸ்வரன் ஆசிரி
426 (302) கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
பிலாக் வீதி, சங்கானை. தொ.பே.: 0776751649

German Language
German, Swiss மொழி வகுப்புகள்
தமிழ் மொழி பெயர்ப்புடன்.
தொடர்பு: 10, Palaly Road,
Jaffna.
தொ.பே.: 0771604823

திருமண சேவை



# விற்பனையாளர்கள் தேவை


யாழ். நகரில் இயங்கும் பான்சிக்கடைகளுக்கு விற்பனை அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. மாநகரசபை எல்லைக் குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

மொடேன் ஸ்ரைல்ஸ் (பான்சி),
35, 36, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம். (97980)

S.S.தரன் பான்சி,
37, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணகம் 25 - 10 - 1972



விண்ணகம் 20 - 04 - 2009

### அமரர் மயில்வாகனம் கருணாகரன்

திதி: ஏகாதசி (09.05.2010)

பிறப்பதற்கும் இறப்பதற்கும் நடுவிலே மனம்பெரிய பெரிய கனவு கண்டது. இடைவிலே எத்தனை எத்தனை கனவுகள் கண்டு வாழ்ந்தோம். மாஷாக்குட்டியே இப்படி ஒரு இழப்பு எமக்கு வரும் என்று கனவில் கூட நினைக்கவில்லையே
வசந்தம் வீசிய எம் வீட்டில் புயல் காற்று
வீசி அடித்து நொறுக்கி விட்டதே - நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடிப்போனாலும்
காலங்கள் பல கடந்தாலும் நீங்கள் விட்டுப்போன
பாசக் கடல் என்றும் எம்மை விட்டு நீங்காது.

இல.334, கோயில் வீதி,
நல்லூர். (97985)

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

### திருமதி கோவிந்தராசா இராஜலட்சுமி (மாமி)



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், 16/2, நாவலடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தராசா இராஜலட்சுமி நேற்று (08.05.2010) சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தராசாவின் அன்பு மனைவியும், நாகேந்திரன் (வவுனியா), கௌரிதேவி (திருகோணமலை), நாகதேவி (திருகோணமலை), இராஜேந்திரன், மதிவதனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயலட்சுமி, மகேந்திரன், உமாமகேஸ்வரன், அகல்யா, அஜந்தன் ஆகியோரின் மாமியாரும், பிரதீபா, நிரோசன், துவாரகா, பிரவீன், கௌரிஆனந், சுவர்ணா, பிருந்தா, ரேகன், கோபிகா, மயூரன், தர்சினி, மேனகா, ரேணுகா, ரோகிதன், நிஷாந்தன், ஹிஸ்ணமீரா, சதுஸ்ரிகா, திஷனி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், லுக்ஷிகா, பிரதீஸ், கனிஸ்கா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 16/2, நாவலடி ஒழுங்கை, வண்ணார்பண்ணையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/2, நாவலடி ஒழுங்கை,
வண் .-மேற்கு,
யாழ்ப்பாணம். (97986)

தகவல்: N. அஜந்தன்
(அஜன் மிசின் கட்டிங்)
மருமகன்.

### மாணிக்கம் இராஜேஸ்வரன்

(உரிமையாளர், வேல்முருகன் வணிக நிலையம்,
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்)



எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நல்லூர், 50, மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இராஜேஸ்வரன் (02.05.2010) ஞாயிற்றுக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் அன்னம்மா தம்பதியினரின் அருமை மகனும், பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லத்துரை-மாணிக்கம் தம்பதியினரின் மூத்த மருமகனும், மகேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி, ஞானேஸ்வரி, புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், டினோஷியா (கனடா), ஜிந்துயா, நிரோஷியா, தினேஸ், துசிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைநாயகம் (கனடா), கனகரத்தினம், தர்மேஸ்வரன், ஆனந்தராஜா (லண்டன்), பாக்கியராஜா (பிரான்ஸ்), வசந்தி (சுவிஸ்), சுகந்தி (பிரான்ஸ்), ரவீச்சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், விஜயகுமார் (பிரான்ஸ்), தயாபரன் (சுவிஸ்), கலைவாணி (சுவிஸ்), வக்சலா (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும், சுதாகரன் (கனடா), சசிகரன் (இந்தியா), பிரபாகரன் (கனடா), பபிகரன் (கனடா), ஜனகரன் (கனடா), மைதிலி (கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் சிவகுமார், சஜந்தினி, ராஜீவன், ரகுணன் (அமெரிக்கா), தர்சிகா (லண்டன்), தர்ஷனா (லண்டன்), தர்மிளா (லண்டன்), தர்சாயினி (லண்டன்), கரிசன் (சுவிஸ்), ஹர்சித் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தசீதா (சுவிஸ்), தசீதன் (சுவிஸ்), தனுஷன் (சுவிஸ்), தஜீவன் (சுவிஸ்), சசிகரன் (பிரான்ஸ்), ரேணுகா (பிரான்ஸ்), அருண் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும், ஷர்மி (கனடா) யின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2010) மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50, மருதடி வீதி,
நல்லூர். (97951)

தகவல் :
பாக்கியலட்சுமி (மனைவி)
மற்றும் பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூதாகரமாக எழுந்துள்ள புறச்சூழலை மறந்து தம்மைத் தாமே சீரழிக்கும் எங்களின் இளசுகள்!

கடத்தல், கப்பம் கோரல் போன்ற அதிரவைக்கும் சம்பவங்களால் குடாநாட்டின் ஒட்டுமொத்த மக்களும் உறைந்து போய் வீடுகளுக்குள் ஒடுங்கிக் கிடக்கின்ற சமகாலத்தில் இன்னொரு வகையான முகத்தையும் நம்முடைய இளைய தலைமுறையினரிடையே காண முடிகிறது.

சம்பவம் - 1

இரண்டு கல்லூரிகளின் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான மாபெரும் போட்டிக்காக இருதரப்பு ரசிகர்களும் ஆயத்த ஆரவாரங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இதன்போது பாடசாலைக் கொடிகளைக் கொண்டு தங்களை அலங்கரித்தவாறு பவனிவந்த சில மாணவர்கள் முக்கியமான சந்திகளில் நின்று தாரை தப்பட்டைகள் முழங்க, பட்டையைக் கிளப்பும் நடனங்களை நிகழ்த்தினர். வீதியால் பயணிப்போரைப் பற்றியோ, தமது நடவடிக்கைகளால் ஏற்கனவே சந்தடிமிக்க தெருவில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு பொதுமக்கள் அந்தரிப்பதைப் பற்றியோ எவ்வித அக்கறையும் கொள்ளாது அவர்களது நடனம் அவர்கள் பாட்டுக்கு நடந்தேறிக்கொண்டிருந்தது. போதாக்குறைக்கு பயணிகளை 'அடைந்துகொண்டு' யாழ்.நகரை நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்களை நடுவீதியில் நிறுத்தி தம்முடைய நடனத்தை முடித்தபின்னரே' அவற்றினை தொடர்ந்து நகர அனுமதிக்கவும் செய்தனர். இதைவிட, பெரியளவிலான பாடசாலைக் கொடிகளை பின்பக்கச்சேலை போல கழுத்திலே கட்டியிருந்த அந்த மாணவர்கள் சிலரது உதடுகளிலிருந்து வளையம் வளையமாக சிகரட் புகை வெளியேறிக்கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் இத்தகைய கொண்டாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவர்களுக்கு கிட்டச் சென்ற ஒருவர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு, மாணவர்களின் தூஷணை வசைமாரியால் அர்ச்சிக்கப்பட்டு தப்பினோம் பிழைத்தோம் என்று அவர் ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்பின்னரும் மாணவர்கள் யாழ்ப்பாணத்தின் யதார்த்தம் பற்றிய அக்கறைகளை குழிதோண்டிப் புதைத்து விட்டு நடுவீதியில் நின்று ஆனந்தக் கூத்தாடத் தொடங்கினர்.

சம்பவம் - 2

இடம் - யாழ்ப்பாணத்தில் அதிகளவு உல்லாசப் பயணிகள் கூடுகின்ற அழகிய கடற்கரை.

தென்னிலங்கைப் பயணிகளும், உள்ளூர்ப் பயணிகளும் கடற்கரை முழுதும் குவிந்திருக்கிறார்கள். வார இறுதி நாள் என்பதால் வழமையைவிட அதிகளவான பயணிகள் கடலில் நீந்தி மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். நேரம் செல்லச் செல்ல நீந்துவதில் இருந்த நாட்டம் குறைந்து குளிர்ந்த கடற்கரையோரமாக மரங்களின் கீழே சிறு சிறு குழுக்களாக அமரும் நம்மூர் இளைஞர்கள் தாங்கள் கொண்டுவந்த 'அயிட்டங்களை' வெளியே எடுத்து 'கிளாசில்' வார்த்து வயிற்றுக்குள்ளே செலுத்தத் தொடங்கினர். கொஞ்சநேரத்துக்குள்ளேயே அந்த இடம் ஒரு மதுபானசாலை போலவே மாறிவிட்டது. அந்தளவுக்கு மதுவின் நெடியும், வெறிக்கூச்சலும், வாந்தியெடுப்புகளும் அந்தக் கடற்கரையை ஆக்கிரமிக்கத் தொடங்கின. மது தன் வேலையைக் காட்டத் தொடங்க அரை நிர்வாணமாக 'வெக்க துக்கங்களையெல்லாம்' தூர எறிந்துவிட்டு ஆபாசச் சைகைகளோடு ஆடத் தொடங்கினர் யாழ்ப்பாணத்து இளைஞர்கள்.

ஆட்டத்தின் இடையிடையே தங்களுடைய நண்பர்கள் மகிழ்வதற்காக கடற்கரையோரமாக அமர்ந்திருந்த யுவதிகளோடு எல்லைமீறிய சொற்பிரயோகங்களையும், சேஷ்டைகளையும் அவர்கள் விடத் தவறவில்லை. அவர்களது இத்தகைய 'கூத்தடிக்கும்' செயற்பாடுகளை நண்பர்களும் பெரும் குரல் வைத்து ஊக்கப்படுத்திக் கொண்டிருந்தனர். 'கலாசாரம், பண்பாடு என்பனவெல்லாம் இறுக்கமாக பேணப்படும் இடமென்றுதான் யாழ்ப்பாணத்தை அறிந்திருந்தோம். ஆனால் இங்கு பார்த்தால் கொழும்பைவிடவும் யாழ்ப்பாணத்து இளசுகளின் செயற்பாடுகள் படுமோசமாகத்தான் இருக்கிறது' என்று இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஒரு தென்னிலங்கைப் பயணி அருகில் நின்றவரிடம் சிலாகித்துக்கொண்டார்.

மேற்குறித்த இரு சம்பவங்களும் ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்கிற ரீதியில் ஒருசில - நாம்சந்தித்த - உதாரணங்கள் மட்டுமே. இத்தகைய பண்பாட்டை, ஒழுக்கவியலை மீறுகின்ற சம்பவங்கள் தாராளமாக குடாநாட்டின் எல்லாப்பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. இத்தகைய சம்பவங்களை தமது மகிழ்வினை இளைஞர்கள் வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்துகிறார்கள் என்று நாங்கள் சாதாரணமாக எடுத்துக்கொள்வதால் அதையே சாக்காக வைத்து தம்முடைய வக்கிர எண்ணங்களுக்கும் இளைஞர்கள் வடிவம் கொடுத்து விடுகிறார்கள். நாளடைவில் சேஷ்டைகள் புரிதல், மது அருந்துதல், தூஷணை வார்த்தை பேசுதல் என்பவற்றை ஒரு நல்ல காரியம் நடைபெறும்போது கட்டாயம் செய்வதுதான் நாகரீகம் என்ற தவறான கருத்தியல் இளைஞர்களிடையே வலுப்பெற்று விடுகின்றது. இதனால் சம்பந்தம் எதுவும் இல்லாதுவிட்டாலும்கூட வீதியால் சென்றுவருவோரிடம் வீண்வம்பு பேசுதல், அவர்களை மல்லுக்கிழுத்தல் போன்ற செயற்பாடுகளில் இளைஞர் குழுக்கள் வலிந்து ஈடுபட்டுவருகின்றனர்.

நகரப் பகுதிகளில் தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்புகள் முடிவடையும் நேரம்வரை புத்தம்புதிய மோட்டார் சைக்கிள்களில் காத்திருக்கும் இளைஞர்கள், வகுப்புக்கள் முடிவடைந்து பஸ்நிலையம் நோக்கிச் செல்கின்ற மாணவிகளிடையே வளைந்து வளைந்து, மோட்டார் சைக்கிளை லாவகமாக வெட்டி, சாகசம் காட்டி தம்முடைய 'ஹீரோத்தனத்தை' நிரூபிக்கும் குடாநாட்டு காளையர்களை நீங்கள் எப்போதும் சர்வசாதாரணமாகக் காண முடியும். இவ்வாறு மங்கையர் கூட்டத்துக்குள்ளே மோட்டார் சைக்கிளில் புகுந்து விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்களைப் பார்த்து ''பார்த்தீங்களே! வெளிநாட்டுக்காசு எப்படியெல்லாம் புகுந்து விளையாடுதெண்டு!'' என்று நக்கலாகத் தனக்குத்தானே சொன்னார் வயதான ஒருவர். சிறிது நேரத்தில் அவ்விடத்தை விட்டு அவர் அகலமுற்பட்டபோது, பெண்களை 'பிராக்கு' பார்த்துக்கொண்டு வந்த ருசியில் அந்த வயதானவரின் சைக்கிளில் உரசியபடி மோட்டார் சைக்கிளை நிறுத்தினார்கள் இளைஞர்கள். தலையில் ஹெல்மெட்கூட இல்லை. அவர்கள் வந்த திசையும் தவறு. ஆனாலும் தங்களுடைய தவறை அவர்கள் உணர்ந்துகொள்ளாமல் ''கிழடு! உனக்கு பார்த்துவரத் தெரியாதோ?'' என்று அவருடைய வயதையும் மதிக்காமல் சரமாரியாகத் திட்டத் தொடங்கிவிட்டார்கள். பாவம் கிழவர்! ஒன்றும் பேசாமல் அங்கிருந்து அகன்றுவிட்டார். அவர் வாய்பேசா மௌனியாக அகன்றமைக்கு குறித்த இளைஞர்கள் அணிந்திருந்த படையினரின் சீருடைகளை ஒத்த ஆடைகளும் ஒரு காரணம் எனலாம்.

இவ்வாறு படையினரைப் போலவே 'வெளிக்கிட்டு' சந்திகளில் நின்று, நடப்புக் காட்டும் இளைஞர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. யுத்தம் நிகழ்ந்துகொண்டிருந்த காலத்தில் படையினரைத் தவிர வேறெவரும் அதுபோன்ற சீருடைகளை அணிந்தால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ஆனாலும் போர் ஓய்வுக்கு வந்தபின்னர் அந்த நிலை தளர்வடைந்தமையால் இப்போது இளைஞர்கள் பலரும் இராணுவச் சீருடையை ஒத்த 'டிசைன்களில்' ஆடைகளை அணியத் தொடங்கிவிட்டனர். இதனால் குறித்த இளைஞர்களை முன்பின் தெரியாதவர்கள் இராணுவத்தினர் என்றே கருதிவிடுகின்ற நிலையும் ஏற்படுகின்றது. இதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சிற்சில அத்துமீறல் செயற்பாடுகளில் இளைஞர்கள் - இராணுவச் சீருடைபோல் உடை அணிந்த இளசுகள் - இறங்குகின்றனர். இராணுவத்தினர்தான் சிவிலில் வந்திருக்கிறார்கள் என்று பொதுமக்களும் அவர்களின் அத்துமீறல்களை கண்டிக்க முடியாமல் அகன்று விடுகின்றனர்.

இதுபோலவே கட்டுமீறிச் செல்லும் யாழ்.இளைஞர்களின் முறையற்ற செயற்பாடுகளை பல்வேறு ஊடகங்களும் பலதடவைகள் எத்தனையோ வழிகளில் சொல்லிவிட்டன.

பலரும் சொல்வதைப் போல இத்தகைய இளைஞர்களின் அட்டகாசங்கள் எல்லாவற்றுக்குமே இளைஞர்களை மட்டுமே குற்றஞ்சொல்ல முடியாது. அவர்களுக்கு கிரியா ஊக்கிகளாக - அவர்கள் செய்வதை கண்டும் காணாமல் இருக்கின்ற - பெரியவர்களும், பொலிஸாரும், படையினரும்கூட இளைஞர்களின் அத்துமீறல்களுக்கு ஒருவகையில் கார்ணிகள்தான். சாதாரணமாக வீதியில் பயணிக்கும்போது ஹெல்மெட் அணியாவிட்டால் படங்களில்வருவதுபோல எங்கிருந்தோ பறந்துவந்து தண்டப்பணத்தை அறவிடுவதில் காட்டும் அக்கறையை, வீதிகளில் நின்று சண்டித்தனம் புரிகின்ற - குழுக்களாக மோட்டார் சைக்கிள்களில் சீறித்திரிகின்ற - இளைஞர்களை கட்டுப்படுத்துவதிலும் காட்ட முனைய வேண்டும். அதுபோலவே இராணுவத்தினர் தவிர்ந்த ஏனையோர் இராணுவச் சீருடையின் சாயலை ஒத்த ஆடைகளை அணிவதைத் தடுக்கும் முயற்சிகளிலும் படையினர் ஈடுபடவேண்டும். இவையெல்லாவற்றுக்கும் மேலாக தமது பிள்ளைகள் மீது எப்போதும் ஒரு கண் வைத்து, அவர்களை இந்த சமூகத்தில் அக்கறை கொண்டவர்களாக உருவாக்குவதில் பெற்றோர் சிறுவயதில் இருந்தே சரியான அடித்தளத்தை இட வேண்டும். அப்படியெல்லாம் ஒரு அதிசயம் நிகழ்ந்தால் மட்டுமே யாழ்.இளைஞர்களைக் காப்பாற்ற முடியும்.

- ஔண்யன்


அக்ஷய திருதியை தங்கத் திருநாள்



மே 16 ஞாயிறு

தங்கம் வாங்குவதற்கு சிறந்த நாள்

இத்தினத்தில் எம்மிடம் தங்கம் வாங்கும்உங்களுக்காக விசேட விலைக்கழிவுகளும் பரிசுப்பொருள்களும் வழங்கப்படும்.

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

ஜூவல் பிளாசா

91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



Oxford College INTERNATIONAL

Join our highly regarded courses in

Health and Social Care
NVQ Levels 2-4

Business Management
NQF Levels 3-5

Travel Tourism and Hospitality
NQF Levels 3-5

Accounting
CIMA and ACCA

Computing and IT
NQF Levels 3-5

Spot Admissions- In-Take July 2010 and Sep 2010
Walk in Interviews
Monday 10th May 2010, 3pm - 7pm

small fees - BIG RESULTS!

Please call...

0773846911 / 0773691913

www.oxfordcollegeinternational.com
oci@clct.co.uk




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேவை

பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு வேலை ஆள்கள் தேவை.

* கணக்காளர்
* கணக்குப் பதிவாளர்
* விற்பனை உதவியாளர்

தொடர்பு:
சிற்றி ஹார்ட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (97948)

## கார் விற்பனைக்கு

முற்றிலும் குளிரூட்டப்பட்ட நல்ல நிலையிலுள்ள Toyota Corona-18 கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 4910336 (சி/567437)

## UK விஸா பெறுவதற்கான கலந்துரையாடல்

தற்போது U.K. Student Visa வில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய மாற்றங்கள் பற்றிய இலவச கருத்தரங்கு விரைவில் கொழும்பு வெள்ளவத்தையில் நடைபெறவுள்ளது.
இக்கருத்தரங்கில் கிடைக்கக் கூடிய நன்மைகள்
1) Visa விற்கு பிற்பாடு முழு பணமும் பெறப்படும்.
2) Basic English Knowledge இருந்தால் மட்டும் போதும்.
3) Sponser வசதி செய்து கொடுக்கப்படும்.
உடன் போக விரும்புவோர் முற்பதிவு செய்யவும்.
மேலதிக விபரங்களுக்கு :
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்
Land Line - 0113040749
Mobile Number - 0777667386


## நன்றி நவிலல்

தோற்றம் 05 * 10 * 1921



உதிர்வு 22 * 03 * 2010

### அமரர் வேலுப்பிள்ளை செல்வநாயகம்

கடந்த (22.03.2010) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி, தந்தி, தபால் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் 21.04.2010 அன்று நடைபெற்ற அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கேற்றோருக்கும், 25.04.2010 அன்று வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் கோயிலில் நடைபெற்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் எம்முடன் ஒன்றி நின்று அனைத்து வழிகளிலும் உதவிகளை நல்கிய அன்பு உள்ளங்களுக்கும் எம் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மூளாய்வீதி, வட்டுக்கோட்டை. குடும்பத்தினர். (92242)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், UK இல் இருந்து தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள 31 வயது, மூலம் நட்சத்திரம், 6அடி உயரமுள்ள மணமகனிற்கு மணமகள் தேவை.
விபரம் இல.4015 c/o உதயன், 361,கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (97232)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - ஆரியகுளம், ஆனைப்பந்திக்கு இடையில், வர்த்தக நிலையமான ஸ்ரான்லி வீதி, வேம்படி மத்திய கல்லூரி, வங்கிகள், யாழ். புகையிரத நிலையம், பெரிய ஆஸ்பத்திரிக்கு அண்மையாக, அப்பலோ ஆஸ்பத்திரிக்கு அருகில், பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கை, 82/2, இலக்கமுடைய இரு வழிப்பாதை கொண்ட 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு, Hotel, International School ஆகியவற்றுக்கு உகந்தது.
தொடர்பு - 0777777870, 011-2527428 (சி/567350)

## கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும்

இதோ யாழ்.மாவட்டத்தின் முதன் முதலாக தமிழ் மொழி மூலம் சந்தைப் படுத்தல் துறையில் ஒரு நாள் கருத்தரங்கும் பயிற்சிப்பட்டறையும் (ONE DAY WORK SHOP & SEMINAR ON MARKETING) கொழும்பிலிருந்து வரும் விரிவுரையாளரினால் நடத்தப்படும் O/L, A/L படித்தோர், தொழில் புரிவோர், தொழிலொன்றை எதிர் பார்த்திருப்போர் Marketing துறையை மேலும் அறிய விரும்புவோர் அனைவருக்குமானது பயிற்சியின் முடிவில் சான்றிதழும் தொழில் தேவைப்படுவோருக்கு பகுதி / முழு நேர தொழில் Marketing துறையில் வழங்கப்படும். பயிற்சிக்கான கட்டணம் 2000 ரூபா (பகலுணவு, தேநீர் வழங்கப்படும்) பங்குபெற விரும்புவோர் 24-05-2010 இற்கு முன்பு பதிவு செய்து கொள்ளவும்.
மேலும் தொழில் வழங்குனர்கள் எம்மோடு தொடர்பு கொண்டு தொழிலாளர்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :
CLARET INSTITUTE OF HIGHER STUDIES
No: 772,Point Pedro Road, Nallur, Jaffna
T.P : 021-3206360 (சி/567349)

## மெக்கானிக் தேவை

சீனாவில் உற்பத்தி செய்யப்படும் புதிய ரக வாகனங்களை யாழ்ப்பாணத்தில் திருத்துவதற்கும், சுத்திகரிப்பு(Service) செய்வதற்கும் மெக்கானிக் தேவை. சுராஜ்காரர்களும் தொடர்பு கொள்ளலாம்.
The Manager
Midland Riora Traders
65,New Pradeepa Mawatha
Maligawatta,Colombo -10 (97843)


## ஊடகக் கற்கைநெறி தொடர்பான இலவச கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம்,மே 9

'சிகரம்' ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் ஊடகக் கற்கைநெறி தொடர்பாக விளக்கமளிக்கும் இலவச கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊடகக் கற்கை நெறியின் முக்கியத்துவம் மற்றும் கற்கைநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவும் இந்த ஊடகக் கற்கை நெறியைத் தொடர்வதன் மூலம் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கிடைக்கக்கூடிய தொழில் வாய்ப்புக்கள் பற்றியும் இந்தக் கருத்தரங்குகளில் விளக்கமளிக்கப்படவிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

ஊடகக்கல்வி தொடர்பாக முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள இந்த விசேட கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என்று சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நிரந்தர அரச உத்தியோகம் உடைய, 1974 ஆம் ஆண்டு பிறந்த, உத்தரம் 2ஆம் பாதம் (கன்னி), 2இல் செவ்வாய் உடைய மணமகனுக்கு படித்த அழகிய மணமகளைத் தேடுகின்றோம்.
தொடர்புகளுக்கு: 077 0871827 (97884)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை செல்வி செ.சிவாஜினி அவர்களின் அன்புப் பேரனார்

சின்னத்தம்பி மகாலிங்கம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ குடமியன் அ.த.க. பாடசாலை
வரணி.
(சி/567493)


## மணமகன் தேவை

கொக்குவில், இந்து உயர்குல, 1985 நவம்பர், உத்தரம் 2ஆம் பாதம், 4இல் செவ்வாய், பாவம் 2,3 சுற்று பாவம் 29,உயரம் 5' 4'' படித்த, நல்ல அழகிய, நற்பண்புகள் உள்ள பெண்ணிற்கு எதுவித தீய பழக்கங்களும் அற்ற நற்பண்புகள் உள்ள 1980 இற்குப் பின் பிறந்த Doctor, Engineer, Accountant அல்லது Graduate அழகிய வரனை யாழ்.மாவட்டத்தில் எதிர்பார்க்கிறோம். படிப்புக் கேற்ற சீதனம் வழங்கப்படும்.
தொடர்பு - 0773965245 (97721)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தாயின் மடியில் 04 * 04 * 1942



ஆண்டவன் அடியில் 09 * 04 * 2010

### அமரர் முத்தையா கந்தசாமி

கடந்த 09.04.2010 அன்று வவுனியாவில் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(ரொசான் கேக் சென்ரர் ரூபன்) தகவல்:
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. குடும்பத்தினர். (97820)

## நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 22 * 09 * 1925



உதிர்வு 30 * 03 * 2010

### திருமதி அன்னலட்சுமி இராசநாயகம்

எங்கள் குடும்பத் தலைவியாகவும் குலவிளக்காகவும்
இருந்து உற்றாரை, உறவை, ஊரைப் பேணி - எங்கள்
சொத்தாக இருந்தாய் அம்மாவே! நித்திலத்தில்
வித்தாகிப் போன பின்னும் எம் மனதில்
விருட்சமாக வாழ்வாய் வேருன்றி.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல கும்பளாவளை விநாயகரை வேண்டி நிற்கிறோம். இன்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை எமது 'இராஜபவனம்' இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி தெற்கு, அளவெட்டி. பிரிவால் துயருறும்: குடும்பத்தினர். (97838)


## வாகன விற்பனை



யாழ் வாழ் மக்களுக்கு ஒரு நற்செய்தி உலகில் பிரசித்தி பெற்ற சீனாவில் உற்பத்தி செய்யப்படும் புத்தம் புதிய யூஜின் (Yuejin) வாகனத்தை உங்களது வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கும் வருமான அதிகரிப்பிற்கும் ஏற்றவகையில் குடும்பத்துடன் நேரில் சென்று பார்வையிடுவதற்கும் கொள்வனவு செய்வதற்கும் இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்பவர்களான

மிட்லன்ட் ரியோரா ட்ரேடர்ஸ்
Midland Riora Traders இன்

யாழ் விநியோகஸ்தரை நாடுங்கள்
ப்(B)ளு ஸ்கை ஏஜென்சி Blue Skyy Agency
இல 320, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
தொ.இல 021 5670011, 0714252443

உங்களுக்குத் தேவையான ரிப்பர் (Tipper) கன்ரர் (Truck) பொடி (Body) அனைத்தும் எம்மிடம் கிடைக்கும்

பலவிதமான ரகங்களில் யூஜின் வாகனங்களை வாங்கும் உங்களுக்கு கீழ் கண்ட சேவைகள் இலவசமாக கிடைக்கும்

01. இலவசமாக வாகனங்கள் பதிவு செய்தல்.
02. ஓராண்டு அல்லது 30,000 கி.மி. உத்தரவாதம்.
03. விற்பனைக்குப் பின் முதல் மூன்று சேர்விஸ்களும் (Service) இலவசம். (உதிரிப்பாகங்கள் உட்பட)
04. நாடளாவிய ரீதியில் இலங்கை பூராகவும் கிளைகள்.
05. நாடளாவிய ரீதியில் இலகுவாக கிடைக்கும் உதிரிப்பாகங்கள்.
06. தொழில்நுட்ப ஆலோசனை இலவசம்.
07. பழைய வாகனங்கள் மாற்றம் செய்யப்படும்.
08. லீசிங் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.



Conditions Apply

மேலும் விபரங்களுக்கு :
ப்ளு ஸ்கை ஏஜென்சி இல. 320, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொ.இல. 021 5670011 / 071 4252443
Blue Skyy Agency No.320, Stanly Road, Jaffna. Tel: 021 5670011 / 071 4252443. (50)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறைசார் ஆற்றல்கள் அனுபவங்களால் ஆளுமை மிகுந்து மிளிரும் ஆசிரியம் பழம்

ஆசிரியராக, அதிபராக, ஓவியராக, கவிஞராக, கணித விற்பன்னராக, சஞ்சிகையொன்றின் பிரதம ஆசிரியராக எனப் பல்வேறு தளங்களில் ஆளுமை மிக்க ஒருவராக 89 வயதிலும் இன்றும் தமிழ்ப் பணிபுரிந்து வருகின்றார் சின்னத்தம்பி சிவசாமி.

இத்தகைய பல்வேறு ஆளுமைத் தளங்களில் நின்று தளராது இன்று அளப்பரும் சேவை புரிந்து வருகின்ற எஸ். சிவசாமி அவர்கள் கொழும்பிலிருந்து வந்து கடந்த ஒரு வாரகாலமாக யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் உள்ள தமது உறவினர் வீட்டில் தங்கியுள்ளார்.

முதுமையிலும் பெருமைக்குரியவராக மிளிர்ந்து கொண்டிருக்கும் அந்தப்பெரியவரின் கருத்துக்களையும் அனுபவங்களையும் உதயன் வாசகர்களுக்கு வழங்கும் நோக்குடன் அவரை அவர் தங்கியிருக்கும் அவரது உறவினருடைய வீட்டில் சந்தித்தோம்.

அங்கு சென்றதும் ஆச்சரியம் எமக்குள்ளே இழையோடியது. இந்த 89 வயதிலும் இந்த அளவுக்குத் திடகாத்திரமாக - சுகதேகியாக இருக்கிறாரே என்பதே எமது அந்த ஆச்சரியத்துக்குக் காரணம். அது மட்டுமல்ல அவர் எம்மை வரவேற்ற விதம், தமிழ்க் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அவர் அணிந்திருந்த உடை என்பவை கூட எமக்கு வியப்பை ஏற்படுத்தின.

தன்னுடைய பல்துறைசார் சேவைகளுக்குக் கிடைத்த வெகுமதிகளை ஆவணமாகச் சேகரித்து வைத்துள்ள விதம், அவற்றை எமக்கு அச்சொட்டாக வாசித்துக் காட்டிய விதம் என எல்லாமே வியக்கத்தக்கதாகவே அமைந்திருந்தன.

ஒரு கடந்தகால அனுபவப் புத்தகம் எனக் கூறத்தக்க அவருடனான எமது கலந்துரையாடல் கேள்வி பதில் ரூபத்தில் இங்கு தரப்படுகிறது.

கேள்வி: வணக்கம்! ஐயா உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்?

பதில்: ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பினைச் சொந்த இடமாகக் கொண்ட நான் எனது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரியில் பயின் றேன்.

அங்கு உயர் கல்வியையும் நிறைவு செய்து, பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரியராகப் பயிற்றுவிக்கப்பட்டேன். பின்னர் 1945ஆம் ஆண்டு கொழும்பு சென்று அங்கே குடும்பத்தினருடன் தங்கிவிட்டேன்.

கொழும்பில் ஆசிரியராகப் பணி புரிந்த காலத்தில் கொழும்பு தமிழர் ஆசிரிய சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினேன். அந்தப் பணியை நான் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெறும்வரை மேற்கொண்டேன்.

எனது 57வயது வரையான ஆசிரிய சேவையில் குறுகிய காலம் கொழும்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்றேன்.

பின்னர் கொள்ளுப்பிட்டி சென். தோமஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரியுமாறு கேட்டுக் கொண்டதற்கமைய எனது 75ஆவது வயது வரை அங்கு பணிபுரிந்தேன்

அங்கு 'ரியூசன்' நடத்தினேன். ஏராளமான மாணவர்கள் வந்து படிப்பார்கள். ஒரு பாடமல்ல, கணிதம், விஞ்ஞானம், தமிழ் எனப் பல பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்பித்தேன்.

**யோகர் சுவாமிகள் தாலி எடுத்துத் தர மனையாளுக்குக் கட்டினேன்**

நான் படிக்கின்ற காலத்தில் கொழும்புத்துறையில் வாழ்ந்த யோகர் சுவாமிகளை அடிக்கடி கண்டு தரிசனம் பெற்றுக்கொள்வேன்.

என்னுடைய ஆசி என்றைக்கும் உனக்கு இருக்குமென்று அடிக்கடி யோகர் சுவாமி சொல்லிக்கொள்வார்.

எனது திருமணத்தின் போதுகூட யோகர் சுவாமியின் ஆச்சிரமத்தில் அவரது கையால் 'தாலி எடுத்துத்தர, தாலிகட்டினேன். அத்தகைய நிகழ்வினை எனது வாழ்நாளில் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

**கவிஞரும் சஞ்சிகை ஆசிரியரும்**

கே: உங்கள் இலக்கியத் துறை சார் பணிகள் பற்றிக் குறிப்பிடுங்களேன்?

ப: என்னைப் பொறுத்தவரை தமிழ் அன்னையை நான் என்றுமே என் இரு கண்களாகவே கருதுகின்றேன்.


அந்த வகையில் பல தமிழ்க் கவிதைகளை எழுதியுள்ளேன். அத்துடன் பல பாடல்களையும் எழுதியுள்ளேன்.(தாம் எழுதிய கவிதைகளை எடுத்து கணீர் என்ற குரலில் வாசித்துக் காட்டினார். அவர் இந்த வயதிலும் வாசிக்கும் விதம், உச்சரிப்புத் தன்மை, அவரது கவிதைகளில் உள்ள சொல்நயம், கவிநயம் எல்லாமே எம்மை மெய்சிலிர்க்க வைத்தன).

இத்தனைக்கும் மேலாக 1960ஆம் ஆண்டு ''வானம்பாடி'' என்ற மாதாந்த சஞ்சிகையொன்றை ஆரம்பித்தேன். சுமார் 5 மாதங்கள்தான் அந்தச் சஞ்சிகை வெளிவந்தது. பின்னர் எனக்குண்டான அதிகூடுதலான வேலைப்பளு காரணமாக அப்பணி தடைப்பட்டது.

ஆனால் அந்தச் சஞ்சிகையின் வரவு கண்டு இலக்கியத் துறைசார்ந்த பலரும் பாராட்டினார்கள்.

முதல் முதலாக ''வானம்பாடி'' வெளி வந்தபோது அதில் தமிழ் மக்களின் அரசியல் பிதா என்று சொல்லுமளவுக்கு உயர்நிலையில் இருந்த தந்தை செல்வாவின் வாழ்த்துரை இடம்பெற்றிருந்ததை இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்.

அந்தக் காலகட்டத்தில் இந்தியாவில் வாழ்ந்த அறிஞர் அண்ணாத்துரை,



சுத்தானந்த பாரதி எனப் பல்வேறு தரப்பினர் ''வானம்பாடி'' சஞ்சிகைக்கு தமது ஆக்க பூர்வமான விமர்சனங்களை எழுதியிருந்தனர்.

கே: கணித்துறையில் அதிக ஈடுபாடு உங்களிடம் உள்ளதாக அறிந்தோம். அதுபற்றிச் சொல்லுங்களேன்?

**விடைகண்டு பிடிக்க முடியாத கலைக்களஞ்சியக் கணக்குகளுக்குப் பதில் எழுதினேன்**

ப: எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் கணக்குப் புதிர்களைச் செய்து பார்ப்பேன்.

1956 ஆம் ஆண்டு வெளியான 'கலைக்களஞ்சியம்' என்ற தொகுப்பு நூலின் மூன்றாம், நான்காம் பாகங்களில் புகழ்பெற்ற மூன்று கணக்குகள் என்ற தலைப்பில் (பக்கம் 139, 457) கிரேக்க காலத்தில் இருந்த கணித நிபுணர்களைக் கவர்ந்த மூன்று கணக்குகள் இடம் பெற்றிருந்தன. அத்துடன் அவற்றுக்கு எவராலும் விடை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது.

1.கொடுத்துள்ள ஒரு கன சதுரத்தைப் போல இரண்டு மடங்கு கன வளவுள்ள மற்றொரு கன சதுரத்தைப் போல இரண்டு மடங்கு கனவளவுள்ள மற்றொரு கன சதுரத்தை உண்டாக்கல்.

2. கொடுத்துள்ள ஒரு கோணத்தை மூன்று சமபாகங்களாக வெட்டுதல்.

3. ஒரு வட்டத்தின் பரப்பளவிற்குச் சமமான பரப்புள்ள ஒரு சதுரம் வரைதல்.

இந்த மூன்று கணக்குகளையும் வடிவ கணிதத்தின் மூலம் நேர்கோடுகளையும் வட்டங்களையும் பயன்படுத்தி அதாவது யூக்கிளிற்றின் வடிவ கணிதத்தைப் பின்பற்றி வரைய வேண்டும்.

பலநூற்றாண்டுகளாக முயன்றும் முடியவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அடிக்கோலையும், கொம்பாசையுமே பயன்படுத்தி மேற்கூறப்பட்ட கணக்குகளுக்கு விடை காண்பது இயலாத காரியம் என்று அறிவோம். முதல் இரண்டையும் வேறு கருவிகளின் உதவியைக் கொண்டு செய்ய முடியும் எனக் களஞ்சியம் தொகுதி மூன்றாம் பாகம், பக்கம் 139இல் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மூன்று கணக்குகளைச் செய்ய முயன்று பார்ப்போம் என்று முயற்சித்தேன். பலன் கிடைத்தது. சரியான செய்முறை விளக்கங்களோடு விடையினைக் கண்டு பிடித்தேன்.

மூன்று கணக்குகளையும் செய்து முடித்துள்ளேன் என்று சரியான விளக்கங்களுடனும், செய்முறைகளுடனும் சென்னைப் பல்கலைக்கழகக் கட்டடத்தில் உள்ள கலைக்களஞ்சியம் தொகுப்புநூல் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளேன்.

இதுவரைக்கும் அங்கிருந்து எந்த விதமான பதிலும் கிடைக்க வில்லை.

1968ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் எண் கணிதம் தொடர்பான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினேன்.

கே: ஓவியத்துறையில் உங்கள் ஈடுபாடு குறித்துக் கூறுங்களேன்?

(20 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவருடன் சேர்ந்து பெற்றோரும் தம்மிடம் பயின்ற காலத்தை நினைவு கூருகிறார் சிவசாமி

சந்திப்பு: கவிநேசன்

---

## காசே தான் கடவுளடா!



இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலகட்டம் அது. இங்கிலாந்தின் பிரதமராகவிருந்த சேர் வின்ஸ்டன் சர்ச்சில், குறிப்பிட்ட ஒரு தினத்தன்று குறிப்பிட்டதொரு நேரத்தில் பி.பி.ஸி வானொலியில் உரை நிகழ்த்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அது குறித்து ஏற்கனவே பி.பி.ஸி வானொலியில் பல தடவைகள் அறிவிப்பு ஒலிபரப்பப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட தினத்தன்று, வானொலியில் நேரடியாக உரையாற்றுவதற்காகச் சர்ச்சில் தமது உதவியாளர் சகிதம் தமது அலுவலகத்தை விட்டு வெளியில் வந்தபோது, எதிரிகள் தரப்பின் விமானக் குண்டு வீச்சுக் காரணமாக தெருவிளக்குகள் யாவும் செயலிழந்து, வீதி இருளில் மூழ்கிக் கிடந்தது.

அந்த இருட்டுக்குள் ஒரு டாக்ஸி வருவதைக் கண்ட சர்ச்சில், அந்த டாக்ஸியை நிறுத்தித் தாம் பி.பி.ஸி வானொலி நிலையத்துக்குச் செல்ல வேண்டியிருப்பதாக டாக்ஸி ஓட்டுநரிடம் தெரிவித்தார்.

ஆனால் சர்ச்சிலை அடையாளம் கண்டு கொள்ளாத அந்த டாக்ஸி ஓட்டுநரோ, ''மன்னிக்க வேண்டும் ஐயா, இன்னமும் சிறிது நேரத்தில் பி.பி.ஸி வானொலியில் சர்ச்சில் பேசப்போகிறார். நான் அவரது அந்தப் பேச்சைக் கேட்டாக வேண்டும். அதற்காக நான் வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். ஆதலால் இப்போது என்னால் உங்களை வானொலி நிலையத்துக்கு ஏற்றிச் செல்ல முடியாதுள்ளது'' எனத் தெரிவித்தார்.

தன் மீதும், தனது பேச்சின் மீதும் அத்துணை மதிப்பும் ஆர்வமும் வைத்திருக்கின்ற அந்த டாக்ஸி ஓட்டுநரைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த சர்ச்சில், அவருக்கு ஏதாவது அன்பளிப்புக் கொடுக்க நினைத்துத் தனது 'கோர்ட்' பையிலிருந்து பத்துப் பவுண் நோட்டொன்றை எடுத்து அந்த டாக்ஸி ஓட்டுநரிடம் நீட்டினார்.

பத்துப் பவுண் பண நோட்டைக் கண்டதும் அந்த டாக்ஸி ஓட்டுநர், ''ஐயா, வண்டியில் ஏறி உட்காருங்கள். சர்ச்சிலின் பேச்சு எப்படியாவது போகட்டும். நான் உங்களை பி.பி.ஸி வானொலி நிலையத்திற்குக் கொண்டு போய் இறக்கி விடுகின்றேன்'' எனக் கூறி டாக்ஸியின் கதவை திறந்து விட்டார்.

இதைக் கேட்டதும் சர்ச்சிலின் மகிழ்ச்சி போன இடம் தெரியவில்லை.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

பிரான்சில் வதிவிடம் பெற்ற, விவாகரத்து முடிந்த, ஆயிலிய நட்சத்திரம், 8இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு, நன்கு படித்த, 30-35 வயதுக்குட்பட்ட, இந்து கௌரவ குருகுலம் குடும்பத்தைச் சேர்ந்த, கிரகபாவம் 8,7 உதயத்து செவ்வாய் உள்ள மணமகள் தேவை. ஐரோப்பாவில் வசிக்கும் மணமகளும் விரும்பத்தக்கது.
தொடர்பு: மின்னஞ்சல் முகவரி
mylyaso@yahoo.fr
தொ.பே: 00330 664749572 (yaso)

## தேவை

வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய களஞ்சியமும் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளரும், சாரதியும் தேவை. விரும்பியவர்கள் விண்ணப்பிக்கலாம். அல்லது திங்கள் (10.05.2010) மு.ப 10 மணிக்கு நேரில் சமுகம்தரவும்.
தொடர்பு:
**Siva Brothers**
*205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
*(நடன முருகன் முன்பாக)*

## தேவை

கொழும்பில் வசிக்கும் இளம் தம்பதிகளுக்கு குழந்தை பராமரிப்புக்கும், வீட்டு உதவியாளராகவும் இருக்கவிரும்பும் ஒரு பெண் தேவை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**பணிப்பாளர்,**
**சென்றல் நேசிங் ஹோம்,**
**350, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

## FINANCIAL SPONSORSHIP

**UK, USA, CANADA, NEW ZELAND AND ALL COUNTRIES**

மேலே உள்ள நாடுகளுக்கு
*Student Visa, Tourist Visa,*
அனைத்துவிதமான
விசாக்களுக்குமான *Sponsorship*
உத்தரவாதத்துடன் ஒரே நாளில்
செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: **0777 492434**


# KalaiMagal International College

## ஆங்கில மொழி மூல முழுநேரப் பாடசாலை

- ★ சிறந்த ஆங்கிலமொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- ★ சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு.
- ★ பிரத்தியேக சீருடை.
- ★ சாதாரண மக்கள் முகம்கொடுக்கக்கூடிய மிகக்குறைந்த அளவு கட்டண வசதி
- ★ தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழி மூலமும் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் கற்பிக்கும் கல்விக் கொள்கை.
- ★ அரச பாடசாலைகளின் நேரசூசி அமைப்பு.
- ★ விளையாட்டு கலை, கலாசார நிகழ்வுகளை கல்வி சார் செயற்பாடுகளாக உள்வாங்கும் கல்விக் கொள்கை.
- ★ மாணவர்களை உற்சாகப்படுத்தும் வருடாந்த பரிசளிப்பும் கலைவிழாக்களும்.

மொன்ரசறி முதல் க.பொ.த. (உ/த) வரை வகுப்புகளை தன்னகத்தே கொண்ட எம் கல்லூரியின் சிறப்பம்சங்கள்.

**எமது கல்லூரியில் உங்கள் பிள்ளைகளையும் இணைத்துப் பயன்பெற விரும்பின் எமது கல்லூரியின் கீழ்வரும் கிளைகளோடு தொடர்புகொள்ளவும்.**



வளாக வீதி,
திருநெல்வேலி.
(பல்கலைக்கழக பின் பகுதி மக்கள் வங்கிக்கு அருகில்)

56/A, நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.
(கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

மேலதிக விவரங்களுக்குஅழைப்பை மேற்கொள்ளவேண்டிய இலக்கங்கள்

0212222773, 0774904286,
0778834592, 0772487071

## இரத்ததான முகாம் வல்வையில்

யாழ். போதனா வைத்தியசாலையின் நடமாடும் இரத்த வங்கிப் பிரிவின் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் சிகிச்சை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினதும் செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளையினதும் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த முகாமில் தன்னார்வமுள்ளோரை இரத்ததானம் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (6)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி முருகேசு செல்லாச்சி



தோற்றம்
04.02.1940

மறைவு
13.05.2007

திதி: ஏகாதசி (09.05.2010)

தீராத வேதனையால்
தினந்தினம் துடிக்கிறோம்
மாறாத சோகத்தில்
மூவாண்டு கழிந்ததம்மா
வேராக நீங்களிருந்த எம்
குடும்பம் இன்று
உங்கள் ஆத்மா
சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றது.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (97945)

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)

தோற்றம்
23.05.1921

மறைவு
09.05.2002

காலத்தால் அழியாத காவியம் போல்-எங்கள்
காலத்திலும் நீங்கள் நீங்காத காவியம்
என்றென்றும்.

274, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

ராகுலன் (அம்பி-Swiss),
கங்காரதன் ராகினி (அம்மணி).

# UNIVERSITY OF EAST LONDON

UEL University of East London www.uel.ac.uk

## Top Modern University in London

*Special Merit Scholarships For Sri Lankan Students*

- Architecture, Art & Design
- BEng Civil Engineering
- BSc Construction Management
- BEng Electrical & Electronic Engineering
- BSc Software Engineering
- BSc Computer Networks
- BSc Multimedia
- BSc Pharmacology
- Media & Digital Arts
- BSc Sport and Exercise Science
- BA Early Childhood Studies
- BA English Literature
- BA Business Management
- BA Accounting & Finance
- BA Finance, Money & Banking
- BA International Tourism Management
- BA Sociology
- BA Social Work Studies
- BA Special Education Needs
- MA TESOL (Teaching English for Speakers of Other Languages)
- MA English Language Teaching
- MA Refugee Studies
- MSc NGO & Development Mgt
- LLM General
- LLB
- MSc Civil Engineering
- MSc Information Security
- MSc Information Technology
- MSc Mobile Communications
- MSc Computer Systems Engineering
- MSc International Marketing
- MSc Financial Management
- MSc Project Management
- BSc/MSc Biomedical Sciences
- MSc Biotechnology
- BSc/MSc Toxicology
- BSc/MSc Public Health
- BSc/MSc Psychology
- BSc/MSc Health Promotion
- BSc Health Services Management
- MSc Molecular & Biomedical Immunology
- MSc Bioinformatics
- MSc Molecular Medical Microbiology
- MSc International Accounting & Finance
- MBA Masters in Business Administration
- BA/MA International Human Resource Mgt.

**September 2010 Intake**

*Over 220 Undergraduate and Postgraduate programmes available visit www.uel.ac.uk*

**LOHOS TOPS 350 STUDENTS**

*Over the last 6 years Mr Loho has successfully counselled, guided and placed more than 350 students to U.K. Universities*

- Advanced entry for students with CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA and other recognised qualifications
- G.C.E. A/L students can apply pending results
- Students having good O/L's / other qualifications / related work Experience may be considered for entry
- Students who are unable to complete their university studies may also apply

Meet Mr. LOHO✓ LOHOS GROUP
Please call Sri Lanka Representative's Office for more details
Lucky Plaza Building, 4 / 7, 4th Floor,
St. Anthony's Mawatha, Kollupitiya. Tel : 2577768 / 0777 917929
E-mail : lohosgroup@sltnet.lk / lohosgroup@yahoo.com
www.lohosgroup.com

HELPLINE CALL LOHO 0777 917929

**An UEL Academic will visit Lohos Group Office on 14th May and SPOT OFFERS will be given to suitably qualified students**

தமிழில் தொடர்புகளுக்கு : Dr. இந்திராணி - Tel : 0773-498660

**FREE ADVICE + FREE VISA GUIDANCE**
**All our services are FREE**
**BRITISH COUNCIL APPROVED IELTS TEST CENTRE**

## ஸ்கிரீன் பிரிண்டிங் பாவனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்

SCREEN PRINTING CONSUMABLES AND EQUIPMENT

ஸ்கிரீன் பிரிண்டிங் பாவனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கு மிகச் சிறந்த ஒரு இடத்தை தேடுகிறீர்களா?

### "நெலூஸ் சோர்ஸ் வன்"

Nelu's Source One

இலங்கையின் முதல் தர ஸ்கிரீன் பிரிண்டிங் வழங்கல்

ஸ்கிரீன் துணிவகைகள், கலர் க்ரோமா (ஸ்கிறீன் பிரிண்டிங் தீந்தை) ஸ்குயிஜீஸ் (squeegees), புடவை அச்சிடும் தீந்தை, ,Autotype (UK) நிறுவனத்தால் காட்சிப்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களும் பிளிம்களும், ஸ்கிரீன் பிரிண்டிங் இயந்திரங்களும் மற்றும் பல வகைகளும்.

- **விற்பனையாளர் வலைப்பின்னல்**

எங்களுடைய விற்பனையாளர் வலைப்பின்னல் காரணமாக விசேடமாக வடக்கு, கிழக்கு விற்பனையாளர்களை எல்லா விபரங்களுடனும் கீழுள்ள முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**மேலதிக விபரங்களுக்கு சமல் ஹின்தெனிய என்பவரை 0777373631 தொலைபேசி மூலம் தொடர்பு கொள்க.**

- **ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சித் திட்டம்**
  2 நாள் பயிற்சித் திட்டமும் உண்டு



Nelu's Advertising Services (Pvt) Ltd.
188, High Level Road,
Nugegoda.
Tel : 0112852820

Nelu's

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி அகலிப்பும் இயற்கை எமக்கு ஈந்த மரங்களும்-

# தண்ணீர் விட்டா வளர்த்தோம் கண்ணீர் விட்டு அழுவதற்கு ?

இன்று யாழ்ப்பாணம் - பருத்தித்துறை விதியில் (AB-20) செல்லும் அனைவரின்தும் மனதை உறுத்தும் தலைப்பே இதுவாகும். கடந்த சில மாதங்களாக ''வீதி அபிவிருத்தி'' என்று ஆரம்பிக்கப்பட்ட ''நாகரிக'' வேலையால் இன்று பலிக்கடாக்களாக்கிக் கொண்டிருக்கும் பல நூற்றாண்டுகள் தொன்மை வாய்ந்த மரங்களின் அவல நிலையை எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். ஒரு நாட்டுக்கு அபிவிருத்தி தேவையா என்ற கேள்வி எழும்போது; ''தேவைதான்'' என்பதற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. இதே போன்று அபிவிருத்திக்கு அகலமான வீதி தேவையா என்று கேட்டாலும் ''தேவைப் படலாம்'' என்றே பதில் கூற வேண்டும். ஆனால் வீதிகள் அகலமாக் கப்படு வதால் மட்டும் அபிவிருத்தி வருவ தில்லை. அபிவிருத்திக்குத் தீர்க்கமான சிந்தனையும் தூரநோக்கும்:வேண்டும்; இருப்பதை அழிக்கும் செயற்பாடு



மந்திகைச் சந்தி

அல்ல.

ஆனால் இன்று யாழ் - பருத்தித்துறை வீதியில் அரங்கேறும் மரக்கொலைகளைக் கண்ணுறும் போது இவ்வாறான அபிவிருத்தி தேவை தானா? இதற்கு மாற்று வழிகள் கிடையாதா? இங்கு இது சம்பந்தமாக முடிவு எடுத்தவர்களுக்கு இதயமும், வரலாற்று அறிவும் கிடையாதா? என்றெல்லாம் எண்ணத்தோன்றுகிறது. ஒன்றா, இரண்டா..... கடந்த பலநூறு வருடங்களாக மிடுக்கோடு நின்று சீறி அடித்த ''நிஷா'' புயலுக்கும் ''எம்மை உன்னால் ஒன்றும் செய்யமுடியாது'' என்று மார்தட்டி பதிலடி கொடுத்த மரங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வெட்டிச் சாய்க்கப்பட்டுக் கொண்டிருக் கிறது. கால் கட்டுப் போட்டமையால் அசையமுடியாது மௌனமாக மரணித்துக் கொண்டிருக்கின்றன இந்த மரங்கள். தன்னை வெட்டுபவனுக்குக் கூட வெய்யில் படக்கூடாது என்று நிழல் கொடுக்கும் மரங்களை வெட்டியழிக்க எவ்வாறு மனம் வருகிறதோ தெரியவில்லை. எத்தனையோ நூற்றாண்டு காலமாக போவோர் வருவோர்க்கெல்லாம் நிழலைக் கொடுத்ததோடு எத்தனையோ பறவைகள், உயிரினங்களுக்கெல்லாம் உறைவிடமும் அளித்து சந்தோசமாக குதூகலித்து இருந்த மரங்கள் எல்லாம் தம்மை யாரும் காப்பாற்ற மாட்டார்களா என்று வடிக்கும் கண்ணீர் யாருக்கும் புலப்படுவதில்லை.

மணிக்கணக்காகப் பேருந்துக்குக் காத்துக் கொண்டிருக்கும் பயணிகளுக்கு நிழலைக் கொடுத்துப் பாதுகாக்க மரங்களின்றி பல பயணிகள் விசனப்படுவதை நான் அவதானித்துள்ளேன். ஆயினும் என்ன பலன்? எடுத்த முடிவுகளை மாற்ற யாருக்கும் அவர்களின் தற்பெருமை இடம் கொடுப்பதில்லை. பொதுநலன் பற்றிய அக்கறையோ அல்லது மற்றவரின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கும் பண்போ எமது கலாசாரத்தில் மருத்துக்கும் கிடையாது. நெடுநாளாகப் பசியுடன் காத்திருந்தது போல மரங் களைப் பாய்ந்து பாய்ந்து வெட்டு வதைப் பார்க்கும் போது சம்பந்தப்பட்ட வர்களுக்கு அதன் மூலம் பெரும் லாபம் கிடைக்கிறதோ என்று கூட சந்தேகப்பட வேண்டியுள்ளது.

சாதாரணமான மரங்களென்றால் கூடப் பொறுத்துவிடலாம். ஆனால் அடையாளச் சின்னமாக நின்ற மரங்கள் கூட ஈவிரக்கமின்றி வெட்டப்படுவதே துக்கமான நிகழ்வாகும். உதாரணமாக புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரிக்கு முன்னால் நின்ற 'மழவராயர்' காலத்து அரசமரம் இன்று இல்லை. வல்லைவெளியில் நின்றிருந்த பத்தடிக்கு மேல் சுற்றளவுடைய பூவரசு மரங்கள் அனைத்தும் இன்று இல்லை. இந்த அளவு பருமனுள்ள பூவரசு மரங்களை நாம் எங்கும் காண முடியாது. உலகளாவிய ரீதியில் இயற்கை மரபுரிமைச் சொத்துக்கள் (Natural Heri tage) எனும் அடிப்படையில் சர்வதேச சட்டங்களும், தேசியச் சட்டங்களும் இவ் வகையிலான ஒரு மண்ணின் தனிச் சிறப் பாக அமையும் தாவர வர்க்கங்களைப் பேணுவது நமக்குத் தெரியுமா?

வல்லைவெளி கடந்து செல்லும் போது நடுவில் உள்ள முனியப்பர் கோயிலுக்கு முன்னாலுள்ள மரமும் விரைவில் வெட்டப் படப்போகிறது.

எத்தனையோ நூற்றாண்டு தொன்மை வாய்ந்த ஆலமரம், வரலாறு தெரிந்த காலங் களிலிருந்தே ''ஆலடி'' என்று அழைக் கப்பட்ட அடையாளச் சின்னம் இன்று இருந்த இடம் தெரியா மல் அழிக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட கரணவாய் மூத்த விநாயகர் கோயில் முன்னால் வீதியின் இருமருங்கிலும் நிற்கும் பாரிய மரங்களும் இப்போது அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன். இம் மரங்கள் வீதியை முற்றாக மூடியபடி வளர்ந்திருந்தன. இதனூடு செல்லும் போது ஒரு பச்சை நிறக் குகையினூடு செல்வது போன்று ரம்மியமாக இருக்கும். இவை எல்லாம் எம் எதிர்காலச் சந்ததிக்கு எதிர்வரும் 200 - 300 ஆண்டுகளுக்கு காணக் கிடைக் காமலே போகப்போகின்றன.

மேலும் மாலுசந்திப் பிள்ளையார் கோயில் வாசலில் நிற்கும் பாரிய மரங் களும், மந்திகை வைத்தியசாலைச் சந்தியில் அணிவகுத்து நிற்கும் நான்கு பாரிய ஆலமரங்கள் கூட மிக விரைவில் வெட்டிச் சாய்க்கப்படவுள்ளன. இவ்வாறே இவ்வீதி வழியே பருத்தித்துறை வரை செல்லும் போது வழியில் நிற்கும் அனைத்து மரங் களுக்குமே அதேகதிதான். இதே போன்றே ஏனைய வீதிகளும் அகலமாக்கப்படும் போது அங்குள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற மரங்களெல்லாம் சாய்க்கப்படவுள்ளன.

இவ்வாறான தீர்க்கமான முடிவை யார் எடுத்தார்கள்? இவ்வாறான முடிவுகளுக்கு முன்னர் பொதுமக்களின் அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டதா? இது பற்றி யாராவது தீர்க்கமாகப் பேசினாலே அவர்களை ஓரங்கட்டிவிடும் செயற்பாடுகளையும் அரச அதிகாரிகள் மேற்கொள்வதாக அறிய முடிகின்றது. முப்பது வருட கொடூரப் போரிலும் தப்பிப் பிழைத்து, சுழன்றடித்த ''நிஷா'' புயலுக்கும் ஈடு கொடுத்த இம் மரங்களை ஈவிரக்கமின்றி வெட்டி சாய்ப்பது எந்தவிதத்தில் ஏற்றுக்கொள்ள முடியும்? இதை ''அபிவிருத்தி'' என்று கூற வெட்கப்பட வேண்டாமா?

கொழும்பு நகருக்குச் சென்று பாருங்கள். எத்தனையிடங்களில் வீதியின் நடுவில் மரங்கள் நிற்கின்றன என்று அவதானியுங்கள். அங்கெல்லாம் அபிவிருத்தி நடை பெற வில்லையா? ஆக இங்கு மட்டும் ஏன் ''அபிவிருத்தி'' என்ற பெயரால் மரங்கள் (பண்டைய கால கட்டடங்கள் உட்பட) வெட்டி விழுத்தப்படு கின்றன? உண் மையிலேயே இந்த வீதி அபிவி ருத்தியைத் திட்டமிடும் போது மரங்களின்

கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடி



இழப்புக்களை தவிர்க்கும். விதத்தில் திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். பெரிய மரங்கள் வரும் போது அவற்றை நடு வில் விட்டு இரு மருங்கிலும் வீதியை அகல மாக்கியிருக்க வேண்டும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மரங்களை எந்த விலை கொடுத்தாவது காப்பாற்றியிருக்க வேண்டும். இப்போது கூட முடிவுகளை மீளாய்வு செய்யலாம். சில இடங்களி லுள்ள 100 வருட ஆயுளுக்கு மேல் கொண்டிருக்கும் மரங்களையாவது கட் டாயமாக வெட்டக்கூடாது என்று முடிவு எடுக்கப்பட வேண்டும்.

இதுவரை நடந்த போரினால் நாம் 30 வருடம் பின்னோக்கிச் சென்று விட்டதாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் இம் மரங்களின் அழிப்புக் களுடன் நாம் 100 வருடங்களுக்கு மேல் பின்னோக்கிச் சென்று விடுவோம் என்பதையும் இங்கு எச்சரிக்கையுடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த மரங்களை நம்பித் தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த உயிரினங்களை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். இம் மரங்களின் இழப்பால் எமது சூழல் எவ்வளவு பாதிப்புக்கு உள்ளாகப் போகின்றது என்பதையும் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

இந்தப் பாரிய மரங்களின் அழிப்புக் களோடு எமக்குக் கிடைக்கும் அபிவிருத்தி தேவைதானா? யாரோ இலவசமாகக் கொடுக்கும் காசு வீணாகிப் போகக் கூடாது, நல்ல முறையில் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவேண்டும் என்

புறாப் பொறுக்கி ஆலடி



பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால் அதற்கு மத்திய - கொள்கை வழிப்பட்ட ஒட்டுமொத்த அபிவிருத்தியோடு சேர்ந்திணைந்த வேலைத் திட்டம் வேண்டும். ''அபிவிருத்தி'' என்று கூறிக்கொண்டு பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த எமது சரித்திரத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் மரங்களை (கட்டடங்களையும் கூட) அழிக்கக் கூடாது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீளவும் ஒருமுறை கூடி இவ்வாறு பாரிய மரங்களை வெட்டிச் சாய்க்காது வீதியை அபிவிருத்தி செய்யலாமா என ஒரு கணம் சிந்திக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் நேர்கோட்டில் அமைந்த நெடுஞ்சாலைகள் எங்கும் இல்லை. எனவே ஒரு பாரிய மரத்தைப் பாதுகாக்க வீதியில் ஒரு வளைவைஉருவாக்குவதொன்றும் பெரிய வேலையுமில்லை.

இக்கட்டுரையில் என்னால் எடுக்கப் பட்ட பல முக்கிய மரங்களின் படங்களையும் கொடுத்துள்ளேன். இவற்றின் அழகைப் பார்த்த பின்னராவது இந்த மரங்களைக் காப்பாற்ற அதிகாரிகள் முன்வருவார்களா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ''முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னவன் வழி வந்தோர் நாம்'' என்று பறைசாற்றிக் கொண்டு இம் மர அழிப்பைப் பார்த்துக்கொண்டிருக் கலாமா? இதைவிட மேலாக, வேலியிலுள்ள மரத்தின் கிளையொன்றை வெட்டிய வர்களையே கோடரியால் வெட்டிக் கொலை செய்யும் யாழ்ப்பாணப் பரம்பரையில் வந்த நாம், மரமொன்று அடியோடு வெட்டிச் சாய்க் கப்படுவதைக் கைகட்டி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாமா?

சற்றுப் பொறுங்கள்! உமக்கு ஏன் தேவையில்லாத வேலை? ''தண்ணீர் விட்டா வளர்த்தாய் கண்ணீர் விட்டு அழுவதற்கு'' என்று கேட்கிறீர்களா? நீங்கள் இப்படிக் கேட்பீர்களென்று தெரிந்துதான் இக்கட்டுரையின் தலைப்பையே அவ்வாறு கொடுத்துள்ளேன்.

அதிகாரிகளே! விரிவாக இக்கட்டுரையை பொறுமையாக வாசித்துப் படங்களையும் பாருங்கள். அடுத்த கூட்டத்தில் இவ் வாறான அபிவிருத்தி தேவைதானா என்று ஒரு கணம் விரிவாக விவாதியுங்கள்.

எல்லாவற்றுக்கும் மாற்று வழியுண்டு. மாற்று வழியில்லாத திட்டங்களே கிடையாது. தற்கொலைக் குண்டுதாரி ஒருவரை அனுப்பும் போதும் தப்புவதற்கு மாற்று வழியொன்றைத் திட்டமிட்டே அனுப்புவதாக அறிந்திருப்பீர்கள். அவ்வாறிருக்க பாதையை அகலப்படுத்துவதற்கு மட்டும் மாற்றுவழி கிடையாதா, என்ன....? வீதி அமைப்பதென்பது இத்தனை சதுர அடியும், இத்தனை அடி நீளமும் உள்ள ஒரு பாதையை ஆக்குதல் என் பது மட்டுமல்ல. அது ஒரு நில உருவாக்கமும் ஆகும். எனவே இக்கட்டுரையைப் படித்த பின்னராவது எஞ்சியிருக்கும் மரங்களையாவது பாதுகாக்க யாராவது முன்வருவார்களா என்ற ஆதங்கத்துடன் இக் கட்டுரையை முடிக்கிறேன்.



கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர், பௌதீகவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்குஸ்தானின் மருத்துவக் குணங்கள்

மலேசியா, மியான்மர், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் அதிகம் விளைகின்ற பழம் தான் மங்குஸ்தான். தென்னிந்தியாவில் மலைப் பகுதியில் தோட்டப் பயிராக இதனை வளர்க்கின்றனர். தென் அமெரிக்க நாடுகள், பிலிப்பைன்ஸ் நாடுகளிலும் கிடைக்கின்றது.

மங்குஸ்தான் பழம் மலைப் பகுதிகளில் விளையக்கூடியவை. இது மாதுளம் பழத்தைப் போன்ற தோற்றத்தில் இருக்கும். இந்தப்பழத்தின் தோல் பகுதி தடிப்பாக இருக்கும்.

இப்பழத்தின் தோல் பகுதியை உடைத்தால் மூன்று அல்லது நான்கு சுளைகள் இருக்கும். சுளைகள் இளஞ்சிவப்பு, வெள்ளை நிறத்தில் இருக்கும். இதற்கு சூலம்புளி என்ற பெயரும் உண்டு.

இதை தென்கிழக்கு ஆசியநாடுகளில் பழங்காலத்தில் தோல், பற்களின் ஈறுநோய்களுக்கும், பல்வலி, தொற்றுநோய் கிருமிகளையும் காளான்களையும் அழிக்க பயன்படுத்தினர். அதே போல் காயங்கள், நாட்பட்ட புண்கள், காய்சல், இரத்தம் கலந்த வயிற்று போக்கு, உடல் மற்றும் மன சோர்வு, மன அழுத்தம், கவலை போன்றவற்றைக் குணமாக்கப் பயன் படுத்தி வந்தனர்.

சமீபத்தில் வீக்கம் குறைக்கவும், புற்றுநோய் எதிர்ப்பு சக்தி, வயதாவதை நிதானப்படுத்தவும், தோல்களின் சுருக்கத்தை குறைக்கவும், பக்றீரியா , வைரஸுக்கு எதிர்ப்பாகவும் பயன்படுகிறது.

சீதபேதி, இரத்தக் கழிச்சல் உள்ளவர்களுக்கு மங்குஸ்தான் பழத்தின் மேல் தோலை சுட்டு அல்லது பச்சையாக அரைத்து அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் சீதபேதி உடனே குணமாகும். உடல் சூட்டைத் தணித்து தேகத்தை சமநிலையில் வைத்திருக்கும். வயிற்றுவலியைக் குணப்படுத்தும் தன்மை இதற்கு உண்டு. கண் எரிச்சலைப் போக்க கணனியில் வேலை செய்பவருக்கு பொதுவாக கண்கள் வறட்சி அடைந்து கண் எரிச்சலை உண்டாக்கும். இதனால் சிலர் தலைவலி, கழுத்து வலி என அவதிக்குள்ளாவார்கள். இவர்கள் மங்குஸ்தான் பழம் சாப்பிட்டு வந்தால் கண் எரிச்சல் நீங்கி, கண் நரம்புகள் புத்துணர்வு பெறும். வாய் துர்நாற்றம் நீங்க, வயிற்றில் புண் இருந்தால் வாயில் புண் ஏற்படும். இதனால் வாய் துர்நாற்றம் வீசும், மேலும் உண்ணும் உணவுப் பொருள்கள் பல் இடுக்குகளில் தங்கி விடுகின்றன. இதனால் உண்டாகும் கிருமிகளால் வாய் துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும். மங்குஸ்தான் பழத்தை நன்கு சுவைத்து சாப்பிட்டு, அல்லது அதன் தோலை காயவைத்து பொடி செய்து தேன்கலந்து சாப்பிட்டு வந்தால் வாய் துர்நாற்றம் நீங்கும். மூலநோயை குணப்படுத்த நாம் உண்ணும் உணவானது செரிமானம் ஆகாமல் அசீரணக் கோளாறு ஏற்பட்டு அதனால் வாயு சீற்றமாகி கீழ் நோக்கி மூலப் பகுதியை பாதிக்கிறது. இதனால்மூலத்தில் புண் ஏற்படுகிறது. மூலநோய் விரைவில் குணமாக எளிதில் சீரணமாகக் கூடிய உணவுகளை உண்பது நல்லது. அதோடு மங்குஸ்தான் பழத்தை சாப்பிட்டு வந்தால் மூலநோயால் ஏற்பட்ட பாதிப்புகள் குறையும்.



**பெண்களுக்கு**

மாதவிலக்கு காலங்களில் பெண்களுக்கு ஏற்படும் அதிக இரத்தப் போக்கை குறைக்க மங்குஸ்தான் பழத்தை வாங்கி சாப்பிடுவது நல்லது. அல்லது மங்குஸ்தான் பழத்தின் தோலை காய வைத்து பொடிசெய்து பாலில் கலந்து மங்குஸ்தான் தேநீர் செய்து சாப்பிட்டு வந்தால் அதிக இரத்தப் போக்கு குறையும். சிறுநீர் நன்கு வெளியேறினால் தான் உடலில் தங்கியுள்ள தேவையற்ற அசுத்த நீர் வெளியேறும். சிறுநீர் நன்கு வெளியேற மங்குஸ்தான் பழம் சிறந்த மருந்தாகும்.

அதுமட்டுமல்லாமல் இருமலை தடுக்கும், சூதக வலியை குணமாக்கும், தலைவலியை போக்கும், நாவறட்சியை தணிக்கும்.

மங்குஸ்தான் பழத்தில்
நீர் (ஈரப்பதம்)- 83.9 கிராம்
கொழுப்பு -0.1 கிராம்
புரதம் - 0.4 கிராம்
மாவுப் பொருள் - 14.8 கிராம்
பாஸ்பரஸ் - 15 மி.கி.
இரும்புச் சத்து - 0.2 மி.கி

மங்குஸ்தீன் தேநீர்: இதன் தோல் பாகத்தை இயற்கையான முறையில் காயவைத்து செய்யப்படுவதுதான் இந்த மங்குஸ்தீன் தேநீர். இந்த தேநீர் குடிப்பதனால் 35-40 வயதுக்கு மேல் முகத்தில் விழும் சுருக்கம் தவிர்க்கப்படும்.





புதிய பாடத்திட்டம் 2010

சமுத்திரா புத்தக வெளியீட்டர்களால்

திறமையான ஆசிரியர்களினால் வெளியிடப்பட்ட




- English Model Papers Grade 5 — More Practice - Also Available in Grade 3 & 4 / S.F.R.A. Cader
- English Model Papers Grade 6 — More Practice / Piyasiri Baddevithana
- Mathematics Grade 8 - Workbook — Also Available in Sinhala & Tamil Mediums (in print) Nilmini Abeydeera / Padmini Abeydeera
- கணிதம் தரம் 9 – செயல்நூல் — Also Available in Sinhala & English Mediums Nilmini Abeydeera / Padmini Abeydeera
- Supplementary Class Workbook Grade 8 / Sarath Piyadigamage
- English Language Model Questions Papers - More Practice / Sarath Silva
- A Guide To Prescribed Drama For G.C.E. (O/L) Examination / Sarath Silva
- A Guide To Prescribed Poetry For G.C.E. (O/L) Examination / Sarath Silva

சமுத்திரா புத்தகசாலை, இல. 8/2, மீகிறு வீதி, குருணாகலை, 037-2234446
சமுத்திரா புக் கியூரியோ, இல. 25/27, புத்தலம் வீதி, குருணாகலை, 037-2231240
சமுத்திரா புத்தகசாலை, இல. 269, பேராதெனிய வீதி, கண்டி, 081-2226516
சமுத்திரா புத்தகசாலை, இல. 1141, மருதானை வீதி, கொழும்பு 08, 011-2671951

இலங்கையில் உள்ள சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

Contact : 0718696096, 0722136711





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தண்ணீர் தண்ணீர்

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 148



1970துகளில் ஈழத்து இலக்கியத் துறையில் தன்னை இணைத்துக் கொண்ட க. சின்னராஜன் வடமராட்சி, அல்வாய் கிராமத்தைச் சேர்ந்தவர். புதுக்கவிதை, மரபுக்கவிதை, சிறுகதை, நாடகம் ஆகிய துறைகளில் இவர் எழுதிய ஆக்கங்களில் சில பரிசில்களையும் தட்டிச் சென்றுள்ளன.

இவரது ஆக்கங்கள் வீரகேசரி, முரசொலி, ஈழமுரசு போன்ற பத்திரிகைகளிலும் கீரன் சஞ்சிகை மற்றும் உயிர்ப்புக்கள் சிறுகதைத் தொகுதி என்பவற்றிலும் இடம் பெற்றுள்ளன. ''சர்வோதயன்' என்ற புனைபெயரிலும் எழுதியுள்ளார். இவர் ஒரு வங்கியாளராகப் பணிபுரிந்தவர்.

வார முரசொலி பத்திரிகையில் வெளியான இவரது 'தண்ணீர் தண்ணீர்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

வாடைக் காற்று வீசுகின்ற மழைக்காலம். பகற் பொழுதில் கூட சூரியக் கதிர்களை காண்பதே அரிதாய்க் கிடந்தது. கருமேகக் கூட்டங்கள் முகவரியில்லாக் கடிதங்கள் போல் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தன. ஈரப் பதனைச் சுமந்து கொண்டு வீசிய குளிர் காற்றால் தேகம் 'ஜில்' என்று உறைந்து நடுங்கியது.

சில கணப்பொழுதுகள் கடந்து முடிவதற்குள் மழை 'சோ' எனப் பொழியத் தொடங்கி விட்டது. நீண்டு வளர்ந்து கறுத்துச் செழித்திருந்த பனை மரங்கள் யாவும் தாவரவியல் பனம் தோப்பாய்க் காட்சி தந்தன. இடையிடையே வீசிய பேய்க்காற்று சுழன்று சுழன்று மூர்க்கமாய் மரங்களுடன் மோதிச் சென்றது. இதன் தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாத கங்கு மட்டைகள், கொக்கரைகள், காவோலைகள் யாவும் பனைகளிலிருந்து பொலு பொலுவென்று விழுந்து கொண்டிருந்தன. அவற்றினை விறகுக்காகப் பொறுக்குவதில் மழையையும் பொருட்படுத்தாமல் பலர் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். நேரம் செல்லச் செல்ல மழையின் வேகம் குறைந்து, தூவானம் சொட்டுச் சொட்டாகப் பன்னீர் தெளிப்பதாய்த் தெரிந்தது. இதுவரை வீட்டுக்குள் அடங்கிக் கிடந்த பலர் வானத்தை பார்த்து விட்டுத் தத்தம் வேலை வெட்டிகளைக் கவனிக்க தொடங்கலாயினர். நீண்ட நேரமாகத் தலை வாசலுக்குள் 'வன்ன'ப்பாயொன்றை இழைத்துக் கொண்டிருந்த ரதி, அதை முடித்துவிட்ட மனக் களிப்பில் பாயைச் சுற்றிப் பரணில் பக்குவமாய் வைத்து விட்டு அடுக்களை பக்கமாய் நடந்தாள்.

'மளார்' என்ற ஒரு சத்தம் திடீரென்று கேட்க, ரதி முற்றத்தை திரும்பிப் பார்த்தாள். கங்கு மட்டைகள், கொக்கரைகள், காவோலைகள் இவைகளையெல்லாம் சேர்த்துக் கட்டிய சுமையொன்றை முற்றத்தில் போட்டு விட்டு கனகம்மா திண்ணைக்கு வருவது தெரிகிறது.

''பிள்ளை ரதி, கொஞ்சம் தேத்தண்ணி வையுங்கோ...!'' ''ஓமணை அம்மா, நான் தேத்தண்ணி தான் வைக்கப்போறன்.''

ரதி கேற்றிலைத் தூக்கி அடுப்பில் வைத்து விட்டு மூடிக்கிடந்த தண்ணீர்க் குடத்தைத் திறந்தாள். அவளுக்கு எதிர்பாராத ஏமாற்றம். குடம் நீரின்றி வெறுமையாகக் கிடந்தது. அவளது முகத்தில் சோகத்தின் ரேகைகள் படர்ந்தன.

'பாவம் அம்மா, ஈர விறகைச் சுமந்து கொண்டு வந்து களைச்சுப்போனா. அவவுக்கு தேத்தண்ணி போட ஒரு கோப்பை தண்ணி கூட இல்லையே' என்று மனதுள் வேதனைப்பட்டுக் கொண்ட ரதி, ''அம்மா, நல்ல தண்ணி முடிஞ்சு போச்சணை. நான் போய் அள்ளிக் கொண்டு கெதியா வரட்டே..?''

''பிள்ள, இந்த மழைக்காலத்தில் நீ எங்க போய்த் தண்ணி அள்ளுவாய் உனக்கு இப்ப இடங்கள் தெரியாது. பேசாமல் சும்மா இரு பிள்ள.'' கனகம்மாவுக்கு மகள் ரதியை விட்டுத் தண்ணீர் அள்ள விருப்பமில்லை. முன்பெல்லாம் ரதி சிறு பிள்ளையாய் இருந்த போது பக்கத்து வீட்டுப் பெண்களுடன் சென்று தண்ணீர் அள்ளிக் கொண்டு வருவாள். ஆனால் அவள் இப்ப மட்டும் சில வருடங்களாகத் தண்ணீருக்குப் போவதைக் கனகம்மா தடை செய்து விட்டாள்.

ரதி வயதுக்கு வந்து விட்டாள். ''அம்மா, நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ...! இப்ப எல்லாரும் தண்ணிக்குப் போறவை தானே. நானும் எங்கட தங்கா, வாணி மச்சாளவையோடை போட்டு வாறன்'' என்று ஒருவகைத் துணிச்சலுடன் கூறி விட்டுத் தண்ணீர்க் குடத்தைக் கையில் எடுத்தாள்.

''அம்மா , போட்டுவாறன்.'' ''ம்..'' -கன கம்மா விருப்பமின்றி விடை கொடுத்தாள். அவளது மனதுக்குள் எத்தனையோ எண்ணங்களெல்லாம் அசைபோட்டு அசை போட்டு மறைந்து கொண்டிருந்தன. கனகம்மா குடும்பமும் அவளது சமூகத்தினரும் மிக நீண்ட காலத்திலிருந்தே இங்கு நன்னீர் வளமற்ற பிரதேசங்களிலே குடியேற்றப்பட்டு வாழ்ந்து வந்தமையாலேயே இந்த நிலை இன்றும் நிலைத்து நின்று வருகிறது.

நாற்பது, ஐம்பது அடி வரைக்கும் கிணறு தோண்டினாலும் நன்னீர் பெறுவது முயற்கொம்பே. தண்ணீர் ஒரே சவராக இருக்கும். தாயிடம் விடை பெற்ற ரதி குடத்தை அலாக்காகத் தூக்கி இடையில் வைத்துக் கொண்டு விரைவாக நடந்தாள். அவள் பனம் தோப்பினூடாக வகிடு பிரித்திருந்த பாதையில் நடந்து வாணியின் வீட்டுப் படலையடிக்கு வந்து சேர்ந்தாள். ''வாணி மச்சாள்..!''- ரதியின் குரலில் நாணத்தின் சாயல் இழையோடியது. ''யார் ரதியே...!? வாங்கோ வாங்கோ...! ஏன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிளாஸ்ரிக் உலகப் பிரம்மாக்கள்!

''ஐயா ஒரு நல்ல Package''
''தம்பி, என்னெட்டை Phone இருக்கு!''
''வீணாய்க் காசு செலவழிக்கிறியள்
இந்த package ஐ எடுங்கோ
ஆயிரம் நிமிஷம் Free!''

''அம்மா,இந்த mop
இயக்க எளிதானது
நின்று பிடிக்கும்
ஒன்று எடுங்கோவன்!''

''இந்த Torch ஐப் பாருங்கோ
ஒருக்கா charge சிலை போட்டா
ஆறு மணித்தியாலம் எரியும்.
ஐந்நூறு ரூபாதான்!
உங்களுக்கு நூறு ரூபா கழிவு''

ரைகட்டிக் கொண்டு
படலை திறந்து
கேட்டுக் கேள்வி இல்லாமல்
நம் அந்தரங்கத்துக்குள்ளும்
அரும் பொழுதுக்குள்ளும்
அத்து மீறும்
பிளாஸ்ரிக் உலகப்
பிரமதேவர்களே!

Phone இல்லாமல்
மின்சாரம் இல்லாமல்
பற்றறி இல்லாமல்
பத்துப் பதினைஞ்சு வருஷம்
வாழ்ந்தது இந்தக் கட்டை!

ரை கட்டுவோரை
வியத்தலும் இலமே
வேட்டியை இகழ்தல்
அதனிலும் இலமே!
*************

சோ. பத்மநாதன்

# யார் கொல் இச் சொல்லின் செல்வன்?

இலக்கியக் காட்சி 40

பர்ணசாலையில் சீதையைக் காணாது, அவளைத் தேடிச் சென்ற இராமனும் இலக்குவனும் இராவணன் சீதையைக் கவர்ந்து கொண்டு தென்திசை நோக்கிச் செல்கிறான் என்ற சேதியை 'ஜடாயு' மூலம் தெரிந்து கொள்கின்றனர். தொடர்ந்தும் அவர்கள் சீதையைத் தேடிச் செல்கையில் கபந்தன் என்ற அரக்கன் இவர்களை எதிர்த்தபோது அவனைக் கொன்று அவனது உடலை எரியூட்டுகின்றனர். இராமனால் சாப விமோசனம் பெற்ற அந்த அரக்கன், பம்பா நதிப் பிரதேசத்துக்குச் சென்று அங்கு ரிச்யமுக மலையில் வசித்து வரும் சுக்கிரீவனைச் சந்தித்து அவனது நட்பைப் பெற்றால் உங்களது முயற்சி கைகூடும் எனக் கூறுகிறான்.

சீதையின் பிரிவால் துயரக் கடலில் மூழ்கியிருக்கும் தன் அண்ணன் இராமனை அழைத்துக் கொண்டு ரிச்யமுக மலைக்குச் சென்ற இலக்குமணன் சுக்கிரீவனைக் காண்கிறான்.

தனது அண்ணன் வாலியால் துரத்தப் பெற்றுத் தனது மந்திரியாகிய அனுமனோடு அம்மலையில் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சுக்கிரீவன் இந்த இராஜ குமாரர்களைக் கண்டு அஞ்சி, அனுமனிடம் யோசனை செய்கிறான்.

வாலி, மாறு வேடம் அணிந்து தன்னைக் கொல்ல வந்திருக்கிறானோ என எண்ணிய சுக்கிரீவன், இதனை ஆராயுமாறு அனுமனை ஏவுகின்றான். அங்கே வந்திருப்பவர்கள் வாலியோ அன்றி அவனது நண்பர்களோ அல்லர் என்று அனுமானித்த அனுமன், இராம இலக்குமணர் இருக்கும் இடத்துக்குச் சென்று தேவர்களைப் போல விளங்கும் நீவீர் எதற்காக இந்தக் கஷ்டமான வனத்துக்கு வந்தீர்கள்? நீங்கள் யார்? உங்கள் பராக்கிரமம் சொல்லாமலே விளங்குகிறது; பெரிய இராச்சியத்தை ஆள வேண்டிய நீங்கள் சடையும் மரவுரியும் தரித்த தவ வேடமும் வில்லும் அம்பும் கொண்ட போர் வேடமும் பூண்டிருக்கிறீர்களே' என்று வினவிய அனுமன்,

''இங்கே, சுக்கிரீவன் என்கின்ற வானரராஜன் தன் அண்ணன் வாலியால் துரத்தப்பெற்று அலைந்து மறைந்து வாழ்கின்றான்; நான் அவனது மந்திரி, என் பெயர் அனுமன்; வாயுபுத்திரன்; பிராமண சந்நியாசி போல நான் இப்பொழுது வந்திருக்கிறேன்'' என்று பணிவுடன் சொல்லி நிற்கின்றான். இவ்வாறு சொல்லி நிற்கும் அனுமனின் பேச்சையும் பேச்சின் அழகையும், உண்மைத் தன்மையையும் கண்டு, அவனிடத்தில் முழு நம்பிக்கை கொண்ட இராமன் தனது தம்பி இலக்குமணனை நோக்கி,

**''இல்லாத உலகத்தெங்கும் ஈங்கிவன் இசைகள் கூரக்**
**கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி**
**சொல்லாலே தோன்றிற்று அன்றே! யார்கொல் இச்சொல்லின் செல்வன்?**
**வில்லாதோர் இளையவீர! விரிஞ்சனோ? விடைவலானோ?**

**மாணி ஆம் படிவம் அன்று, மற்று இவன் வடிவம் மைந்தா!**
**ஆணி இவ் உலகுக்கு எல்லாம் என்னலாம், ஆற்றற்கு ஏற்ற**
**சேண் உயர் பெருமை தன்னை சிக்கு அறத்தெளிந்தேன்,**
**பின்னர்க் காணுதி மெய்ம்மை.....''**

என்று கூறுகின்றான். பின்பு, அனுமனிடம், ''வானர ராஜனான அந்தச் சுக்கிரீவன் எங்கே இருக்கிறான்? அவனைக் காணவேண்டியே இங்கு வந்தோம். அதற்கு வழி காட்ட வல்லவனாய் நீ எமக்குக் கிடைத்தாய். ஆகவே அந்த நல்ல மனம் படைத்த அரசனை எமக்குக் காட்டுவாயாக'' என்று கேட்கிறான் இராமன். இவ்வாறு, அனுமனின் உதவியோடு சுக்கிரீவனது நட்பை இராம இலக்குமணர்கள் பெறுகின்றார்கள். ஒத்த உணர்வினை உடையவர்கள் முன் பழக்கம் எதுவும் இல்லாமலே நட்புக் கொண்டு விடுவார்கள். இதனையே தெய்வப்புலவர் திருவள்ளுவரும்

**புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சி தான்**
**நட்பாங் கிழமை தரும்**

என்கிறார். எனவே, சுக்கிரீவனுடைய நட்பைப் பெறவும் அதன் மூலம் சீதையை இராமன் மீட்டெடுக்கவும் வழி செய்தவன் இந்தச் சொல்லின் செல்வனான அனுமனே. சொல்லில் மாத்திரமன்றிச் செயலிலும் வல்லவனாய் பக்தி உணர்வோடு பின்னர் வரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் நடந்து கொண்ட அனுமனைச் ''சொல்லின் செல்வன்'' என இராமன் கணிப்பீடு செய்தது மிகவும் பொருத்தமே.

அன்றியும், இலங்கையில் சீதை இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்தவனும், இராவணனிடம் இராமனுக்காகத் தூது சென்றவனும் இந்தச் சொல்லின் செல்வனே! [illegible] விபீடணனை இராமன் தன்னுடன் சேர்த்துக் கொள்ளலாம் என ஆலோசனை கூறியவனும் இந்த அனுமனே!



பிரம்மாஸ்திரத்தினால் இந்திரஜித்து கட்டிய போது, அதிலிருந்து தன்னை - அந்தப் பிரம்மாஸ்திரத்தின் தன்மை தெரிந்தவனாகையால் மீட்டுக் கொண்டவனும் இந்தச் சொல்லின் செல்வனே?

அரக்கர் மாயையினால் மயங்கிய இராமனுக்கு இமயமலையிலிருந்து சஞ்சீவி கொணர்ந்து சிகிச்சை செய்து மீட்டவனும் இந்தச் சொல்லின் செல்வனே! பதினான்கு ஆண்டு முடிவுற்ற நிலையில், தீக்குளிக்க முயன்ற பரதனுக்கு, அண்ணன் இராமனின் வருகை கூற, ஆகாய மார்க்கமாக அயோத்திக்குப் பறந்தவனும் இந்தச் சொல்லின் செல்வனே! நிலமும் நீரும் நெருப்பும் வாயுவும் வெளியும் உதவிசெய்யும் வரம் பெற்றவன் வாயு குமாரனாகிய இந்தச் சொல்லின் செல்வனே.

இத்தனை சேவைகளையும், அவதாரபுருஷனான இராமனால் கூட இயலாத காரியங்களையும் அவனது நாமத்தைச் சொல்லிச் சொல்லியே அனுமன் செய்தான் என்பதை உணரும் போது, அவனைச் 'சொல்லின் செல்வன்' என இராமன் சொன்னது மிகவும் பொருத்தமே.

**''விடநகுலம் மேவினும் மெய்ப்பாவகனின் மீளும்**
**கடனில், இருள் போவது இவன்கண்''** என்கிறது திருவருட்பயன். **********

மட்டுவில், நா.நல்லதம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை வளர்ச்சியில் சுற்றாடல் தூண்டலின் பங்களிப்பு

மூளை இல்லாத ஒரு விலங்கினை கற்பனை செய்து பார்ப்பதே கடினம். அதிலும் மனித மூளை என்பது ஒப்பீட்டிற்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். இந்த மூளையின் காரணமாகவே மனித குலம் முன்னேற்றத்தின் சிகரத்தை அடைந்து, மற்றைய எல்லா உயிரினங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலையில் உள்ளது.

மனித மூளை மிகவும் சிக்கலானது. ஆனாலும், முற்றிலும் ஒரே மாதிரியான இயல்புகளைக் கொண்ட இரு முளைகளைக் காண முடியாது. அதனால்தான், சிலருக்கு மற்றையவர்களைவிட சிறந்த மூளை இருக்கிறது என்றும் சிலர் மற்றையவர்களைவிட மூளைசாலிகளாக இருக்கின்றனர் என்றும் பொது வழக்கில் கூறப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டே, பெற்றோரும் தமது பிள்ளைகளை மூளைசாலிகளாக வளர்த்தெடுப்பதற்கு வழிகளைத் தேடுகின்றனர். உண்மையில், பிள்ளைகளின் சிறந்த மூளை விருத்திக்குச் சாதகமான சுற்றாடலைப் பெற்றோரினால் உருவாக்கிக்கொடுக்க முடியும் என்று மருத்துவ ஆய்வுகள் காட்டியுள்ளன.

எமது மூளையானது "நரம்புக் கலங்கள்" (Neurons) எனப்படும் கலங்களினால் ஆக்கப்பட்டுள்ளது. மூளையில் கலங்கள் இருந்தபோதிலும், மூளை ஒத்திசைவாகச் செயற்படுவதற்கு கணத்தாக்கங்களின் (Impulses) பரிமாற்றம் அதிமுக்கியமானதாகும். மூளையிலுள்ள நரம்பிணைப்புக்கள் (Synapses) ஊடாகவே கணத்தாக்கங்களும் தகவல்களும் கலங்களுக்கிடையே பரிமாறப்படுகின்றன அநேகமான நரம்பிணைப்புக்கள் சிறுபிள்ளைப் பருவத்திலேயே உண்டாகிவிடுகின்றன. பிள்ளை வளரும்போது, மூளையின் கட்டமைப்பு விருத்தியடைந்து, அதன் செயற்பாடும் முதிர்ச்சியடைகின்றது. இந்த வளர்ச்சியானது போஷாக்கினாலும் பிள்ளை வளரும் சூழலினாலும் நெறிப்படுத்தப்படுகின்றது. வளரும் பருவத்தில் பிள்ளையின் மூளை விருத்திக்கு முக்கியமான சில ஊட்டச்சத்துக்கள் உடல்நல மற்றும் போஷாக்கு நிபுணர்களினால் இனங்காணப்பட்டுள்ளன. DHA போன்ற அத்தியாவசிய கொழுப்பு அமிலங்கள், விட்டமின்கள், சில வகையான கனியுப்புக்கள் என்பனவே அவையாகும். எனினும், ஊட்டச்சத்துக்கள் வழங்கப்பட்டால் மாத்திரம் போதாது. குழந்தையின் மூளை நேர்த்தியான முறையில் விருத்தியடைய வேண்டுமாயின், குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும்போதும் பிறந்த பின்பும் பெற்றோரின் அன்பு, அக்கறை மற்றும் ஏனைய அனுபவங்களைப் பெற வேண்டும்.

குழந்தை பிறப்பதற்கு முந்திய ஒருசில வாரங்களிலும் பிறந்த பின் 3 வயது வரையிலான காலப்பகுதியிலுமே மூளை துரிதமாக வளர்ச்சியடைகின்றது. இக் காலப்பகுதிகளில் போஷாக்குக் குறைவு அல்லது பொருத்தமற்ற சுற்றாடல் நிலைமைகள் காணப்பட்டால், நரம்புத் தொகுதியில் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டு, மூளைக்கலங்கள் பாதிக்கப்படலாம். அத்துடன், புடையட கலங்களின் அபிவிருத்தி, வளர்ச்சி என்பனவும் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடும். புடையட கலங்களின் பாதிப்பினால் Myelin விருத்தியில் மாற்றங்கள் ஏற்படும். குழந்தை பிறந்த பின் சில ஆண்டுகளுக்கு வெளிக்காவு நரம்புமுனைகளை (Axon) சுற்றி Myelin படை உருவாகுவதே இதற்குக் காரணமாகும். நல்ல போஷாக்கைப் பெறாத தாய்மாருக்குட்பட பிறக்கும் குழந்தைகளும் பெற்றோரின் சிறந்த அக்கறையைப் பெறாத குழந்தைகளும் மன வளர்ச்சிக் குறைவு அல்லது நடத்தைப் பிரச்சினைகளுக்கு ஆளாகக்கூடும். பெரும்பாலும், போஷாக்குக் குறைவும் உள மற்றும் உடல் ரீதியான துஷ்பிரயோகம் போன்ற சுற்றாடல் பிரச்சினைகளும் ஒன்றுசேர்ந்து நடத்தைக் கோளாறுகளுக்குக் காரணமாக அமையக்கூடும்.

நடத்தைப் பிரச்சினைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, சிலர் தமது சிந்தனைகளில் நடைமுறைக்கு ஒவ்வாத கோட்பாடுகளுக்கு இடமளித்து, அதிக கண்டிப்பாக நடக்க முற்படுகின்றனர். வேறு சிலர் தமது செயற்பாடுகளில் மன உணர்வுகளுக்கு அளவுக்கதிகமான இடத்தை அளிக்கின்றனர். பிள்ளைகள் இந்த இரண்டு நிலைமைகளுக்கும் ஆளாகாமல், சமநிலையான மனோபாவத்தைப் பெறுவதற்கு பெற்றோரால் உதவ முடியும். மூளைச் செயற்பாட்டியல் இந்த விடயம் பற்றி விளக்கம் அளிக்கிறது.

எமது மூளை இரண்டு சமமான அரைக்கோளங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன என்பதை உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். இவற்றில் இடது அரைக்கோளமே வாதத்திறன், காரணகாரிய விளக்கம், அறிவுக்கூர்மை மற்றும் மொழியாற்றல், பேச்சாற்றல், கணிதம் போன்ற பகுத்தறிவுத் திறமைகள் என்பவற்றிற்குப் பிரதான பொறுப்பாக இருக்கின்றது. வலது அரைக்கோளத்தின் மேற்பட்டையே இசை, நடனம், ஓவியம் போன்ற கலையாற்றல்களுக்கும் அமைதி, சமநிலை, ஆழமான விளக்கம், மன உணர்வுகள், கற்பனை, ஆக்கத்திறன், உள்ளறிவு, ஆன்மீக உணர்வுகள் என்பவற்றிற்குப் பொறுப்பாக இருக்கின்றன. இரு அரைக்கோளங்களினதும் ஒருங்கிசைவான செயற்பாட்டிற்கு சுற்றாடல் தூண்டல்கள் உதவுகின்றன. இரு அரைக்கோளங்களையும் ஒரே சமயத்தில் தூண்டும் எந்த நடவடிக்கையும் அனைத்து அறிவாற்றலின் அபிவிருத்தியை ஊக்குவிக்கின்றது. சமூகத் தொடர்பாடல்கள், மன உணர்வுகள், ஞாபகசக்தி என்பவற்றுடன் தொடர்புடைய மற்றுமொரு பகுதி மூளையின் பின்புறத்திலுள்ள Hippocampus என்னும் மேடாகும். கூம்புருச் சுரப்பி (Pineal Gland) ஆன்மீக உணர்வுகளின் உறைவிடமாகும்.

நரம்புக் கலங்களின் வளர்ச்சிக்கும் நரம்பிணைப்பு வலையமைப்பு, உட்காவு நரம்பு முளைகள், வாங்கிகள் என்பவற்றின் பரம்பலுக்கும் சுற்றாடல் தூண்டல்கள், பெற்றோருடனும் சுற்றாடலுடனுமான தொடர்பாடல்கள், விளையாட்டு வேடிக்கைகள் ஆகியன முக்கியமானவை என்பதை நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நரம்புக் கலங்களின் வளர்ச்சியானது நரம்பியக்கத் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்தும் மூளைப் பகுதியில் மாத்திரம் இடம்பெறுவதில்லை. ஞாபகசக்தி, காரணகாரிய விளக்கம், சிந்தனை, கற்கை என்பவற்றைக் கட்டுப்படுத்தும் பகுதியிலும் அது இடம்பெறுகின்றது. மூளையின் இரத்தச் சுற்றோட்டத்தையும் ஒட்சியேற்றத் தடுப்புப் பதார்த்தங்களின் உற்பத்தியையும் முன்னேற்றுவதற்கு உடற்பயிற்சி, விளையாட்டு நடவடிக்கைகள், தொடர்பாடல்கள் என்பன உதவுகின்றன.

குழந்தைக்குத் தூண்டுதல் அளிக்கும் செயலானது, அது கர்ப்பத்தில் இருக்கும்போதே ஆரம்பிக்கப்பட வேண்டும். வயிற்றிலுள்ள குழந்தை தாயாரின் இயத்துடிப்பிற்கும் குரலுக்கும் தூண்டற்பேறு காட்டுகிறது என்பது நன்கு அறியப்பட்ட விடயமாகும். குறிப்பாக, மாலை நேரத்திலும் இரவு எட்டு மணி தொடங்கி நள்ளிரவு வரையும் வயிற்றுள்ள குழந்தை உஷாராக இருக்கிறது. கர்ப்பம் தரித்த ஐந்தாவது மாதத்திற்குப் பின்னர், தாய்மார் தினமும் பல தடவைகள் அசைந்தாடும் ஆசனம் ஒன்றில் ஓய்வாக அமர்ந்து நிமிடத்திற்கு 20 அசைவுகள் வீதம் முன்னும் பின்னும் அசைந்தாடுதல் நன்மையானது என்று ஆராய்ச்சிகள் காட்டியுள்ளன. இச் செயலின் மூலம் குழந்தையின் நரம்பியக்க விருத்தியும் ஒருங்கிணைப்பு ஆற்றலும் அதிகரிக்கக்கூடும்.

கற்றுக்கொள்வதற்கான உயிரியல் தேவை குழந்தைகளுக்கு உண்டு. கர்ப்பத்திலுள்ள காலம் தொடங்கி பாலர் பாடசாலைக்குச் செல்லும் காலம் வரை, ஒரு குழந்தையின் ஐம்புலன் உணர்வுகளைத் தூண்டுவதற்கு மேற்கொள்ளப்படும் செயல்கள், அவனது மூளையின் வளர்ச்சியிலும் முதிர்ச்சியிலும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். வளர்ச்சி வேகப்படுத்தவும் தசைநார் ஒருங்கிசைவுகள் முன்னேற்றவும் ஒருமித்துக் கவனம் செலுத்தும் ஆற்றலை அதிகரிக்கவும், குழந்தையின் அறிவுக்கூர்மையை 15 புள்ளிகள் அதிகரிக்கவும் சுற்றாடல் தூண்டல்கள் உதவுமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

குழந்தை உற்சாகமாகவும் உஷார் நிலையிலும் இருக்கும்போதே தூண்டப்பட வேண்டும். குழந்தை களைப்பாக, அரைத்தூக்க நிலையில் அல்லது பசியாக இருக்கும்போது அல்ல. செல்லமாகத் தட்டிவிடுதல், தொடுதல், தடவுதல், அணைத்தல், உடலை மென்மையாகப் பிடித்துவிடுதல் என்பன குழந்தைக்குத் தூண்டுதலை ஏற்படுத்தும். குழந்தைகள் முதல் ஆறு [illegible] வெள்ளைப் [illegible] வரையப்பட்ட அட்டைகள், இலக்கு மையங்கள், சதுரங்கள் முதலியவற்றைப் பார்க்க விரும்புகின்றன. இத்தகைய பொருள்களையும் கடும் நிறங்களைக் கொண்ட வேறு பொருள்களையும் பார்க்கும் சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தாளம், இராகம், சுருதி என்பவற்றைக் கொண்ட இசை, மூளை விருத்தியைப் பல வழிகளில் தூண்டுகின்றது.

திரும்பத் திரும்ப சொல்வதன் அல்லது செய்வதன் மூலம், குழந்தைகள் புதிய திறமைகளைக் கற்றுக்கொள்கின்றன. எனவே, குழந்தைக்கு அக்கறையின்மை அல்லது சலிப்பு ஏற்படும் வரை ஒரே விதமான தூண்டல்களை மீண்டும் மீண்டும் வழங்கலாம். தொடர்பாடல் விளையாட்டு நடவடிக்கைகள் நரம்பியக்க அபிவிருத்தியை ஊக்குவித்து, மூளை முதிர்ச்சியடைவதற்கு உதவும் அதேவேளையில் பெற்றோருக்கும் மட்டற்ற மகிழ்சியை உண்டுபண்ணுகின்றன. இதனால், குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையிலான பிணைப்பு வலுவடைகின்றது. ஆரம்பப் பருவத்தில் ஏற்படும் இந்த உணர்ச்சிபூர்வமான பிணைப்பானது, நரம்புக் கலங்களுக்கு இடையிலான தொடர்புகள் விருத்தியடைவதற்கு உதவுகின்றன.



உங்கள் பிஞ்சுக் குழந்தைக்கு நீங்கள் பேசும் வார்த்தைகளின் அர்த்தம் புரியாமலிருக்கலாம். ஆனாலும், நீங்கள் பேசுவதைக் கேட்கும் குழந்தையின் மூளையில் பேச்சு மற்றும் மொழி ஆற்றலுடன் தொடர்புடைய பகுதி விரைவாக விருத்தியடைகின்றது. ஒவ்வொரு தடவையும் உங்கள் பேச்சைக் கேட்கும்போது, அலையலையான கணத்தாக்கங்கள் அவனது நரம்புக் கலங்களினூடாகப் பாய்கின்றன. வார்த்தைகள் திரும்பத் திரும்பக் கூறப்படும்போது, இந்த இணைப்புக்கள் வலுவடைகின்றன. உங்கள் குரலின் ஏற்றத்தாழ்வு, குழந்தைக்கு வெவ்வேறு உணர்வுகளை வழங்குகின்றன. குழந்தை உங்கள் பேச்சுக்கு பதிலளிக்காவிட்டாலும், அவனது மூளையில் தூண்டல்கள் ஏற்படுகின்றன. இத் தூண்டல்களின் பயனாக, மொழி ஆற்றலும் சிந்திக்கும் திறனும் விருத்தியடைகின்றன. ஏதேனும் பொருள்களைத் தானாகவே ஆராயவும் புதிய ஆட்களைச் சந்திக்கவும் மற்றைய பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடவும் குழந்தைக்கு இடமளிப்பதன் மூலம் குழந்தைகளின் நரம்பியக்கத் திறன், தொடர்பாடல் திறன் என்பவற்றின் விருத்திக்குப் பெற்றோர் உதவ முடியும். தினமும் காலை வணக்கம் கூறுதல் போன்ற [illegible], குழந்தையின் மனதில் [illegible]வார்த்தைகளும் செயல்களும் ஆழமாகப் பதிகின்றன. இதன் பயனாக, பேச்சு மற்றும் உணர்வு வெளிப்பாட்டு ஆற்றல்களுடன் தொடர்புடைய இணைப்புக்கள் வலுவடைகின்றன.

பாலர் பாடசாலையில் விரல்களைப் பாவித்துக் காரியங்கள் செய்தல், மனம்போல விளையாடுதல், சிற்றுண்டி உண்ணும் நேரம் முதலிய அனைத்துமே குழந்தைகள் தமது பெற்றோரிடமிருந்து பெற்ற திறமைகளை விருத்தி செய்வதற்குச் சிறந்த சந்தர்ப்பங்களாகும்.

பிள்ளைகளின் மூளை விருத்தியானது முதல் மூன்று வருடங்களிலேயே மிகத் துரிதமாக இடம்பெறுகின்றது. இந்த வளர்ச்சி, இரண்டாவது ஆண்டிலேயே உச்சக் கட்டத்தை அடைகின்றது. அப்போதுதான், மூளைக் கலங்கள் புதிய இணைப்புக்களை ஏற்படுத்துவதிலும் தேவையற்ற பழைய இணைப்புக்களை நீக்குவதிலும் ஈடுபடுகின்றன. நரம்புக்கல இணைப்புக்களின் இந்த "மறுசீரமைப்பு" செயற்பாடானது பெற்றோர் அல்லது பராமரிப்பவர்கள் குழந்தையை எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது. ஆரம்பத்திலேயே குறிப்பிட்டதைப் போல, மூளை விருத்தியின் இந்த அதிமுக்கியமான காலப்பகுதியில் சரியான சுற்றாடல் தூண்டல்களும் நிறைவான போஷாக்கும் அவசியமானவை. எனினும், "குழந்தைக்கு எவ்வாறு உணவூட்டுவது?" என்ற கேள்விதான் அநேகமான பெற்றோருக்குப் பெரும் சவாலாக இருக்கிறது. பெற்றோர் என்ற முறையில், குழந்தையின் எதிர்கால நலனை முன்னிட்டு, நீங்கள் இந்தச் சவாலுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க வேண்டும்.

ஆதாரங்கள்


- Casey BJ, Tottenham N, Liston C, Durston S., Imaging the developing brain : what have we learned about cognitive. Trend in cognitive sciences 2005 : 9(3) : 104-10
- Blows WT., Child brain development. Nursing times. 2003 : 99(17) : 28-31
- Casey BJ et. al. Structural and functional brain development and its relation to cognitive development. Biological psychology. 2000 : 54 : 241-257
- Child Health Development Record (2004) Family Health Bureau, Ministry of Health, Sri Lanka.
- Lally R (1998) Brain Research, Infant Learning & Child Care Curriculum. Child Care Information [on line]. Available at http://www.educarer.com/brain.htm



(இது ஒரு விளம்பர அநுபந்தம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 112



அனுப்புவர் பெயர்:....................................................

விலாசம்:....................................................

....................................................

கையொப்பம்:....................................................

### இடமிருந்து வலம்

1. வயசு வந்ததும் பலருக்கு வதனத்தில் வரும்.
5. அரைவாசி.
6. இரும்பில் பிடிப்பது.
7. ஊறுதல்.
9. கூட்டம்.
12. நெருப்பில்லாமல் வராது.
13. பழங்காலத்து செவிவழிக்கதை.
15. சரித்திரம்.
17. பயன்படுத்துதல்/பாவனைக்கு உட்படுத்துதல்.
19. தோசை தயாரிக்கவும் இ[illegible]ன் உத்தரவு. துப்பாக்கி பயன்படுத்த[illegible]ும் அதே உத்தரவுதான்
20. தலைவன்/இடம்.
21. சத்தமிட.
22. வேகமாக.
23. தாராளமாகக் கிடைத்தல்.

### மேலிருந்து கீழ்

1. நெஞ்சுக்குப் பின்புறம்.
2. சீனி தயாரிக்க உதவும் தாவரம்.
3. இரவு அல்ல.
4. நாக்கு உணர்வது.
5. வெளுத்ததெல்லாம் இதுவல்ல.
8. பிரச்சினை/சச்சரவு.
10. எதிரிகள்.
11. வணங்குதல்.
13. அசைவ உணவு.
14. ஒன்றைப் பயன்படுத்துதல்/துய்த்தல்
16. அரசர்கள் பயணித்த வாகனம்.
18. நாற்காலி.
19. தூய.
21. தற்போதைய யுகம்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 110 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)சமரசம். (5) சம. (7)காந்தம். (8)பந்து.(9)தம்பதி (11) தர. (12)அக. (13) வருமானம். (15) மதியம். (17) தம். (18)மோர். (20) வசனம். (22) கபடு. (24) திகில். (25) உள்ளும்.

**மேலிருந்து கீழ்**

(1) சகா. (2)மந்தகதி. (3) ரதம். (4) சம்பவம். (5) சந்தனம். (6) மதுரம். (10) திரு. (12) அமராவதி. (14)மாதர்கள். (16) யன்னல். (19)சுடும். (21) சகி. (23)பளு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 110 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — ஏ.டிலாணி அனுபாமா, இல 104, புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** — செல்வி ம. காயத்திரி, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** — ப.சின்னத்துரை, இல, 168/1 வித்தியாலய வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.

**4 ஆம் பரிசு** — சி.சிவகணேசன், பிரதேச வைத்தியசாலை, வேலணை.

**5 ஆம் பரிசு** — ஆழ்வாப் பிள்ளை இரவிச்சந்திரன், லக்ஸ்மினி இல்லம், பருத்தித்துறை வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

### பாராட்டுப் பெறுவோர்

(1) கே.எம்.தியாகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி

(2) இ.தங்கேஸ்வரன், பிரதேச செயலகம், வலி கிழக்கு, கோப்பாய்.

(3) நரேந்திரன் அகலிகை, சித்தமருத்துவ வைத்தியசாலை, குருநகர், யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 112**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 19.05.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.112 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 23.05.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

# தண்ணீர் தண்ணீர்

11ஆம் பக்கத் தொடர்ச்சி............

வெளியாலை ...? உள்ளுக்கு வாங்கோ!''- வீட்டினுள் இருந்து கொண்டே வாஞ்சையுடன் அழைத்தாள் வாணி.

''மச்சாள், நான் இவ்வளவு நாளும் வீட்டுக்குள்ளை இருந்தது காணாதே? இண்டைக்குத்தான் வெளியாலை வாறன், ஏன் நான் வெளியாலை வாறது. உங்களுக்கு விருப்பமில்லையே.....?'' வாணி 'கொல்' என்று சிரிக்க அங்கு நின்ற தங்காவுக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. ரதியின் உதடுகளில் புன்னகையொன்று பூத்து மறைந்தது.

''தங்கா, வீட்டில ஒரு சொட்டுத் தண்ணி கூட இல்லையடி, வாறியே தண்ணிக்குப் போவம்.''

''எங்கடை வீட்டிலையும் நல்ல தண்ணி முடிஞ்சு பேச்சுது; நில்லுங்கோ நானும் வந்திடுறன்'' - தங்கா கூறி விட்டு வாணியிடம் வாங்கிய ஒரு செம்பு தண்ணீரையும் கொண்டு பக்கத்தேயுள்ள தன் வீட்டுக்கு விரைந்தாள்.

சில நிமிடங்களில் மூவரும் ஒன்று சேர்ந்து சற்றுத் தொலைவிலுள்ள தோட்டக் கிணற்றினை நோக்கி நடக்கலாயினர்.

குடங்களைத் தங்கள் மெல்லிய இடைகளோடு அணைத்தபடி சுவாரஸ்யமாகக் கதைத்துக் கொண்டு தோட்டப்பகுதியை அடைந்தனர்.

தோட்டங்கள் யாவும் ஒரே வெள்ளக் காடாய்ப் பரந்து கிடந்தன. கடந்த இரண்டு நாள்களாய்ப் பெய்த கடும் மழையினால் கிணறுகள் யாவும் நிரம்பி வழிந்து வெள்ளத்தோடு வெள்ளமாய்க் காட்சி தந்தன. இவற்றைப் பார்த்ததும் அவர்களது நெஞ்சங்களில் ஒருவித தயக்கம் தோன்றியது.

''கிணத்து நீரெல்லாம் பழுதாய்ப் போயிருக்கும். இப்ப தண்ணிக்கு என்ன செய்கிறது.

தங்கா கவலையுடன் கூறினாள். ரதியின் இதயம் ஏமாற்றத்தைத் தாங்கமுடியாது வறண்டு பொருமியது.

''நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ. அங்கை தெரியுது பாருங்கோ தென்னந் தோப்பு. அந்தப் பக்கம் போனால் வீட்டுக் கிணறுகளிலை தண்ணி அள்ளலாம் வாங்கோ போவம்.''

வாணி நம்பிக்கையுடன் இருவரையும் அழைத் தாள். கடந்த வருடம் ஒரு மழை நாளில் சிலர் அந்தக் குடியிருப்புப் பக்கம் சென்று தண்ணீர் கொண்டு வந்தது அவள் மனத்திரையில் நிழலிட்டுச் சென்றது.

அவர்கள் மூவரும் குடியிருப்பை நோக்கி நடந்து கொண்டிருந்தனர். வழியில் தப்புத் தண்ணிகளில் இரை தேடிக் கொண்டிருந்த கொக்குகள் இவர்களைக் கண்டதும் 'ஜிவ்' வென்று மேலெழுந்து வெண்பஞ்சுப் பொதிகளாய் ஆகாயத்தில் மிதந்தன.

அவர்கள் குடியிருப்பை அண்மித்த போது அவர்களது இதயம் நிம்மதிப் பெருமூச்சால் ஆறுதல் அடைந்தது.

தென்னை, கமுகு, பலா, வாழை என்பவற்றால் நிறைந்திருந்த அந்தக் குடியிருப்பு அவர்களை ஆரவாரமின்றி வரவேற்றது.

எங்கும் ஒரே நிசப்தம்.... வீடு வாசல்கள் சனசந்தடியற்று வெறிச் சோடிக் கிடக்கின்றன. ஒற்றையடிப் பாதைகளையும் முற்றங்களையும் புற்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு இனம் புரியாத ஒருவித தயக்கம். எனினும் அதனை அவர்கள் சுதாகரித்துக் கொண்டனர்.

''சனமெல்லாம் ஆமிக்காறனுக்குப் பயந்து வேறு இடங்களுக்குப் போட்டினம் போல...... இப்ப எங்களுக்குத் தண்ணி அள்ளி வார்க்க ஒருத்தரும் இல்லையே..... நாங்கள் என்ன பாவம்தான் செய்து பிறந்தமோ.....?'' என்று வாணி வேதனைப்பட்டுக் கொண்டாள்.

''வாணி மச்சாள், நாங்கள் எவைக்கும் பாவம் செய்யேல. எங்கட பயம் தான் எங்கட முதல் எதிரி. வாங்கோ, கிணத் திலை நான் அள்ளி வார்க்கிறன்'' - ரதி துணிவுடன் கூறிவிட்டு அங்குள்ள கிணற்றடிக்கு வந்து வாஞ்சையுடன் எட்டிப் பார்த்தாள்.

நீரிலே எண்ணெய் படர்ந்து கிடக்கிறது. யாரோ விஷமிகள் கழிவொயிலைக் கிணற்றுக்குள் ஊற்றிவிட்டார்கள். அவர்களுக்கு ஒரே ஏமாற்றம்.

அடுத்த வீட்டுக்கு விரைந்தார்கள். அங்கும் ஏதோ ஊற்றப்பட்டுக் கிடந்தது. அவர்கள் மனதில் சஞ்சலம் தலை தூக்கியது.

அடுத்த வீட்டுக்கும் விரைந்தார்கள். அங்கும் கிணற்றுக்குள் குப்பை கூழங்கள் கொட்டப்பட்டுக் கிடந்தன.

இப்போது ஆத்திரம் அவர்களின் நெஞ்சை அடைத்தது.

''ஆரோ விஷமியள் தண்ணியைப் பழுதாக்கிப் போட்டான்கள்'' என்று தங்கா கவலையுடன் கூறினாள்.

''விஷமி[illegible] வரேல்ல. இந்த வீட்டுக்காறர்தான் இதைச் செய் திருக்கினம். தாங்கள் போனாப் பிறகு கண்ட கண்ட சாதியளும் வந்து கிணத்திலை தண்ணி அள்ளிப்போடுவினம் எண்ட துவேஷத்திலைதான் இப்பிடிச் செய்திட்டுப் போட்டினம்.''

ரதிக்குத் தாங்க முடியாத கவலை. அவள் வாயிலிருந்து வார்த்தைகள் சூடாகவே கிளம்பின. அவற்றுள் புரையோடிப் போயிக்கும் சமூகக் குறைபாடுகளின் துரோகத் தனங்கள் நிதர்சனமாக வெளிப்பட்டன.

"இதுக்கெல்லாம் நாங்கள் ஆத்திரப்பட்டு இப்ப என்ன நடக்கப்போகுது....? அவங்கட காணி; அவங்கட கிணறு; என்றாள் வாணி. அவளது நெஞ்சுக்குள் இயலாமையின் உறுதியற்ற தன்மை எதிரொலித்தது.

''எப்படி இருந்தாலும் ஒரு மனத் தன்மை வேணாமா....? இந்தக் கிணத்திலை கூட எங்களுக்குள்ளை இன்னும் சமத்துவமில்லை. மற்ற விஷயங்களில எப்பதான் வரப்போகுதா....?''

- ரதியின் மன வேதனை சற்றுக் கூர்மையடைந்து வார்த்தைகளாய்ப் புறப்பட்ட வேளை அவளுக்குத் தாயின் நினைவு வந்தது.

''நேரம் போகுது, அம்மா தேடப் போறா; கெதியாப்போக வேணும். வாணி மச்சாள், இப்ப என்ன செய்வம்'' என்று அவசரப்படுத்தினாள் ரதி.

''இனி என்ன செய்யிறது. வாருங்கோ, பிள்ளையார் கோயில் கிணத்தடிக்குப் போவம். தோட்டத்துக்கிளால போனால் கெதியாப் போகலாம்'' என்ற வாணி குடத்தைத் தூக்கினாள்.

மூவரும் வரம்புகள் வழியே நடந்து அந்தப் பிள்ளையார் கோயிலை நோக்கி விரைந்தனர். புதிதாக வர்ணம் தீட்டப்பட்டிருந்த கோயில் சிற்பங்கள் அவர்களது கண்களைக் களிப்பூட்டி அழைத்து நின்றன. அவர்கள் விக்கினங்கள் போக்கும் விநாயகக் கடவுளை மனத்திரையில் இருத்தி அன்புருக நினைத்துக்கொண்டனர்.

அங்கே கோயில் புற வீதியில் அமைந்த கிணற்றில் இருந்து சில பெண்கள் தண்ணீரைக் குடங்களில் கொண்டுசெல்லும் காட்சியைக் கண் முன்னே கண்டபோது மகிழ்ச்சியில் அவர்கள் இதயம் குளிர்ந்தது.

மூவரும் கோயில் கிணற்றடிக்கு வந்த போது அவர்கள் மனதுக்குள் மட்டற்ற மகிழ்ச்சி நிலை கொண்டது. உதடுகளில் புன்னகை பூத்து மறைகின்றது.

அப்பொழுது வட்டவிதானை பூரணம் [illegible] 'ஜேசி' கறவைப் பசுவுக்குக் [illegible] தொட்டியுள் தண்ணீர் வைத்துக் கொண்டு நிற்கிறார். அவர் நீரை ஊற்ற அந்தக் கறவைப் பசு 'மடக் மடக்' என்று உறிஞ்சிக் கொண்டிருக்கிறது. ரதி குடத்தைக் கொண்டு சென்று ஆவலுடன் தொட்டியின் மேல் வைத்தாள்.

''என்ன, வரவர மேல வந்திட்டியள்..... நாங்கள் பாவம் எண்டு கொஞ்சம் இடம் குடுத்தால் நீங்கள் மிஞ்சப் பாக்கிறியள்....'' - ஒருவித அதட்டலுடன் தலையை நிமிர்த்திக் கேட்டார் பூரணம்பிள்ளை.

''நீங்கள் என்ன சொல்லுறியள் எண்டு எனக்கு விளங்கேல'' - ரதி பட்டென்று கூறிவிட்டு நிதானமாக நின்றாள்.

''விளங்காட்டில் குடத்தை எடுத்து நிலத்தில வை; அப்ப விளங்கும்.''

''ஓ... அப்பிடியோ சங்கதி....? நாங்கள் தான் சமூகத்தைப் பிழையாய் நினைச்சிட்டம். இனி உந்தச் சாதித்தடிப்பெல்லாம் மெல்லச்சாகும் எண்டு தான் நினைச்சம். இப்ப பார்த்தால் உதுதானாக லேசில மறையாது என்பது உண்மையாத்தான் போச்சுது.''

''கங்கையில குளிச்சாலும் காக்கை அன்னமாகுமே.....? நீங்கள் கொஞ்சம் உயரலா மெண்டுதான் பார்க்கிறயள். உது ஒருக்காலும் நடவாது.''

''எங்களை நீங்கள் உயர்த்த வேணுமெண்டு நாங்கள் கேக்கேல. மனசாரா மதிச்சாக் காணும். இந்தச் சமூகத்தில ஒரு மிருகத்துக்குக் குடுக்கிற மரியாதைகூட எங்களுக்கில்லை....'' உதைப்போய் உன்ரை கொப்பன் கோத்தையைக் கேள்'' என்று ஆத்திர மெலீட்டால் கத்திய பூரணப் பிள்ளை ரதியின் குடத்தைக் காலால் தட்டி விட்டார். குடம் உருண்டு புரண்டு சென்று தரையில் விழுந்தது. இதுவரை நிதானமாகக் கதைத்துக் கொண்டு நின்ற ரதி பத்திர காளியானாள். அவள் முகம் கோபத்தால் பொங்கி வழிந்தது. விரைந்து தன் குடத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பூரணம் பிள்ளை அருகில் சென்று ''இனி ஏதாவது பேசினால் இந்தக் குடம்தான் உன் தலையோடு பேசும்'' என்று நெஞ்சத் துணிவோடு கூறினாள். வாணியும் தங்காவும் தத்தம் குடங்களைப் பூரணம் பிள்ளையை நோக்கி ஓங்கிக் கொண்டனர்.

பூரணம்பிள்ளைக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. அவர் முகம் ஓடிக் கறுத்தது; வியர்வை தேகம் முழுவதும் பனித்துக் கொட்டியது; வெட்கமும் அச்சமும் தோன்றவே அவ்விடத்தை விட்டு அகல, ரதி தீரத்துடன் துலாக் கொடியை எட்டிப்பிடித்தாள்.

★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பில் சுரக்கும் இரசாயனம்

வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும் என்பது பழமொழி. அதை அறிவியலும் உண்மைதான் என்று நிரூபிக்கின்றது.



நாம் சிரிக்கும்போது மூளையில் வெளிப்படும் ஒருவகை வேதிப்பொருள்களுக்கு என்டார் பன்கள் என்று பெயர். இவை உடலுக்கு இயற்கையான வலி நிவாரணிகளாவும் பயன்படுகின்றன. சந்தோஷத்தை அதிகரிக்கும் சுரப்பிகளை உடலில் அதிகம் சுரக்க சிரிப்பு உதவுகிறது. இதனால் மன அழுத்தம் விலகி உடல் குணமாகிறது. உடலை பலவீனமாக்கும் ஆங்கைலோ ஸ்பான்டிலிடிஸ் என்ற நோயால் நார்மன் கசின்ஸ் பாதிக்கபட்ட போது, மருத்துவர்கள் தங்களால் அவருக்கு உதவ முடியாது என்றும் இறப்பதற்கு முன் வலியால் அவர் சித்திரவதைக்கு உள்ளாவார் என்றும் கூறிவிட்டுச் சென்றனர். கசின்ஸ் அதைக் கண்டுகொள்ளாமல் ஒரு விடுதி அறையில் தங்கி, மார்க்ஸ் சகோதரர்கள், விமானம், மூன்று அடிமைகள் போன்றவை உள்பட எல்லா சிரிப்புப் படங்களையும் வாடகைக்கு வாங்கினார். அவற்றை மீண்டும் மீண்டும் பார்த்து வயிறு குலுங்கச் சிரித்தார். இப்படி ஆறு மாதமாக அவர் சிரிப்பு வைத்தியம் செய்து கொண்ட பின்னர் அவரது நோய் முற்றிலும் குணமானது. மருத்துவர்களுக்கு ஒரே ஆச்சரியம். இந்த அற்புதமான அனுபவத்தை அவர் ஒரு நோயின் கதை என்ற நூலில் எழுதினார். இதன் பின்னர் என்டார்பன்களின் செயல் பற்றி தீவிரமான ஆராய்ச்சிகள் நடந்தன. மார்பன், ஹெராயின் போன்ற வேதியியல் அமைப்புக் கொண்ட இவை உடலை அமைதியாக்கும் குணம் கொண்டவை. இதனால் சந்தோஷமானவர்களுக்கு நோய் வருவதில்லை. பலவீனமடைவதில்லை. ஆனால், புலம்புகிறவர்கள் எப்போதும் நோய்வாய்பட்டிருக்கிறார்கள்.

அழுகையும், சிரிப்பும் உளவியல் ரீதியாக நெருங்கிய தொடர்புள்ளவை. வாழ்க்கையின் கஷ்டங்களை நீக்குவதற்கான வழிமுறைகள் தெரியாததால் தான் போதைக்கு அடிமையாகின்றனர். தடைகளை விலக்கி மக்கள் அதிகம் சிரிக்கவும், என்டார்பன்கள் சுரக்கவும் மனது உதவுகிறது. இதனால் தான் எளிதில் தங்களை மாற்றிக் கொள்பவர்கள் மது அருந்தும் போது அதிகம் சிரிக்கிறார்கள். அதே சமயம், சந்தோஷமற்றவர்கள் மது அருந்தும் போது இன்னும் சோர்வடைகிறார்கள்.

ஆண்களை விட பெண்களே அதிகம் சிரிக்கிறார்கள். ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகளே அதிகம் புன்னகைப்பது ஆராய்ச்சிகளில் தெரிகிறது. பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் பெண்கள் இயல்பாகவே கருணையும், சமாதானமும் கொண்டிருப்பதே இதற்குக் காரணம். இதனால் தான் ஆண்களைப்போல பெண்களால் அதிகாரம் செலுத்த முடிவதில்லை. பெரும்பாலான பெண்களுக்கு நகைச்சுவை உணர்வுள்ள ஆண்கள் தான் அதிக கவர்ச்சியானவர்களாகத் தோன்றுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

புன்னகையும், சிரிப்பும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து, நோய் நொடி வராமல் உடலைப் பாதுகாக்கின்றன. உடலுக்கு மருந்தாகவும் அமைகின்றன, அதிகமான நபர்களை கவர்கின்றன, வாழ்நாளை நீடிக்கின்றன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## மே 09 முதல் 15 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்தவாரம் எதிர்பாராத சந்திப்புக்கள் நிகழும். ஆன்மிக விடயங்களில், ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சில விடயங்களை நினைத்துப் பெரிய அளவில் பயம் கொள்வீர்கள் . திட்டமிட்ட காரியங்கள் நடக்கும். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். உறவினர்கள் சந்திப்பால் உற்சாகம் அடைவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். இன்றுமுதல் குரு பகவான் அதிசாரமாக விரய ஸ்தானத்திற்கு செல்வதால், பிள்ளைகள் வழியிலும், வீடு, மனைகளைப் பராமரிக்கவும், மனைவியின் விருப்பங்களை நிறைவேற்றவும், தெய்வ காரிய பிரார்த்தனைகளைப் பூர்த்தி செய்யவும், வெளிநாட்டுப் பயணங்கள் செல்லவும் கணிசமான பணத்தைச் செலவிடலாம். சனி சாதகமான நிலையில் இருப்பதால், வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. வழக்கு விவகாரங்கள் சுமுகமாக முடிவுக்கு வரும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். கேது சாதகமான நிலையில் மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். திட்டமிட்ட காரியங்கள் மட்டுமின்றி, திட்டமிடாத சில காரியங்களும் நடக்கலாம். குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரன் ஆட்சி பலத்துடன் இருப்பதால், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பணிபுரிவோர் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். கடன்களைத் தீர்க்கும் வாய்ப்பு உருவாகும். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் நீங்கும். உறவினர் சந்திப்பு நிகழும்.

### இடபம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் உள்ளதால், எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்படலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே செய்யலாம். பயணத் தடைகளைச் சந்திக்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். புதிய அனுபவங்களைப் பெறலாம். பெரிய அளவில் எதிர்பார்த்த ஒரு விடயம் நடக்காமல் பிசுபிசுத்துப் போகலாம். குழப்பம் உண்டாகும். குரு பகவான் இன்று முதல் சாதகமான நிலையில் இருப்பதால், தடைபட்ட, இழுபறியாக இருந்த பணவரவுகள் வரலாம். சிறிது சிறிதாக சேமித்த பணம் கணிசமாகக் கைக்கு கிடைக்கலாம். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். சண்டை போட்ட உறவினர்களிடம் சமாதானமாகச் செல்வீர்கள். மூத்த உடன்பிறப் புகள் உதவிகரமாக இருப்பர். சுப காரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. இருந்தாலும், சனி பாதகமாக இருப்பதால், முதலீடுகள் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். உடல் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும். மற்றவர்கள் பேச்சை நம்பி, அனுபவம் இல்லாத விடயங்களில் இறங்க வேண்டாம். செவ்வாய் சாதக மாக இருப்பதால், நிலம், பூமி, கட்டடப் பணிகள் போன்றவை அனுகூலமாக அமையும். சகோதரர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகி பாசம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். சுக்கிரன் ஜென்ம ராசியில் இருப்பதால், மதிப்பு, கௌரவம் மேம்படும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் உண்டு. காரிய வெற்றி உண்டு. பணம் வரும்.

### மிதுனம்

இந்தவாரம் ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பால்ய நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். சந்திராஷ்டமம் என்பதால், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதம் போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். நான்காம் இடத்தில் சனியும், அதிசாரமாக இன்று முதல் 10ஆம் இடத்திற்கு குரு செல்வதும் அவ்வளவு நல்லதல்ல. பணிபுரிவோர் கடும் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். மற்றவர்கள் வேலைகளை எல்லாம் நீங்கள் சேர்த்துப்பார்க்கும் நிலைமை உருவாகலாம். சிலர் விரும்பாத இடமாற்றங்களைச் சந்திக்கலாம். மேலும், எந்த வேலையும் நினைத்த வேகத்திற்கு முடியாமல், முட்டுக்கட்டை ஏற்பட்டு உங்களுக்கு மன உளைச்சலை உண்டாக்கலாம். சூரியன் சாதகமாக இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்கள் சாதகமாக முடியும். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்கு கூடும். சுக்கிரன் விரயஸ்தானத்தில் இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் பணம் கரையலாம். சகோதரிகளின் தேவைகளை நிறைவேற்றவும் குறிப்பட்ட தொகையைச் செலவிடலாம். ஆடம்பர பொருள்கள் வாங்குவீர்கள். செவ்வாய் சாதகமற்ற நிலையில் இருப்பதால், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம். புதியவர்களின் நட்பு, சந்திப்பு நிகழும். கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்பீர்கள்.

### கடகம்

இந்த வாரம் எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். திட்டமிட்ட காரியங்கள் நடக்கும். அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். விருந்து, விசேஷங்கள் உண்டு. எட்டாம் வீட்டிலிருந்த குரு இன்று முதல் அதிசாரமாக ஒன்பதாம் இடத்திற்கு செல்வது அனுகூலமே. கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சனி சாதகமான நிலையில், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் திருப்திகரமான நிலைமை காணப்படும். பதவி உயர்வை எதிர்பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். போட்டிகள், எதிர்ப்புகள் விலகி, எந்தக் காரியத்தையும் சுலபமாகச் செய்து முடிப்பீர்கள். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் எல்லாம் சாதகமாக அமையும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், கேளிக்கை, கொண்டாட்டங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். தாயார் வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். பழைய வாகனங்ளை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். எதிலும் கவனம், முன்னெச்சரிக்கை அவசியம். அதிருப்தி, ஆதங்கம் உருவாகும்.

### சிங்கம்

இந்த வாரம் எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். பிள்ளைகள் தொடர்பான வகையில் செலவு, அலைச்சல்களைச் சந்திக்கலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவும் சில காரியங்களைச் செய்வீர்கள். பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். தாமதமின்றி வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். இதுவரை பல நன்மைகளை வாரி வழங்கிய குரு இப்போது அதிசாரமாக எட்டிற்கு செல்வதால், வீண் செலவுகள், பிரச்சினைகள், வீண் பழிகள் போன்றவற்றை எதிர்கொள்ள நேரிடலாம். இழப்புகளைத் தவிர்க்க எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். பணிபுரிவோர் மேலதிகாரிகளை அனுசரித்துச்செல்ல வேண்டும். சுக்கிரன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், வாகனங்கள் வழியில் திடீர் செலவு ஏற்படலாம். பயணங்களாலும் கணிசமான பணம் கரையலாம். சகோதரிகள் வழியில் அன்புத் தொல்லைகள் உருவாகலாம். செவ்வாய் விரய ஸ்தானத்தில் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள், கட்டடப் பணிகள், நிலம், பூமி பராமரிப்பு போன்ற வழிகளில் செலவுகள் ஏற்படலாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். தந்தையுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம்.

### கன்னி

இந்த வாரம் வீண் அலைச்சல்களுக்கு ஆளாகலாம். உறவினர்கள் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைப்பதால், சிரமங்கள் உருவாகலாம். மற்றவர்களுக்காக உங்கள் பணத்தை செலவிடலாம். கடும் வேலை நெருக்கடிகளால் வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றங்கள், குழப்பங்களைச் சந்திக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். உல்லாசமான பேச்சுக்களைத் தவிர்க்கவும். இதுவரை ஆறாம் இடத்தில் இருந்த குரு, இன்று முதல் அதிசாரமாக ஏழாம் இடத்திற்கு செல்கிறார். இது நல்ல சாதகமான அம்சமே. கணவன் மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி, ஒற்றுமைகூடும். கூட்டுத் தொழிலில் சிறப்பான நிலைமை காணப்படும். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வளர்ந்த பிள்ளைகள் வழியில் வருமானம் வரும் சூழ்நிலை உருவாகும். இடமாற்றம், புதிய வேலை மாற்றம் போன்ற நல்ல பலன்களை காணலாம். செவ்வாய் லாப ஸ்தானத்தில் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். தடைபட்ட கட்டட பணிகளை முடுக்கி விடுவீர்கள். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். சகோதரிகள், உறவுப் பெண்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். பயணங்கள் சந்தோஷம், மகிழ்ச்சி தருவதாக அமையும். சூரியன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், தந்தை தொடர்பான விஷயங்களில் கவனம் அவசியம். பணவரவுகளைப் பெறலாம். உதவி கிடைக்கும்.

### துலாம்

இந்த வாரம் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆசைப்பட்ட பொருள்களை சகாய விலையில் வாங்குவீர்கள். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம். கடனாக, கொடுத்த பணம் திரும்பி வரும். சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறப்பீர்கள். அலைச்சல், திரிச்சல் உண்டு. மற்றவர்கள் வேலைகளுக்காக நீங்கள் அலையலாம். நினைத்தது நடக்காமல் ஏமாற்றம் அடையலாம். விரய ஸ்தானத்தில் சனியும், அதிசாரமாக சென்ற குரு இன்று முதல் ஆறாம் இடத்தில் இருப்பதாலும், பண விவகாரங்களில் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். கடன் பிரச்சினைகளால் கவலைகள் உண்டாகலாம். தொழில் ரீதியாக வீண் பழிகள் உருவாகாமல் இருக்க எச்சரிக்கை அவசியம். இருந்தாலும், ஆறில் உள்ள குரு தொழில் ஸ்தானமான பத்தாம் இடத்தைப் பார்ப்பதால், சில மாற்றங்கள் உருவாகலாம். புதிய பொறுப்புகளை ஏற்கும் சூழ்நிலை ஏற்படும். சுபச் செலவுகளும் அதிகரிக்கும். மூன்றாம் இடத்தில் ராகு இருப்பதால், மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். திடீர் பணவரவுகளைப் பெறலாம். காரிய ஸ்தானத்தில் செவ்வாய் தொடர்வதால், அடுக்கடுக்காக வேலைகள் விரட்டிக் கொண்டிருக்கும். ஒரு வேலையை முடிக்கும் முன்னரே, புதிதாக மற்றொரு வேலை வந்து கொண்டிருக்கும். சகோதரர்கள் உதவிக்கரமாக இருப்பர். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விஷயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். திடீர் செலவு நேரும். திடீர் வெளியூர் பயணம் செல்லலாம்.

### விருச்சிகம்

வரும் கோபம், வேகத்தைத் தூண்டும் நிகழ்ச்சிகள் நடக்கலாம் அல்லது சந்தோஷத்தை தரும் நிகழ்வுகள் நடக்கலாம். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் உண்டாகலாம். வேலை நெருக்கடிகளால் விரக்தி அடையலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். இதுவரை நான்காம் இடத்தில் இருந்த குரு, அதிசாரமாக ஐந்தாம் இடத்திற்கு செல்வது நல்லதே. குழந்தைகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாட்களாக வராமல் இழுத்தடித்த பணவரவுகள் வரலாம். சிலர் உங்களை நம்பி பணப்பொறுப்புகளை ஒப்படைப்பதால், அவர்களின் பணம் உங்களின் கைகளில் புரளும். மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சூரியன் ஆறாம் இடத்தில் இருப்பதால், அரசு தொடர்பான காரியங்கள் தடையின்றி, அனுகூலமாக முடியும். தந்தை மீதான பாசம் அதிகரிக்கும். அவரின் தேவைகளை குறைவின்றி நிறைவேற்றி வைத்துப் பாராட்டு பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகள் திருப்திகரமாக அமையும். ஏழாம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால், பெண்கள் தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சகோதரிகள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாகலாம். பழைய பொருட்கள் சிலவற்றை மாற்றி புதிய பொருட்கள் வாங்குவீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம். குதர்க்கமான பேச்சு வேண்டாம். மன அமைதியை பாதிக்கும் சம்பவங்கள் நடக்கலாம்.

### தனுசு

இந்த வாரம் ஒன்றுக்கு இரு மடங்காக செலவுகள் உருவாகலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யலாம் அல்லது கடன் உதவி அளிக்கலாம். குடும்பத்தில் சிறு சலசலப்பு உண்டாகலாம். சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறக்கலாம். பெண்கள் வழியில் உதவி கிடைக்கும். புதியவர்களின் நட்பைப் பெறலாம். சனி, ராகு, கேது, குரு, செவ்வாய், சுக்கிரன், சூரியன் என, பெரும்பாலான கிரகங் கள் சாதகமற்ற நிலையில் இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விஷயங்களில் திருப்திகரமான நிலைமை இருப்பது கடினமே. சிலர் இடமாற்றம், வீடு மாற்றம் போன்றவற்றைச் சந்திக்கலாம். உங்களின் உடல்நலனில் அக்கறை காட்டுவது மட்டுமின்றி, தாயார் உடல் நலனிலும் கவனம் செலுத்த வேண்டும். உடன் பிறப்புக்களுடன் பகை வராமல் இருக்க அவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். கடன் விவகாரங்களை கட்டுக்குள் வைத்திருப்பது நன்மை தரும். பணிபுரியும் பெண்கள் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். வாகனங்களால் தொல்லைகள் உருவாகலாம். திடீர் பயணங்களால் கணிசமான பணம் கரையும். அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள் தொடர்பான விஷயங்கள் அனுகூலமாக இல்லை. பணிபுரிவோர் நிர்வாகத்தினரை அனுசரித்துச் செல்ல வேண்டும். எதற்கெடுத்தாலும், கோபம் கொள்வதை தவிர்த்து பொறுமையாகச் செயற்படுவது நல்லது. மாற்று மதத்தினர் தொடர்பான விஷயங்களில் கவனம் அவசியம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உற்சாகம் குறையாமல் பரபரப்பாக செயற்படுவீர்கள்.

### மகரம்

இந்த வாரம் செலவுகளையும், தேவையற்ற அலைச்சல்களையும் சந்திக்கலாம். சோர்வு, சோம் பல் கூடும். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். பெண்கள் வகையில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். இரண்டாம் இடத்தில் இருந்த குரு இன்று முதல் அதிசாரமாக மூன்றாமிடத்திற்கு செல்வதால், முக்கியமான காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் முட்டுக் கட்டைகள் ஏற்படலாம். பண விஷயங்களிலும் பிரச்சினைகள் உருவாகலாம். பெரிய மனிதர்களின், வசதி படைத்தவர்களின் உதவி கிடைப்பது தள்ளிப் போகலாம். சூரியன் நான்காம் இடத்தில் இருப்பதால், அலைச்சல், திரிச்சல் அதிகரிக்கும். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விஷயங்கள் சிரமங்கள் ஏற்படலாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விஷயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். விருந்தினர்கள் வருகையாலும் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். செவ்வாய் ஏழாம் இடத்தில் நீடிப்பதால், கணவன் மனைவி உறவில் மனக்கசப்பு வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சகோதரர்கள் வகையில் ஆதாயத்தை விட சிரமங்கள், செலவுகளே அதிகம். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். குடும்பச் செலவுகள் கூடும். சிலருடன் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகள் செலுத்துவீர்கள்.

### கும்பம்

இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். செலவு, அலைச்சல் உண்டு. சில வேலைகளை செய்ய மறப்பதன் மூலம் அவதிகளுக்கு ஆளாகலாம். நீண்ட நாட்களாக சந்திக்க நினைத்த ஒருவரைச் சந்திக்கலாம். எட்டாம் இடத்தில் இருக்கும் சனி பல வகையிலும் சிரமங்களை கொடுத்துக் கொண்டிருந்தாலும், இன்று முதல் இரண்டாம் இடத்திற்கு செல்லும் குருவால், சற்று ஆறுதல் அடையும் வகையிலான சூழ்நிலை உருவாகும். தடைபட்ட, இழுபறியாக இருந்த கடன் மிகுதிகள் வரலாம். சேமிப்புகளை மொத்தமாகப் பெற்று கடன்களை தீர்ப்பீர்கள். வளர்ந்த பிள்ளைகள் வழியில் வருமானம் வரும் சூழ்நிலை உருவாகும். சுபகாரிய விஷயங்களில் முன்னேற்றம் காணப்படும். சூரியன், சுக்கிரன் சாதகமான நிலையில் உள்ளதால், அரசியல் வாதிகள், அதிகாரிகள், தந்தை, மருத்துவம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விஷயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். செவ்வாய் சாதகமாக இருப்பதால், நிலம், பூமி தொடர்பான விஷயங்கள் அனுகூலமாக இருக்கும். தடைபட்ட சில காரியங்களை சுறுசுறுப்பாக முடிப்பீர்கள். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அவர்களுக்காக உதவி செய்ய நேரிடலாம். கோபம், வேகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### மீனம்

இந்த வாரம் திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். குடும்ப த்தில் கலகலப்பான சூழ்நிலை குடிகொள்ளும். இழுபறியாக இருந்த கடன் மிகுதிகள் வரலாம். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்பீர்கள். கடன் மிகுதிகள் வசூலாகும். கைமாத்தாக கொடுத்த பணம் வரலாம். நண்பர்களுடன் , கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். ஏழாம் இடத்தில் சனி இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விஷயங்கள் திருப்திகரமாக இருக்காது. மனம் ஒரு வகையில் நிலை கொள்ளாமல் அலைபாயும். இன்று முதல் குருவும் ஜென்ம ராசிக்கு அதிசாரமாக வருவதால், பண விஷயங்களில் நெருக்கடிகள் அதிகரிக்கும். தேவையற்ற கவலைகள் மனதை ஆட்கொள்ளும். மூன்றாம் இடத்தில் சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், சகோதரிகள், தாயார், மனைவி வழி உறவுகள் போன்ற வகையில் அனுகூலம், ஆதாயம் பெறலாம். அவர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். இரண்டாம் இடத்தில் சூரியன் இருப்பதால், குதர்க்கமான, குசும்புத்தனமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். தந்தையுடன் வாக்குவாதங்கள் ஏற்பட்டு பதற்றம் உண் டாகலாம். பணி புரிவோர் அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். ஐந்தாம் இடத்தில் செவ் வாய் இருப்பதால், [illegible] இடமாற்றங்களுக்கு ஆட்படலாம். சகோதரர்கள், பங்காளிகளால் அனுகூலம் இல்லை. கடன்களாலும் மன உளைச்சல்களுக்கு ஆட்படலாம். வீண் செலவுகள், தண்டச் செலவுகள் நேரும். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

கார்கில்ஸ் (சிலோன்) பி.எவ்.சி ஆனது இலங்கையில் ஒன்றுபட்ட பிரஜைகளைக் கொண்ட பொறுப்புள்ள ஒரு சமூகஸ்தாபனம்.
பல்வேறுபட்ட வகையிலான பொறுப்புக்களை அது கையாள்கின்றது.
விவசாயம், பசுவளர்ப்பு, கால்நடைவளர்ப்பு மற்றும் FMCG துறைகளில் தமக்குள்ள நிபுணத்துவத்தைக் கொண்டு இலங்கையில் நாம் பணியாற்ற முயல்கின்றோம்.
சமூகத்தில் நட்பு ரீதியிலான தேசிய அபிவிருந்தியில் உலகளாவிய முன்மாதிரியாகத் திகழ்வதை எமது குறிக்கோளாகக் கருதுகின்றோம்.
எமது தொழில் மூலமான வருமானத்தை நாட்டின் மூலைமுடக்குகளுக்கெல்லாம் கொண்டு சென்று அதன் மூலம் உள்ளூர் மட்டத்தில் நிலையான வளர்ச்சிக்கான கருவியாக விளங்க விரும்புகின்றோம்.
ஊக்கம், அர்ப்பணிப்பு மற்றும் புதுமை செய்யும் மனப்பான்மை கொண்ட இளைஞர்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.
சவால் விடுக்கும் மற்றும் துரிதமாக மாற்றமடைந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் பணியாற்றுவதில் மகிழ்ச்சியடையும் இளைஞர்களாக இந்த குறிக்கோளை சாத்தியமாக்க இணைந்து செயல்பட அழைக்கின்றோம்.



## முகாமைத்துவ பயிலுனர்கள்

• தெரிவு செய்யப்படும் பயிலுனர்கள் ஆங்கிலத்தில் விரிவானதொரு பயிற்சிக்குட்படுத்தப்படுவார்கள். • இது மூன்று மாத கால வாடிக்கையாளர் சேவை தொடர்பான சான்றிதழ் திட்டமும் உணவு சந்தைப்படுத்தலில் 18 மாத டிப்ளோமா திட்டமும் அடங்கும். • தெரிவு செய்யப்படுவதற்கு, விவசாயம், அறிவியல், வியாபார முகாமைத்துவம், வர்த்தகம், கணக்கியல், பொருளியல், விருந்தோம்பல், முகாமைத்துவம் அல்லது சந்தைப்படுத்தல் போன்ற ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் / அல்லது தொழில்சார் தகைமை (முழுதும்/பகுதி) 2-3 வருட அனுபவம். • விற்பனை சந்தைப்படுத்தலில் பட்டம் அல்லது அதற்கு ஈடான தகுதி பெற்றிருக்க வேண்டும். • 28 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.



## வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள் /சேவை உதவியாளர்கள்

தகுதிகள்

- 18-24 இடைப்பட்ட வயதினராய் இருத்தல்.
- க.பொ.த (சா/த) ஆங்கிலம், கணக்கியலில் சித்தி.
- ஆங்கிலத்தில் உரையாடும் திறமை.
- கவர்ச்சியான ஆளுமை.
- நேர சூசிகையின்படி வேலைசெய்ய விருப்பம்.
- வார இறுதிநாட்களில் பணியாற்ற சம்மதம்.
- ஆண் பெண் இருபாலாரும்.

## KFC குழு உறுப்பினர்



- 18-24 இடைப்பட்ட வயதினராய் இருத்தல்
- க.பொ.த (சா/த) ஆங்கிலம் மற்றும் கணக்கியலில் சித்தி
- ஆங்கிலத்தில் உரையாடும் திறமை
- நேரசூசியின்படி பணியாற்ற விருப்பம்
- வார இறுதி நாட்களில் பணியிற்ற சம்மதம்

## மருந்து கலவையாளர்கள் (நிறைவேற்றதிகாரிகள் மட்டம்)

- தகுதிபெற்ற மருந்து கலவையாளரின் இலங்கை மருத்துவ சபையில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
- மருந்து கலவையில் 2 வருட அனுபவம்.
- ஆங்கிலத்தில் எழுதவும், பேசவும் திறமை, வாடிக்கையாளர் உறவினைப் பேணுவதில் விருப்பம்
- இந்தப் பதவி ஒரு கவர்ச்சிகரமான கொடுப்பனவுகளை கொண்டிருக்கிறது. தாராளமான தொழில்சார் கொடுப்பனவும் உண்டு. இது தொழில் தரங்களுக்கும் அதிகமாக அமையும்.



## மருந்தக உதவியாளர்கள்

- மருந்து கலவையாளர் பரீட்சைக்குத் தோற்றுவதாக இலங்கை மருத்துவக் கல்லூரியில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
- மருந்தக உதவியாளராக குறைந்தது ஒருவருட அனுபவம்.
- ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும் எழுதவும் தெரிந்திருத்தல்
- நேர சூசிகையின்படி வேலை செய்ய விருப்பம்

**விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க, மேல் மூலையில் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு உங்கள் விபரத்தை 2010, மே 23 ஆம் திகதிக்குமுன் உங்கள் தொலைபேசி தொடர்பு இலக்கத்துடன் அனுப்புக.**

C A R G I L L S ( C E Y L O N ) P L C
மனித மூலவள அதிகாரி
கார்கில்ஸ் (சிலோன்) பிஎல்சி
இல. 40 யோர்க் வீதி கொழும்பு 01.
தொ. 2427500 மின்னஞ்சல் jobs@cargillsceylon.com

Cargills food city
KFC
Cargills BIGCITY
Cargills express


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அழகிய இல்லங்களுக்குரிய பெயர், முகவரி, இலக்கங்களை சாஸ்திர முறைப்படி எச்சிங், எங்கிறேவிங், எம்பிோசிங், ஸ்கிறீன் முறைகளில் பிளாஸ்ரிக், பித்தளை, சில்வர், மாபிள்களில் நவீன முறையில் வடிவமைத்துப் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில்

**S.S.யசோதரன் ஆட்ஸ்**

381u, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0217903020



**அறைகள் வாடகைக்கு**

ஆடியபாதம் வீதியில் மருத்துவபீடத்திற்கு முன்பாக மருத்துவபீட மாணவிகளுக்கு சகல வசதிகளுடனும் அறைகள் வாடகைக்கு உண்டு.

**தொடர்பு** 071 2782656



# STUDY IN INDIA

## இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு

Garden City College Affiliated to Bangalore University

SSM College of Engineering affiliated to Anna Engineering University

- B.E. Information Technology,
- B.E. Computer Science,
- B.E. Electronics and Communication,
- B.E. Mechanical Engineering,

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & Maths + O/L Pass In English

- B.Sc. (Genetics),
- B.Sc. (Biotechnology),
- B.Sc. (Microbiology),
- B.Sc. Physiotherapy
- B.Sc. Nursing

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & Biology + O/L Pass In English

- B.Sc. (Fashion & Apparel Design),
- B.A. (Journalism),
- BHM. (Bachelor of Hotel Management),
- BCA. (Bachelor of Computer Applicants),
- BBM. / BBA
- B.Com (Computers)

Entry Requirements : :A/L Passes in any TWO Subjects + O/L Pass In English

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்விபயில்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:

Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194

**Scholars Information Center (Sic)**

இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 ★ 07 ★ 1924

மறைவு 24 ★ 04 ★ 2006



## நல்லதம்பி வீரசிங்கம்

திதி: ஏகாதசி

ஆண்டுகள் நான்கு சென்றாலும் ஆறவில்லை உங்கள் துயர்
எங்கு நாம் சென்றாலும் எதிலும் உங்கள் நிழல்
உங்களைப் போல் ஒருவரை எப்பிறப்பில் காண்போம் இனி.

345/3, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.

குடும்பத்தினர்.


# பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களுக்கான விற்பனை முகவர்கள் தேவை

இலங்கையில் தலைசிறந்த மோட்டார் நிறுவனமான வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தினரின் இலங்கை பூராகவும் அமைந்துள்ள பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களுக்கான விற்பனை முகவர் வலையமைப்புடன் நீங்களும் இணைந்துகொள்ளுங்கள்.

## வெற்றிடங்கள் உள்ள மாவட்டங்கள்

**கொழும்பு மாவட்டம்** - அவிசாவலை, பத்தரமுல்லை, பொரலஸ்கமுவை, கொடகமை, கொழுமடம, கொலன்னாவ, கொஸ்கமை, கொட்டாஞ்சேனை, கோட்டே, மாலிகாவத்தை, மரதானை, மோதர, நுகேகொடை, பாமன்கடை, இரத்மலானை, தொட்டலகை, **கம்பஹா மாவட்டம்** - கம்பஹா, கிரில்லவலை, கொச்சிக்கடை, கொடதெனியாவ, நீர்கொழும்பு நகரம், வத்தளை, **மாத்தளை மாவட்டம்** - தம்புள்ள, **கண்டி மாவட்டம்** - பரிகம, கெலிஓய, உன்னஸ்கிரிய, கண்டி நகரம், மனிக்ஹின்ன, பேராதெனியா, **நுவரெலியா மாவட்டம்** - ஆகரபத்தனை, உடபுஸ்சலாவை, **கேகாலை மாவட்டம்** - தரணியகலை, கொடியாகுபுர, யடியன்தொட்டை, **இரத்தினபுரி மாவட்டம்** - ஹேலியகொடை, எம்பிலிபிட்டிய, கஹவத்தை, கலவானை, கொலொன்ன, குருவிடை, பெல்மடுல்லை, இரக்வானை, சூரியகந்த, **திருகோணமலை மாவட்டம்** - கிண்ணியா, குச்சுவேலி, திருகோணமலை நகரம், **காலி மாவட்டம்** - அவித்தாவ, பலபிடிய, கஹடுவ, மத்தக, மீடியாகொடை, நாகொடை, **மாத்தறை மாவட்டம்** - தெனியாய, ஹக்மான, திஹாகொட, வெலிகம, **ஹம்பந்தொட்டை மாவட்டம்** - அகுனகொலபெலஸ்ஸ, **பதுளை மாவட்டம்** - எல்லே, கிராதுருகோட்டே, கந்தகெடிய, லுனுகல, மீகாகிவுல, **மொணராகலை மாவட்டம்** - மெதகம, ஒக்கம்பிடிய, செவனகல, வெல்லவாய, **புத்தளம் மாவட்டம்** - ஆனமடுவ, அந்திகம, ஆராய்சிகடுவ, கறுவலகஸ்வெவ, மாதம்பே, மஹாவெவ, மாரவில, மென்னப்புவ, முந்தலம, நவகத்தேகம, பல்லம, சாலியவெவ, உடப்பு, **குருநாகல் மாவட்டம்** - அலவ்வ, குருநாகல், வாரியபொல, **அனுராதபுர மாவட்டம்** - ஒருபொத்தானை, மஹாஇலுப்பல்லம, ரம்பாவ, திரப்பனே, **பொலன்னறுவை மாவட்டம்** - தியபெதும, **யாழ்ப்பாண மாவட்டம்** - சாவகச்சேரி, யாழ்ப்பாண நகரம், ஊர்காவற்துறை, கொடிகாமம், பருத்தித்துறை, திருநெல்வேலி, **மட்டக்களப்பு மாவட்டம்** - மட்டக்களப்பு, செங்கலடி, கொக்கட்டிச்சோலை, வாகரை, **அம்பாறை மாவட்டம்** - அட்டாலைச்சேனை, அக்கரைப்பத்து, ஒலுவில், பொத்துவில், சம்மாந்துறை, **கிளிநொச்சி மாவட்டம்** - கிளிநொச்சி, மாங்குளம், பரந்தன், **முல்லைத்தீவு மாவட்டம்** - முல்லைத்தீவு.

### தேவையான தகைமைகள்

- விண்ணப்பிக்கின்ற பிரதேசத்தில் நடைமுறையிலுள்ள உதிரிப்பாகங்களின் தேவைக்கேற்ப கொள்வனவு செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல்.
- பிரதான வீதிக்கருகில் 150 - 200 சதுர அடியுடன் கூடிய இடவசதியைக் கொண்ட வியாபாரத்திற்கான இடமொன்று இருத்தல்.
- வங்கிக் கணக்கின் மூலம் பிணை வைக்கக்கூடிய தன்மை.
- உதிரிப்பாகங்கள் பற்றிய அறிவு மற்றும் பிரதேசத்தில் இருக்கும் பஜாஜ் இயந்திரவியலாளர்களுடன் உள்ள தொடர்புகள் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

உங்கள் விண்ணப்பப்படிவம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதிரிப்பாகங்களுக்கான விற்பனை முகவர்" என குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் கிடைக்கும் விதத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விற்பனை முகாமையாளர்,
உதிரிப்பாகங்கள் மற்றும் பாகங்கள் பிரிவு

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

PB270

இலக்கம்: 120,120A, பன்னிபிடிய வீதி, பத்தரமுல்லை.
தொலைபேசி: 0114 700600.

tradlanka



## WANTED SHOW ROOM SPACE

Show room space wanted in Jaffna town area, Preferably at stanly Road, Please contact on T.No 0772539466 or 0773412549

(97947)



வசீகரத் தோற்றத்திற்கு!

## சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பூ, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் கருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீர தோற்றத்தைத்தரும்.



சந்தனாலேப

**'சிவா நறுமணப் பூங்கா'**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

(வி/555203)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 28 ★ 02 ★ 1931

அரன் அடியில் 08 ★ 05 ★ 2008



அமரர் உயர்திரு.

## சின்னத்தம்பி நாகராஜா

(பிரபல சட்டத்தரணியும், முன்னாள் மாநகர சபை முதல்வரும்)

வார்த்தைக்குள் அடங்காத வனப்பு மிகு ராஜாவாக
கந்தர்மடம் ஈன்ற அன்பனாக, அன்பிற்கோர் அணிகலனாக
அருளுக்கோர் தாயகமாக, பண்பிற்கோர் பகலவனாக
பேர்புகழ் விரும்பாத பேராளனாக குடும்பத்திற்கும் ஊரிற்கும்
நாட்டிற்கும் ஓர் உத்தமனாக வாழ்ந்து ஒளியூட்டிய சுடரே!
தாங்கள் மறைந்து ஈராண்டானாலும் எம்முடன் தோன்றாத்
துணையாக வாழ்ந்து வரும் தலைவா!
என்றும் எம் மனதை விட்டு நீங்காத தெய்வமே- தங்களின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
நல்லூர்க் கந்தனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

thayanc@yahoo.com
0019088290102, 0776183171

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சிக்குள் மூழ்கிக்கிடந்த மக்களை அரங்குக்கு இழுத்துவந்த அபிக்ஞன சகுந்தலம்



இந்திய இலங்கை நட்புறவின் அடிப்படையில் உதயன் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத் தில் கடந்த புதன்கிழமை (05.05.2010) அன்று மாலை ஐந்து மணிக்கு கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்க நாதன் அவர்களின் நெறியாள்கையில் சமஸ்கிருத நாடக ஆசிரியரான காளிதாசரின் 'அபிக்ஞான சாகுந்தலம்' நாட்டியநாடகம் மேடையேற்றம் செய்யப்பட்டது. பெருந்திரளான பார்வையாளர்கள் நேரத்துக்கு முன்னதாகவே வந்து கூடியிருந்தனர். மிக எளிமையாக அனைத்து தரத்திலுள்ள பார்வையாளருக்கும் விளங்கக்கூடிய வகையிலும் நாட்டியத்தின் நளின, லாவண்ய செயற்பாடுக ளையும் உள்ளடக்கி இந்நாட்டிய நாடகம் இரண்டு மணி நேரமும் பார்வையாளரின் சிந்தனை சிதறாது கவர்ந்து வைத்திருந்தது.

சமஸ்கிருத மொழியில் புகழ்பெற்ற கவிஞராக, நாடக ஆசிரியராக, சிறந்த இலக்கிய கர்த்தாவாக விளங்கிய ''காளியின் ஊழியன்'' என்ற பொருள்பட்ட பெயர் கொண்ட காளிதாசரின் சிறந்த படைப்புக்களில் ஒன்றே ''அபிக்ஞான சாகுந்தலம்''. இவர் எழுதிய ஏனைய நாடகங்கள் 'மாளவி காக்னி மித்திரம்', 'விக்கிரமோர் வசியம்' என்பனவாகும். ஆங்கில இலக்கியத்திலே சேக்ஸ்பியருக்கு ஒப்பான இடத்தினைப் பெற்றிருப்பவர் காளிதாசமகரிஷி. இவரது இந்த நாடகம் தான் ஐரோப்பாவுக்கு முதன்முதலில் அறிமுகமான இந்திய இலக்கியங்களில் ஒன்று எனப்படுகிறது. பின்பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இது பல மேற்கத்தியக் கவிஞர்களையும் வியக்கவைத்துள்ளது.

தேவலோகத்தில் இந்திர சபையில் அழகிய அப்ஸர பெண்களான ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோகத்தமையுடன் இந்திரன் நாட்டியத்தில் மகிழ்ந்திருந்தபோது பூலோகத்தில் உக்கிரதவத்திலீடுபட்டிருந்த விசுவாமித்திரரின் யாகத்தைக் குழப்ப எண்ணி இந்திரன் மேனகையை அனுப்புகிறான். மேனகை ஒருவாறு அவரது தவத்தைக் குழப்பிவிடுகிறாள். இவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. ஆனால் முனிவர் அதை ஏற்க மறுக்கிறார். சகுந்தலப் பட்சிகள் அவளை வளர்த்து வருகிறது. அவள்தான் சகுந்தலை. இக்குழந்தையை கன்வரிஷி கண்டெடுத்து தனது ஆச்சிரமத்தில் வளர்த்து வருகிறார். அவளும் இயற்கைச் சூழலில் மரங்கள், மான், பறவைகளுடன் அழகிய பெண்ணாக வளர்கிறாள். சக்திமிக்க வீரன் துஸ்யந்த மன்னன் வேட்டையாட வந்த சமயம் சகுந்தலையைக் கண்டு காதல் வயப்பட்டு இயற்கையை சாட்சியாக வைத்துக் காந்தர்வ மணம் புரிந்து தனது கணையாளியையும் திருமணத்தின் சாட்சியாக அவளுக்கு அளித்துவிட்டுப் பிரிந்து செல்கிறான்.

பிரிவு வேதனையில் மனம் கலங்கி நின்ற சகுந்தலை, ஆச்சிரமம் வந்த துர்வாச ரிஷியைக் கவனியாதுவிட்டதால் அவர் கோபத்திற்கு ஆளாக்கப்பட்டு சாபமிடப்படுகிறாள். தோழியரின் கெஞ்சுதலின் பேரில் சாபவிமோசனமாக அடையாள ஆபரணத்தை மன்னன் காணும் போது சாபவிமோசனம் உண்டாகும் எனக் கூறிச் செல்கிறார் கன்வரிஷி. விடயமறிந்து சகுந்தலையை சீடர்களுடன் துஸ்யந்தமன்னரிடம் அனுப்பிவைக்கச் செல்லும் வழியில் கணையாளி தொலைந்துவிடுகிறது. அரசனிடம் சகுந்தலை வந்து தன்னை யாரெனக் கூறும் போது அடையாளச் சின்னம் இல்லாததால் அவமானப்படுத்தப்படுகிறாள். தன் கற்பிற்கான களங்கம் ஏற்பட்டதால் வேதனை அடைந்த சகுந்தலையை விண்ணுலகத்தார் ஏற்கின்றனர்.

காவலாளி மீனவனிடமிருந்து அரசமுத்திரை பதித்த மோதிரத்தை பெற்று வந்து அரசனிடம் கொடுத்தபோது தான்அவனுக்கு சகுந்தலையின் ஞாபகம் வருகிறது. வேதனையுடன் இந்திரலோகம் சென்று தன் குழந்தையையும் பின் மனைவியையும் கண்டு சேருவதாக கதை நிறைவுறுகிறது.

புதிய உத்திகளும் கற்பனை வளங்களும் கூடிய தரமான படைப்புகளை உள்நாடுகள், வெளிநாடுகள் மற்றும் பிரபல விழாக்களிலும் மேடையேற்றம் செய்து கொண்டிருக்கின்ற இந்திய நாடக அமைப்பு அருட்ஸ்ரீ கலையகம் இக் குழுவினரின் மூலமாக கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட நாடகமே காளிதாசரின் 'அபிக்ஞான சாகுந்தலம்'. சிரேஸ்ட ஊடகவியலாளர், பிரபல இசைக் கலைஞர், இசையமைப்பாளர், இசை நடன நெறியாளர், ஊடக ஆலோசகர், விரிவுரையாளர், நிர்வாக முகாமையாளர் எனப் பல துறைகளைசார்ந்த மூத்த கலைஞர் கலாசூரி அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன் நாட்டிய சாஸ்திர அரங்கினை மையமாகக் கொண்டு ஈழத்தமிழரின் பண்பாடு கலாசாரத்துக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் மேடையேற்றப்பட்ட நாடகம் இதுவாகும். தற்கால சூழ்நிலையில் விஞ்ஞான தொழில்நுட்பங்கள், உலகமயமாதலின் வழி மக்கள் தமது பண்பாடு, கலாசார விழுமியங்களைத் தமது தேவைகளுக்கேற்ப மாற்றி அமைத்துக் கொண்டும், ஓய்வின்றிய ஒரு நெருக்கமான இயந்திரமயப்படுத்தப் பட்ட சூழலில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இளைஞர் சமுதாயம் சினிமாவினை வேண்டி நிற்கின்ற இவ்வேளையில் அறிஞர், பெரியோர்கள் மீண்டும் தம் மரபுகளைத் தேடிச் செல்கின்றனர். மரபுவழியான கலைகள், பண்பாட்டுவிழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வம்காட்டத் தொடங்கியுள்ளனர். காலனித்துவத்திலிருந்து பின் காலனித்துவம் நோக்கி செல்ல வேண்டியுள்ளது.

மரபுவழியான கலைகளைப் பாதுகாக்கவும் தற்கால சமாதான சூழலில் அனைவரும் ஒன்றிணைந்து பலமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற சிந்தனையுடனும் இந்நாடகம் மேடையேற்றப்பட்டதை அவதானிக்க முடிகிறது. நாடக ஆரம்பம் நாட்டிய நாடகத்தைப் பார்க்கும் மன நிலையை எமக்கு கொண்டுவர உதவிற்று. நடிக, நடிகையரது மிகத் தெளிவான, சீரான அசைவுகள் நாடகம் ஆரம்பிக்கும்போதே பார்வையாளரை ஒன்றவைத்து விட்டது. இந்திர சபையில் தேவ மங்கையர்களின் ஆடல் தென்னிந்திய நடனங்களை நேரடியாக பார்க்கும் வாய்ப்பினை ஈழத்து மக்களுக்கு அளித்துள்ளது. நடனத்துக்கான பாத்திரத் தெரிவுகள் வேட உடை மற்றும் ஒப்பனையின் தரம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.



**தமயந்தி**
(நாடகமும் அரங்கக் கலைகளும் சிறப்புப் பட்டதாரி)

விசுவாமித்திரருக்கும் மேனகைக் கும் இடையிலான காதற்காட்சிகள், தபோவனம் அங்குள்ள காட்சிகள் என்று தொடர்ந்து செல்கிறது. அரங்கில் காட்சிகளை பார்க்கும்போது இந்திரலோகத்தில் தான் இருக்கின்றோம் என்ற பிரம்மை ஏற்படுகின்றது.

காட்சிமாற்றங்களை காட்டும்போது திரைச் சேலைகளை மூடித் திறந்து பார்வையாளரின் கவனத்தில் தொய்வு திசைதிருப்பம் ஏற்படாத வகையில் நெறியாள்கை செய்யப்பட்டிருந்தமை சிறப்பு. காட்சிமாற்றம் நடைபெறுகின்றது என்ற ஒரு சிந்தனை கூட பார்வையாளரிடம் ஏற்படவில்லை. மிகவிரைவாக, அதே நேரம் அவர்களது கவனத்தைக் குழப்பாத முறையில் காட்சி மாற்றம் அமைந்திருந்தது. இதற்கு ஒளியமைப்பு மிகவும் உதவியாக இருந்தது.

ஒப்பனைகள் என்ற வகையிலே அரசன், முனிவர்கள், தேவகன்னிகள், சகுந்தலை, தோழிகள், மரங்கள், நடனக்காரர்கள், மீனவர்கள் மற்றும் வேறுபட்ட பாத்திரமான சிங்கம், மான் என அனைத்து பாத்திரங்களும் பார்த்தவுடன் பார்வையாளர் மனதில் நின்று நிலைத்திருக்கக் கூடிய வகையில் நுணுக்கமான, சீரான ஒப்பனை பயன்படுத்தப் பட்டிருந்தது. மரங்கள் காட்டில் உள்ளவை என்பதால் பல்வேறு விதமான மரங்களைக் காட்ட வேறு வேறு வித இலைகள் காட்டப்பட்டிருந்தன. சகுந்தலை மரவுரி அணிந்திருந்தாள் என்பதைக் காட்ட அதே நிறத்திலான ஆடையும் ஆபரணங்கள் பூக்களாலும் செய்யப்பட்டிருந்தது. மான் ஒப்பனையும் வேட உடையும் மற்றும் கொம்பு, தலைப் பகுதி பார்த்தவுடன் பார்வையாளரின் மனதில் பதிந்து விடுகின்றது. சிங்கள நாடகங்களில் வரும் சிங்கபாகு நாடகத்தை ஒத்த சிங்கத்துக்குரிய வேடஉடை ஒப்பனைகளும் அதேவிதமான நடிப்பையும் காணமுடிகிறது.

நடிகர்களான இந்தியர்களுக்கும், ஈழத்து தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து பணியாற்றியிருக்கின்றனர். வேறுபாடின்றி அனைவரும் ஒன்றாகவே காணப்படுகின்றனர். பாத்திரத்திற்கேற்ப நடிப்பு வெளிப்பாடு, இந்திரன், சகுந்தலை அபலைப் பெண் என்பதைக் காட்ட மிக சாதுவாக நடித்திருந்தார். மென்மையான சுபாவம், ஏமாறும் தன்மை, ஏக்கம் அனைத்தும் பாவங்களினுடாக நன்கு காணமுடிந்தது. மான் தனது மிரட்சியான பார்வையும் துள்ளித் துள்ளி ஓடுவதும் பழக்கப்பட்ட தனது சகோதரியுடன் சேருவதும் நன்கு வடிவமைக்கப்பட்டிருந்தது.

மீனவர்கள் கடற்கரையில் துள்ளிக்குதித்து விளையாடுவது, வலையிழுப்பது, மீனைக் கண்டு ஆனந்தமடைவது என அவர்களது சேட்டைகள், குழப்படித்தனங்கள் நன்றாக இருந்தது.

காட்சியமைப்பு என்றவகையில் அரங்கினை முழுமையாகப் பயன்படுத்தியவிதம், நடிகர்கள் அரங்கில் அசைவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்ட இடங்கள், சிறப்பு காட்சிமாற்றங்களை நேரவிரையமின்றி உடனடியாக செய்யக்கூடிய வகையில் காட்சிப் பொருள்கள் உருவாக்கப் பட்டிருந்தமை நாடகம் பயிலுகின்ற, நெறியாள்கை செய்கின்ற மாணவர் ஆசிரியர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒளியமைப்பு இங்கு மிக முக்கியமான ஒரு இடத்தினை வகிக்கிறது. வானுலகத்தினைக் காட்டுவதற்கு புகையூட்டிய ஒளியமைப்பும் சந்தோசமான மனநிலைக்கு பச்சை, சிவப்பு நட்சத்திரங்கள் போன்று அரங்கப் பின் சுவரில் விழுத்திய ஒளிகளும் மன நிலைகள் நாடக நிலமையைக்காட்ட வர்ண ஒளிகளும் காட்சிமாற்றங்களை காட்டவும் ஒளி பயன்படுத்தப்பட்டுள்ளது. இரவு நேரம் நாடகம் நிகழ்த்தப்பட்டதாலும் இவ் ஒளியமைப்பு மிக முக்கியமான ஒன்றாக இருந்துள்ளது.

தொகுத்து நோக்குகின்றபோது யாழ்ப்பாணக் கலாசாரத்தில் இன்று இவ்வகையான நாடகங்கள் மேடையேற்றப்படுதல் மற்றும் நாடகங்கள் பார்க்கும் பழக்கம் மக்களிடம் அரிதாகிப் போய்க்கொண்டிருக்கின்றது. எனவே இப் பாரம்பரியம் வளர்க்கப்படவேண்டும். இது ஒரு நாட்டிய நாடகமாக அமைந்தாலும் ஆடல்கள் மற்றும் சிறிய பாடல்கள் இசையினைப் பயன்படுத்தி மக்களுக்குக் கருத்தினை முழுமையாக விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் இந்த நாடகம் அமைந்திருப்பது சிறப்பு. இவை இலக்கியக் கதையாக அமைவதும் மக்கள் இலகுவாக விளங்கிக் கொள்ள ஒரு காரணம் தான்.

நாட்டிய சாஸ்திரத்தின் விதிகளுக்கு ஏற்பவே 'சாகுந்தலம்' நாடக எழுத்துரு உருவாக்கப்பட்டுள்ளது. இவை நாடகமாக அல்லாது நாட்டிய நாடகமாகவே மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளது. இங்கு நாடக எழுத்துருவில் சொல்லப்படாத விடயங்கள் நாடக ரசனையைக் கூட்டுவதற்காக சேர்க்கப்பட்டுள்ளமையினையும் அவதானிக்க முடிகிறது. இந்திரலோகத்தில் தேவமங்கையருடன் நாட்டியம் நிகழ்தல் மற்றும் விசுவாமித்திரருடன் மேனகை உறவு கொள்ளுதல் போன்ற காட்சிகள் நாடக எழுத்துருவில் இல்லை. காட்டிற் சகுந்தலை வளர்வதுடன்தான் நாடகம் ஆரம்பமாகிறது. நாட்டிய சாஸ்த்திரதில் காதற் காட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

கௌதமி ஒரு வளர்ப்புத் தாய்; வயது முதிர்ந்தவள். பாத்திரப் பொருத்தப்பாடு இங்கு அமையவில்லை. தொடர்ந்து சசி தீர்த்தத்தில் நீராடும்போது தாய்க்குரிய பக்குவம் அங்கு உணர்த்தப்படவில்லை. துஸ்யந்தனிடம் அரச அவையில் சகுந்தலை தன்னை யாரென உணர்த்த விளையும்போது துஸ்யந்தன் அவளை அவமானப் படுத்தும் காட்சியில் அவரது நடிப்பு சற்று மிகைப்படுத்தப் பட்டிருந்தது. அரசருக்குரிய கம்பீரத்தன்மை குறைந்து உடலை வளைத்து நகைச்சுவைப் பாத்திரமாக மாறி விட்டார். துஸ்யந்தனுக்கு வேட உடை ஒப்பனை, நடிப்பு அனைத்தும் சரியாக அமைந்தாலும் பாத்திரப் பொருத்தப்பாடு போதாது. நாடக கதாநாயகன் ஏனைய பாத்திரங்களைவிட தெளிவாக (Focus) அமைய வேண்டும். நாடக எழுத்துருவில் விதூஷகன் பாத்திரம் உண்டு. இங்கு அது கொண்டு வரப்பட வில்லை. சகுந்தலையைவிடத் தோழியருக்கு அதிக ஒப்பனை வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் துலக்கமாக்கப் பட்டிருந்தனர்.

முழுமையாக நோக்குமிடத்து சிறந்த ஒரு கலைப் படைப்பு இது. வரவேற்கத்தக்க ஒருவிடயம். தொடர்ந்தும் இவ்வாறான நாடகங்கள் மேடையேற்றப்பட வேண்டும். யாழ். பல்கலைக்கழகம், திருமறைக் கலாமன்றம் மற்றும் சில அமைப்புகள் நாடகங்களை மேடையிடுகின்றன. ஆயினும் அவை போதியளவாக அமையவில்லை. நாடகங்கள் பற்றிய விளம்பரங்களைக் கவரக்கூடிய முறையிலும் எல்லா இடமும் சென்று அடையக் கூடிய விதத்திலும் செய்து தொடர்ந்து மேடையேற்றும் போது உச்சப்பட்சமான விளைவு கிடைக்கும். மக்கள் தொடர்ந்து பார்க்கும் பழக்கம் ஏற்படும். தொலைக் காட்சித் தொடர்கள் போன்ற வெவ்வேறு விதமான பொழுது போக்குக்கு பழக்கப்பட்ட மக்களை இவற்றிற்கு பழக்கப்படுத்தி இதன்மூலம் எமது பண்பாட்டு விழுமியங்களை மீளப் பாதுகாக்க முடியும். * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARRUL GLOBAL EXPRESS
INTERNATIONAL COURIER & CARGO SERVICES

- வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் மற்றும் ஆவணங்கள் 48 - 72 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்.
- 05 Kg, 10Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 30 % விசேட சலுகை.

இல1, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P :- 021 222 6113 Email :- arrulgex@gmail.com


# பல்துறைசார்........

(7ஆம் பக்கத் தொடர்ச்சி..)

ப: சிறு வயதில் இருந்து ஓவியத் துறையினை முறைப்படி கற்றுக் கொண்டேன். அதனால் ஆசிரியப் பணி செய்யும் காலத்தில் மாணவர்களுக்கு ஓவியக் கலையினையும் கற்றுக்கொடுத்தேன்.

அட்டைப்படங்கள், மற்றும் சிறுகதைகளுக்குப் படம் வரைந்ததுடன் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட சைவசமய பாடப் புத்தகங்களிலும் ஓவியங்களை வரைந்துள்ளேன்.

கே: உங்களுடைய வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவங்கள் பற்றி...?

ப: என்னிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் பல்வேறு துறைகளிலும் சிறப்பாகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எனக்கு அடிக்கடி கடிதம் எழுதி சுகநலம் விசாரித்தபடி உள்ளார்கள். இவை மனதுக்குப் பெருமை தருபவை அல்லவா? இதைத்தவிர வேறு என்ன வேண்டும்.

நான் ஆசிரியத் துறையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் நேரத்தை வீணாகப் போக்காமல் 'ரியூசன்' கொடுத்து வந்தேன். தமது பிள்ளைகளுக்கு பிரத்தியேகமாகச் சொல்லிக் கொடுப்பதற்காக என்னைச் சிலர் தமது வீடுகளுக்கு அழைத்துச் செல்வார்கள். அவ்வாறு அந்த மாணவர்களுக்குக் கற்பிக்கச் செல்கின்ற போது சிலவேளைகளில் பெற்றோர்கள் தாமும் இருந்து படிக்கப் போவதாகக் கூறி என்னிடம் தாமும் கற்றுள்ளார்கள்.

இத்தகைய சம்பவங்கள் என்றுமே என்வாழ்க்கையில் மறக்க முடியாதவையாகும். *******


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

இலங்கையில் நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற அதி சிறந்த இயற்கை தாது நீரை யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனை செய்வதற்கு நல்ல அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதிகள் தேவை.

நல்ல ஆரோக்கியமுள்ள - தமிழ், ஆங்கிலம் சாதாரண சிங்கள மொழிகளில் பேச்சுத்திறமை க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த 20-25 இற்கு வயதிற்குட்பட்ட யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மாவட்டத்தில் சுதந்திரமாக செயற்படக்கூடியவராக இருத்தல் அவசியம். வெற்றிகரமாக செயற்படுபவர்களுக்கு நிறுவனத்தில் நிரந்தர தொழில் வாய்ப்பு, நல்ல ஊதியம், ஊக்குவிப்பு சலுகைகள் கிடைக்கும். யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நம்பிக்கையுடன் விண்ணப்பிக்கவும்.

முகாமைத்துவ பணிப்பாளர்
*Sterling Minerals (PVT) Ltd*
96/03/10 Consistory building Front Street, Colombo - 11


## கணனி வகுப்பு ஆரம்பம்

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் முறைசாராக் கல்விப் பிரிவின் கணனி பயிற்சி வகுப்புக்கள் இம் மாதம் முதல் ஆரம்பமாகியுள்ளன.

இதனைக் கற்க விரும்புபவர்கள் கணனி ஆசிரியர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பாடசாலை அதிபர் த.சிவகடாட்சம் கேட்டுள்ளார்.

(204-100)


## விற்பனைக்கு

ஹையுண்டாய் சரக்கு வாகனம். கடும் நீலம். H100 மொடல் MFD 2001 ஒரே உரிமையாளர் நிறுவனம் ஒன்றின் பாவனையில் இருந்தது. WPPC 0009. எல்.பி.பினான்சுக்கு லீசிங் மாதம் 58,000X30. கைக்கு 6 லட்சம் நல்ல நிலையில் உடனடி விற்பனைக்குண்டு.

யாழ்ப்பாணத்தில் 12 ஆம் திகதி பார்வை யிட முடியும்.

தொ.பே: 011 2473313, 077 72244388

## பஸ் விற்பனைக்குண்டு

HA XXXX இலக்கமுடைய 54 ஆசனங்களைக் கொண்ட Ashok Leydan பஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு - 0786434935

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்திலுள்ள 30 வயது, அவிட்டம் நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற 40 கிரக பாவம் உடைய, கொழும்பில் கொம்பனி ஒன்றில் வேலை செய்யும் Software Engineer மணமகனுக்குத் தகுந்த தராதரத்துடன் உள்ள மணமகளைப் பெற்றோர் விரும்புகின்றனர்.

தொடர்பு:வி.இல4013, மே.பா. உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.






DAMRO

## Sales Representatives
(Trainee)
Jaffna, Vavuniya

With the expansion of area sales network in the above mentioned areas, we seek to recruit suitable males below 25 years of age to be appointed as Sales Representatives.

**APPLICANTS SHOULD :**

- be permanent residents of above mentioned areas.
- have G.C.E (A/L) qualifications and a flair for customer relations.
- have ability to ride a motor bike.
- have ability to communicate in Sinhala & English.

Experience in Dealer sales would be an advantage.

Total earnings will not be less than Rs.20,000/- p.m. on successful completion of a training period of three months.

## Accounts Clerks
(Trainee)
Jaffna, Vavuniya

**APPLICANTS SHOULD :**

- be permanent residents of above mentioned areas.
- be males below 26 years of age.
- have G.C.E (A/L) qualifications in commerce/Maths subjects.
- have ability to communicate in sinhala & English

Any professional qualification in Accountancy, similar to AAT & working experience will be an advantage.

Total earnings will not be less than Rs.18,000/- p.m.

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact numbers & contact details of two non-related referees to reach us within 15 days of this advertisement.

The Human Resources Manager,
DAMRO
No: 361, Kandy Road, Nittambuwa.
E-mail: hrm@damro.lk



## தரமுயர்ந்த நிதிச் சேவைகளை வழங்கும் திறன்மிக்க அணிக்குத் தலைமை தாங்குங்கள்.

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ற் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிட்டட் என்பது இலங்கையில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை ஊக்குவிக்கும் பொறுப்பினைக் கொண்ட முற்றிலும் தேசிய ரீதியிலான நிறுவனமாகும். ஆற்றல்மிக்க செயற்பாடுகள், நடைமுறைச் சாத்தியமான நிதித் தீர்வுகளைச் சமூகத்தினருக்கு வழங்குவதில் காட்டப்படும் அக்கறை என்பனவற்றின் காரணமாக, அது தலைசிறந்த நிதித் தீர்வு வழங்குநர்களில் ஒன்றாக முன்னணி நிலையை வகிக்கின்றது. நாம் புதுமை வழிகளில் விசேட கவனம் செலுத்துவதால், எமது வாடிக்கையாளர்களுடனும் ஏனைய பங்காளிகளுடனும் நீடித்து நிலைக்கும் நல்லுறவுகளைக் கட்டியெழுப்ப எம்மால் முடிந்துள்ளது. நாம் ஒன்றாகச் செயற்படுகிறோம். ஒன்றாகவே முன்னேறுகிறோம். இதுவே எமது வெற்றிக்கு வழிகோலுகின்றது.

## மீட்பு உதவியாளர்கள்
யாழ்ப்பாணம் - வவுனியா
மட்டக்களப்பு - திருகோணமலை

### தொழில் விபரம்

வெளிக்கள வேலைகளில் மிகுந்த ஆர்வம், சிறந்த தொடர்பாடல் தேர்ச்சி, வாடிக்கையாளர்களுடன் சுமுகமாகப் பணியாற்றும் இயல்பு, ஆங்கிலத்திலும், தமிழிலும் சரளமாக உரையாடும் திறமை என்பவற்றைக் கொண்ட சுறுசுறுப்பான இளைஞர்கள் எமக்குத் தேவைப்படுகிறார்கள். நீங்கள் 26 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களாகவும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் (ஆங்கிலம் கணிதம் உட்பட) 3 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும். முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

நீங்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

உங்கள் சுயவிபரக்கோவை மற்றும் உறவினரல்லாத இருவரின் பெயர்கள் உள்ளடக்கிய விண்ணப்பத்தை, இந்த விளம்பரம் பிரசுரமான திகதியிலிருந்து 7 தினங்களுக்குள், கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

உதவிப் பொது முகாமையாளர் -
செயற்பாடுகள் மற்றும் மனிதவளங்கள்
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிட்டட்
இல.18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
0117 388 388 தொலைநகல்: 011 2429888
www.cdb.lk

CDB
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட்
உங்கள் நண்பன்

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்படின்...

நாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவங்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்கு நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அரசு நியமிக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. கடந்த காலத்தின் விரும்பத் தகாத சம்வங்களுக்கு வழி செய்த காரணங்களை, உண்மைகளைக் கண்டறிவதே உத்தேச நல்லிணக்க ஆணைக் குழுவின் பணியாக இருக்கும் என்றும் கூறப் படுகிறது.

குறிப்பாக இனங்களுக்கிடையில் எழுந்த முரண்பாடுகள், வேற்றுமைகள், அரசியல் குரோதங்கள் அவற்றின் விளைவுகளுக்கான மூல காரணங்களைக் கண்டறிந்து கொள்வதும் , எதிர்காலத்தில் அவ்வாறு நிகழாமல் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து சிபார்சு செய்வதும் உத்தேச நல்லிணக்க ஆணைக் குழுவின் பிரதான பணியாக இருக்கும் என்று கூறப் படுகின்றது.

எனினும் நல்லிணக்க ஆணைக்குழு நியமிப்பது குறித்து உரிய முறையிலான விவரமான உத்தியோக பூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியாகவில்லை. அத்தகைய ஓர் ஆணைக் குழு நியமிக்கப்படுவதாயின் அது நேர்மையுடனும் நடுவு நிலைமையுடனும் செயற்படுவதாக அமைய வேண்டும். வழமையான ஆணைக் குழுக்கள் போலன்றி உண்மைகளை, இனப்பூசல்களுக்கான அடிப்படைக் காரணங்களை ஒளிப்பு மறைப்பின்றி பட்டவர்த்தனத்தனமாக வெளிப்படுத்த வேண்டும். அதற்குத் தேவையான அதிகாரங்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட வேண்டும். இல்லையேல், இதுவரை நியமிக்கப்பட்ட பல ஆணைக் குழுக்கள் போன்று பெயருக்கு நியமிக்கப்பட்டதாக அல்லது கண்துடைப்பு நாடகமாக முடிந்துவிடும்.

உதாரணமாக திருகோணமலையில் நடைபெற்ற பிரெஞ்சு தொண்டு நிறுவனத்தின் ஊழியர்களின் படுகொலைகள் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு ஏற்பட்ட கதி போலாகி விடும்.

உத்தேச நல்லிணக்க ஆணைக்குழு, தேவைப்படும் தகவல்களைத் திரட்டவும் அவற்றை அடிப்படையாக வைத்துத் தனது சிபார்சுகளை ஆணித்தரமாக வெளியிடவும் நிறைந்த அதிகாரமும் வேண்டிய ஊக்குவிப்பும் வழங்கப்பட வேண்டும். உண்மைகளைக் கண்டறிவதற்கும், அவற்றின் ஆழ, அகலங்களை துளாவி வெளிக்கொணர்வதற்கும் கட்டுப்பாடில்லாத அதிகாரம் தேவை.

அப்போதுதான் இனப்பாகுபாடுகள், வேண்டுமென்றே ஒரு சாராரை உயர்த்துதலும் மறுசாராரை தாழ்த்துதலும், குரோதங்களை வளர்த்தல், பெரும்பான்மை என்ற பலத்தினால் ஏனையோரை இரண்டாம் தரப் பிரசைகளாக்கி ஏறி மிதித்தல் ஆகிய அநீதிகளைத் தடுக்க முடியும்.

விரும்பத்தகாத சம்பவங்கள், செயற்பாடுகள் குறித்த தகவல்கள் உண்மையானவையாகவும் நேர்மையானவையாகவும் இருந்தால் மட்டுமே உத்தேச நல்லிணக்க ஆணைக் குழுவினால் பாதிக்கப்பட்ட தரப்புக்களுக்கு பலனும் நன்மையும் கிடைக்கும்.

மேலும், கடந்த காலத்தின் விரும்பத் தகாத சம்பவங்களுக்கான மூல காரணங்களைக் கண்டறிந்தால் மட்டுமே நாட்டில் கடந்த அறுபது வருடங்களாகப் பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்கு நிவாரணம் தர முடியும். உத்தேச ஆணைக்குழுவிடம் நேர்மையும், துணிவும் இல்லாவிடின் பாதிப்புற்றிருப்பவர்களுக்கு எந்த நன்மையும் மீட்சியும் கிடைக்க வாய்ப்பற்றுப் போய்விடும்.

அத்தோடு, கடந்த காலங்களின் குரோதச் சம்பவங்களுக்குரிய உண்மையான காரணங்கள் வெளிக் கொணரப்பட்டாலே, பாதிக்கப்பட்ட சாராரின் விடிவுக்கு வழிபிறக்கும். இல்லையேல் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்படும் வாய்ப்பிருக்காது.

நாட்டின் ஆறு தசாப்த கால குரோதம் நிறைந்த விவகாரத்துக்குத் தீர்வு காணவேண்டுமாயின் சிறுபான்மையினரின் பிரிக்க முடியாத உரிமைகள், சுயாதீனம், ஆட்சி அதிகாரம் ஆகியவை பாதுகாக்கப் பட வேண்டும். இத்தகைய நன்னோக்கத் துடன் உத்தேச நல்லிணக்க ஆணைக்குழு செயற்பட்டால், வேற்றுமை உணர்வின்றி பணியாற்றினால் மட்டுமே அதனிடமிருந்து ஆக்க பூர்வமான, பெறுமதியான பலன் பாதிப்புற்றோருக்குக் கிடைக்கும். இல்லையேல் நல்லிணக்க ஆணைக் குழுவும் உலகத்தை ஏமாற்றும், காலத்தை இழுத்தடிக்கும் பழைய தந்திரமாகிவிடும். உத்தேச ஆணைக்குழு நியமிக்கப் பட்ட தன் பின்னர் அது கண்டறிந்த உண்மை கள் ஒளிவுமறைவின்றி வெளிவந்த பின்னரே அது பயன்தரக் கூடிய முயற்சியா என்பதனை எதிர்வு கூறமுடியும்.

# பஸ்கோவின் விஜயத்துக்கு முன்னர் இலங்கை ஐ.நா.சபையின் மதிப்பைப் பெற முயற்சிக்கிறது

கொழும்பு,மே9

ஐக்கிய நாடுகளின் சிரேஷ்ட அதிகாரி லைன் பஸ்கோவின் இலங்கை விஜயத்துக்கு முன்னர் சில ஏற்பாடுகளைச் செய்து ஐ.நாவின் நன்மதிப்பைப் பெறுவதற்கு இலங்கை அரசு முயல்கிறது என ஐக்கிய நாடுகள் சபை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 'இன்னசிற்றி பிரஸ்' மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் யுத்தக் குற்றங்களுக்குப் பொறுப்பேற்கச் செய்யும் விடயம் தொடர்பாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்கான குழுவொன்றைத் தாமதமின்றி நியமிக்கப்போகிறார் என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் தெரிவித்து இரண்டு மாதங்களாகின்றன.

இவ்விடயம் தொடர்பாக ஐ.நாவின் சிரேஷ்ட அதிகாரி லைன் பஸ்கோ இலங்கை செல்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. அதுவும் நடைபெறவில்லை.

இலங்கை சில ஏற்பாடுகளைச் செய்து தனது நற்குணத்தை ஐக்கிய நாடுகளுக்குக் காண்பிப்பதற்காக லைன் பஸ்கோவின் விஜயத்தைத் தாமதிப்பதாக ஐக்கிய நாடுகளின் மூத்த அதிகாரியொருவர் இன்னசிற்றி பிரஸுக்குத் தெரிவித்தார்.

''பான் கீ - மூன் அவ்வாறன குழுவொன்றை நியமிக்கமாட்டார் என இலங்கையின் ஐக்கிய நாடுகளுக்கான தூதுவர் பாலித கோஹன எம்மிடம் தெரிவித்தார். அவர்கள் நிதி சேகரிப்பதற்காகவே தவிர வேறொன்றிற்காகவும் குழுவை நியமிக்கமாட்டார்கள்'' என அவர் தெரிவித்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-சி)

## துடுப்பாட்டப் பயிற்றுநர்களுக்கான கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,மே9

வடமாகாண துடுப்பாட்ட பயிற்றுநர் ரவீந்திர புஸ்பகுமார யாழ். மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்களை இன்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இக்கலந்துரையாடல் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும். யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளில் பயிற்றுநர்களாகக் கடமையாற்றும் சகல பயிற்றுவிப்பாளர்களும் அத்தோடு பயிற்றுநர் தரம்-1இல் சித்தியடைந்த பயிற்றுவிப்பாளர்களும் இதற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தின் துடுப்பாட்ட நிலை, எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடரபாகவும், பயிற்றுவிப்பாளர்களுக்கு மேலதிக பயிற்சிகளை ஏற்பாடு செய்வது தொடர்பாகவும் ஆராயப்படவிருக்கிறது.

யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது. (50)

## வயலின் மேதை இராதாகிருஷ்ணனுக்கு இணுவிலில் இன்று பாராட்டு விழா

மருதனார்மடம்,மே9

கலாபூஷணம் விருது, ஆளுநர் விருது ஆகிய இரு விருதுகளையும் ஒரே வருடத்தில் பெற்ற இசைஞான திலகம் உருத்திராபதி இராதாகிருஷ்ணனுக்கு பாராட்டுவிழா இடம் பெற உள்ளது. இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இந்நிகழ்வு நடைபெறும்.

சமாதான நீதிவான் பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவிலே ஆசியுரைகளைச் சிவஸ்ரீ சாம்பசிவ சோம சபேஷக் குருக்கள், பிரம்மஸ்ரீ ம.கிருஷ்ணமூர்த்தி ஐயா ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும் பாராட்டுரைகளை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யூனியன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன், எழுத்தாளர் தே.எஸ்.ஆனந்தன், ஓய்வுபெற்ற மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி ஆகியோர் வழங்குவர்.

இந்நிகழ்வில் ஒருபகுதியாக இடம் பெறும் 'காணாமிர்தம்' இறுவட்டு வெளியீட்டிலே வெளியீட்டுரையை சங்கீத பூஷணம் வி.சிவசேகரம் நிகழ்த்துவார். மதிப்பீட்டுரைகளை முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி ந.வி.மு. நவரத்தினம் ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வின் நிறைவிலே இசை ஞான திலகம் உ. இராதாகிருஷ்ணன் அவர்களின் வயலின் கச்சேரியும் இடம் பெறும். (1-55)

## ஊடகப்பிரதி அமைச்சர் யார்?

கொழும்பு,மே9

ஊடகத்துறைப் பிரதியமைச்சராகப் பதவி வகிப்பது குறித்து மேர்வின் சில்வா தீர்மானிக்க முடியாது. ஜனாதிபதியே இது குறித்து தீர்மானிக்க வேண்டும் என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஊடகத்துறை அமைச்சராகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட ரம்புக்வெலவிடம் மேர்வின் சில்வாவின் பதவி குறித்து நிலவும் குழப்பம் தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், எனது நண்பர் மேர்வின் எனது பிரதியமைச்சராகப் பதவி வகிப்பது குறித்து அவர் தீர்மானிக்க முடியாது. இதனை ஜனாதிபதிதான் தீர்மானிக்க முடியும் என்றார்.

ரம்புக்வெல ஊடகத்துறை அமைச்சராகப் பதவியேற்ற அன்று மேர்வின் சில்வா தனது பிரதியமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியும் இதனை ஏற்றிருந்தார். ஜனாதிபதி அலுவலகம் இதனை உறுதி செய்திருந்தது.

எனினும், மேர்வின் சில்வா தான் பதவியை இராஜினாமாச் செய்யவில்லை என்றும் அந்தப்பதவிக்கு மேலதிகமாகவே தனக்கு பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் பதவி தரப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து வருகிறார். (அ-சி)

## அ'புரம் ஹோட்டல் நீச்சல் தடாகத்தில் மூழ்கி சம்பத் வங்கி உயர் அதிகாரி பலியானார்!

அனுராதபுரம்,மே9

அனுராதபுரம் நகரிலுள்ள பிரபல்யமான ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் மூழ்கி சம்பத் வங்கியின் வடக்கு - கிழக்கு சிரேஷ்ட முகாமையாளர் இராமலிங்கம் ஜெயராஜேஸ்வரன் மரணமானார் என்று அனுராதபுரம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமான ஜெயராஜேஸ்வரன் (வயது 60) இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

கொழும்பை வசிப்பிடமாகக்கொண்ட ஜெயராஜேஸ்வரன் தனது தனிப்பட்ட தேவையொன்றுக்காக அனுராதபுரம் நகருக்கு வந்துள்ள அதே வேளை, தேவை முடிவடையாததால் 6ஆம் திகதி இரவு குறித்த ஹோட்டலில் தங்கியிருந்துள்ளார்.

இரவு வேளையில் நீச்சல் தடாகத்தின் பக்கம் சென்று நீந்தி விளையாடிய இவர் நீரில் மூழ்கியுள்ளார். நீரில் மூழ்கிய முகாமையாளரை ஹோட்டல் ஊழியர்கள் அனுராதபுரம் போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றபோது அவர் மரணமடைந்தார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னரும் இளைஞரொருவர் இதே ஹோட்டலி லுள்ள நீச்சல் தடாகத்தில் மூழ்கி மரண மடைந்தது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 27 | 10.05.2010 |
| | திங்கட்கிழமை |
| திதி | : துவாதசி |
| | முழுவதும் |
| நட்சத்திரம் | : உத்தராட்டாதி |
| | மு.இ. 11.39 வரை |
| சுபநேரம் | : 11.54 - 01.24 |
| ராகுகாலம் | : 07.24 - 08.54 |

## திடீர் நண்பர்கள் குறித்து கவனமாக இருங்கள்!

வலி.வடக்கு,மே.8

கவனம்! திடீர் நண்பர்கள் குறித்து மிகக் கவனமாக இருங்கள். அவர்கள் உங்களை மயக்கி, கொள்ளையில் ஈடுபடக் கூடும்.

இத்தகைய ஒரு சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது :-

மூன்று மணிநேர பஸ் பயணத்தில் நண்பராகியவர், வீட்டாருக்கு உணவில் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்து பணம், நகைகள், கைத்தொலைபேசியுடன் மாயமாக மறைந்து சென்றார்.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது. மயக்க மருந்து கலந்த உணவை உட்கொண்ட திருமதி என்.சிவநாதன் (வயது 35) அவரின் மருமகன் எ. சிந்துஜன் (வயது 14) ஆகியோர் வெள்ளிக்கிழமை பகல் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

சிவநாதன் என்பவர் வவனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு அருகில் மன்னாரைச் சேர்ந்தவர் என்ற அறிமுகத்துடன் குறிப்பிட்ட நபர் நண்ப ரானார்.

இருவரும் உரையாடியவாறு பயணத்தைத் தொடர்ந்தனர். அப்போது அந்த நபர் தாம் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்க்க விரும்பியே வருவதாகவும், இங்கு தமக்கு யாரையும் தெரியாது எனவும், தனக்குத் தங்குவதற்கு உதவுமாறும் கேட்டுள்ளார்.

இதனை உண்மையென நம்பிய சிவநாதன் பிரஸ்தாப நபரை வீட்டில் தங்குவதற்கு அனுமதியளித்தார். இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய அந்த நபர் வீட்டாரின் இரவு உணவில் மயக்க மருந்தைக் கலந்துள்ளார்.

அவர்கள் உறங்கிய பின்னர்; வீட்டில் இருந்த 25 ஆயிரம் ரூபா பணம், இரண்டு பவுணுக்கும் மேற்பட்ட நகைகள், கைய டக்கத் தொலைபேசி என்பவற்றை எடுத்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டார்.

காலையில் நீண்ட நேரமாகியும் தனது மனைவியும், மருமகனும் எழும்பாததை அவதானித்த கணவர் அவர்கள் மயங்கிய நிலையில் இருப்பதை உணர்ந்தார். பின்னர் உடனடியாக அவர்களை யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதித்தார்(அ-6-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

- தூரக் கல்வி மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2010


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் ம.அசோக்குமார்
அவர்களின் அன்புத் தந்தை

**கணபதிப்பிள்ளை மகாலிங்கம்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(97972)

ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## நன்றி நவிலல்



06.05.2010 வியாழக்கிழமை
நடைபெற்ற

**திருமதி பூரணம் நவரத்தினம்**

அவர்களின் முதலாம் வருட நினைவு நாளில் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை. (96604)

ஏ.நவரத்தினம்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**மாணிக்கவாசகபிள்ளை கனகசபை**

(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

தோற்றம்
12★12★1936

மறைவு
21★04★2009

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்படும்."
எங்கள் குடும்பத்தின் வழிகாட்டும்
ஒளிவிளக்காக வாழ்ந்தீர்களே!
நல்லைக் கந்தனை நாளும் வழிபட்டு
மயிலவன் தாளினை பற்றிக் கொண்டீர்களே!
மின்னல் வேகத்தில் எங்களை
விட்டுப்பிரிந்து காலமும் ஓராண்டானதே!

(97983)

புலவனார் வீதி, கல்வியங்காடு.
(குயின்ஸ் மரக்காலை).

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## விற்பனைக்கு

42 - இலக்கமுடைய 250 ஹெண்டர், அலுமினிய பொடியுடன் 350 றெட் பெலிட் இஞ்ஜின் பொருத்திய நிலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0770259923, 021 4909789
இல. 146, புங்கன்குளம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.நகர் 4ஆம் குறுக்குத்தெருவில் 7 அறைகளுடனும் 2 குளியல் அறைகளுடனும், தனிக்கிணறு மற்றும் வசதிகளுடனும் நல்ல சுற்றாடலில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். வாடகை மற்றும் விடயங்கள் பேசித்தீர்க்கலாம்.
தொடர்பு: சேவியர் 021 222 9626
ஒரு கிழமைக்குள் தொடர்பு கொள்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கையில் 1¼ பரப்பு வெற்றுக்காணி நான்கு பக்க சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு. யாழ்.போதனா வைத்தியசாலை, பெரிய கடை, பிரபல பாடசாலைகளுக்கு அண்மையில் உள்ளது.
தொடர்பு: 021 222 7801

## தேவை

விற்பனை முகவர் நிறுவனமொன்றின் வியாபார தேவைகளுக்குப் பாவிப்பதற்கு சாரதியுடன் டெலிக்கா வகை வாகனம் தேவை.
தொடர்பு: 0775190225

## வீடு விற்பனைக்கு

இருபாலை கிழக்கில் கௌரவமான சூழலில் 2 பரப்புக்காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 321 0218, 0779559442

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் (நல்லூர், திருநெல்வேலி, கந்தர்மடம், கல்வியங்காடு விரும்பத்தக்கது) சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு: 0776354224

# பருத்தித்துறை - கொழும்பு இரவு சேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 9

பருத்தித்துறைக்கும் கொழும்புக்கும் இடையிலான இலங்கை போக்குவரத்து சபையின் பகல் சேவை, இன்று ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் இரவு சேவையாக மாற்றம் செய்யப்பட்டு இடம்பெறவுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் இந்த சேவை பகல்நேரச் சேவையாக இடம் பெற்று வந்தது.

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கி மாலை 7.30 மணிக்கும் அதேபோல் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத் தருகிலிருந்து பருத்தித்துறை நோக்கி மாலை 6.30 மணிக்கும் இந்த இரவுச் சேவை இடம்பெறவுள்ளது.
(1-236)

## காணி விற்பனை

வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு.
இல.14, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியில்.
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 2715390

## கண்ணீர் அஞ்சலி



அமரர் இராமலிங்கம்
**ஜெயராஜேஸ்வரன்**
(மூத்த பிராந்திய முகாமையாளர்
சம்பத் வங்கி லிமிட்டெட்)

அன்பின் உருவம், பண்பின் பிறப்பிடம் அமரர் இராமலிங்கம் ஜெயராஜேஸ்வரன் அவர்களின் திடீர் பிரிவுச் செய்தி அறிந்து மிகுந்த துயரடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, எங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பலாலி வீதி,
திருநெல்வேலி.
(சி/567500)

ந.ஸ்ரீஸ்கந்தராசா
உரிமையாளர்,
ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்.

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் மாணிக்கம் இராஜேஸ்வரன்**
(உரிமையாளர், வேல்முருகன் ரேடர்ஸ்)

அவர்களது பிரிவு குறித்துத் துயருறுவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(97969)

சி.சத்தியசீலன் குடும்பத்தினர் (நல்லூர்-ராஜா கிறீம் ஹவுஸ்)

மண்ணில்:
19.02.1958

விண்ணில்:
09.04.2010

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



எம் தாய் என்னும் தெய்வத்தை
நோய் கொண்டு போனதுவோ!
அழைப்பது போல நினைவுகள்
அருகில் இருப்பது போல கனவுகள்
நாம் பார்க்கும் திசைகள் எல்லாம்
உமது விம்பங்கள்!
தினம் பரிதவித்து நிற்கின்ற
எமது நிலை பாராயோ அம்மா!
விதி வசத்தால் எமை இங்குவிட்டு
விண்ணுலகு சென்றாய் அம்மா!
உம் இழப்பால் எம் வீட்டின்
ஒளி இழந்து போனதம்மா!

## அமரர் இராமசாமி விமலாதேவி

கடந்த 09.04.2010 அன்று எமது குடும்பத் தலைவி சிவபதமடைந்த செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் பத்திரிகை வாயிலாகவும் தந்தி மற்றும் தபால் மூலமாகவும் ஆறுதல் மொழிகள் கூறிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு அமரர் இராமசாமி விமலாதேவி அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து மதியபோசனமும் இடம்பெறும்.

குறிப்பு: இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய சந்தியிலிருந்து உடுவில் வீதியில் 500 மீற்றர் தொலைவில் நாற்பக்கமும் சுற்று மதிலுடன் கூடிய 2 பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ளவும்.

| தொலைபேசி இல | மானிப்பாய் 0789406111 |
|---|---|
| | கொழும்பு 0773139317 |

## கார் விற்பனைக்குண்டு

New Fase, 19 - xxxx இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள யப்பான் A.C. கார் விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 7866828 (97946)

## வீடு வாடகைக்குத் தேவை

நான்கு பேர் கொண்ட வைத்தியர் குடும்பம் ஒன்றிற்கு யாழ்.நகர சுற்றாடலில் நல்ல பாதுகாப்பான சூழலில் வீடு ஒன்று ஒரு வருடத்திற்கு வாடகைக்குத் தேவை. உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
T.P : 0718798859 (97976)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்: 17.11.1980

இறைவனடியில்: 09.05.2009

### ஆசீர்வாதம் கிறேசியன் தூர்மராஜா

(தாதிய உத்தியோகத்தர்,பொதுவைத்தியசாலை,முல்லைத்தீவு)

இறுதிவரை மாசு அற்ற ஒப்பற்ற மருத்துவ சேவை செய்த மகோன்மத நிலையை அடைந்த நண்பனே! உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உன் நினைவுடன்:
யாழ்ப்பாணம். நண்பர்கள்.

## ஆறாம் மாத நினைவஞ்சலியும் நன்றி நவிலும்

தாயின் மடியில் 15 ★ 02 ★ 1975



தரணியின் தாளில் 12 ★ 11 ★ 2009

### அமரர் தம்பிராஜா சயந்தன்

(வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்)

திதி : ஏகாதசி (09.05.2010)

சிரித்த முகத்துடன் சிட்டாய் சிறகடித்து
உற்றவர்க்கும் உறவினர்க்கும்
உதவிகள் பல புரிந்த எம் தெய்வமே!
பாதியிலே உம் வாழ்வை பறித்தெடுத்து விட்டனரே
பாவிகளாய் நாம் இங்கு பரிதவிக்கின்றோம் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்
ஓம் சாந்தி!

அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி, தபால்,தந்தி மூலமாகவும் ஆறுதல் கூறியோருக்கும் கண்ணீர் அஞ்சலிகளைப் பிரசுரித்து வெளியிட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்றுப் பொறியியலாளர், உத்தியோகத்தர், ஊழியர்கள், ஐக்கிய தீப சனசமூக நிலைய நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதர, சகோதரிகள், மைத்துனர், மருமக்கள்.
முதலாம் வட்டாரம், நெடுந்தீவு.

## தீவக வலய அதிபர்கள் கூட்டம் திங்களன்று

யாழ்ப்பாணம்,மே.9

தீவகக்கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை வலய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி. வி.இராதா கிருஷ்ணன் கேட்டுள்ளார். (1-267)

## மாதாந்த ஒன்றுகூடல்

கைதடி,மே 9

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூகசேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற இருப்பதாக மாவட்ட சமூக சேவை அலுவலர் ஆ.ஞானவேல் அறிவித்துள்ளார். (50-288)

## யாழ்.அறுசுவை உணவு

யாழ்ப்பாண சைவ/ அசைவ உணவு வகைகளுக்கு நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் ஹொட்டல் லக்ஸ் இஸ்டொயிஸ்ஸ் இல 34, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமண, பூப்புனித நீராட்டுவிழா, பிறந்ததினவிழா ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிறந்ததினக் கொண்டாட்டங்களை எமது ஹொட்டலில் கொண்டாடவும் ஒழுங்குகள் செய்துதரப்படும்.

★ஒடியல் கூழ் ஸ்பெசல் (சைவம்/அசைவம்)
★மட்டன், சிக்கன், இறால் புரியாணி வகைகள்
★யாழ்ப்பாண பாரம்பரிய மருத்துவக் கறிகள் ( பத்தியக்கறி)
★கணவாய்,நண்டு, இறால் கறிவகைகள்
★மற்றும் மரக்கறி வகைகள்

தயவுசெய்து முன்கூட்டியே ஓடர்செய்து தரமான, சுவையான உணவு வகைகளை உண்டு மகிழ்ந்திடுங்கள்.

தொ.பே: 0212223966
மொபைல்: 0770417926
072 2192271

லக்ஸ் இஸ்டொயிஸ்ஸ்
இல34, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம். (97971)

---

**Merchant Bank of Sri Lanka PLC**
MBSL
Co.Reg.No. PQ 10

# Come Join Us to Carve your Path In Hospitality!

**Hotel Nallur Jaffna**

Merchant Bank of Sri Lanka PLC (MBSL) is the pioneer merchant bank in Sri Lanka with a history of over 28 years, and net assets of over LKR 1.6 billion. MBSL's shares are quoted on the Colombo Stock Exchange and held by approximately 8,000 shareholders. MBSL offers a wide range of financial services including Investment Banking, Corporate Advisory, Leasing and Trade Finance.

We are now in the process of diversifying into the Leisure Industry, through Hotel Nallur, a proposed 3 star, 80 room hotel, based in Nallur - Jaffna. This is a BOI Project and would commence its construction immediately.

We invite applications from experienced pro-active individuals who are passionate about working in the leisure industry, and who reside in the Jaffna Peninsula to apply for the following positions :-

### Resident Engineer

**Responsibilities :**

- The Resident Engineer would oversee all construction activities and maintain quality standards required.
- Coordination between all statutory authorities will also be a part of his duty.
- Monitor progress and be pro-active in achieving targets

**Qualifications & Experience :**

- BSc. Engineering (Civil) from a recognized University or equivalent qualification.
- 10 years post-qualifying experience in construction of medium size buildings/hotels

### Quantity Surveyor

**Responsibilities :**

- Evaluate qualities and approve contractor's progress payments and verify stocks of material at site etc.

**Qualifications & Experience :**

- BSc. in Quantity Surveying with 3 years experience
OR
- NDT / NCT with 10 years experience

**General :**

A suitable remuneration package will be offered commensurate with qualifications, experience, competence and other assessment factors.

The post applied for should be indicated at the top left hand corner of the envelope. Please forward your CV with contact telephone numbers and with names of two non-related referees to reach us within 7 days ;


*The business bank*

The Chairman
**Merchant Bank of Sri Lanka PLC**
Bank of Ceylon Merchant Tower
28, St. Michael's Road, Colombo 3.
E mail: careers@mbslbank.com
Telephone: 4711711
http://www.mbslbank.com

SKILLS Advertising

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மறைமாவட்ட
மனித முன்னேற்ற நிலைய
(கியூடெக்) இயக்குநராக
13 ஆண்டுகள் அரும்பணியாற்றி,
இடமாற்றம் பெற்றுச் செல்லும்
'சாமசூரி', சமூகஒளி

**அருட்பணி கியோ ஜெயக்குமார்**
அடிகளாரின் பணிமென்மேலும்
சிறந்தோங்க பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
வேளாண்மியம்,
கிளைச் சங்கங்கள், இளவாலை.

## மனமார வாழ்த்துகிறோம்



மக்களின் தொண்டனே
மாபெரும் தலைவனே...
பாரம்பரிய கைத்தொழில் மற்றும்
நல்லிணக்க சிறுகைத்தொழில்
அமைச்சராகப் பதவியேற்ற
திரு K.N.டக்ளஸ் தேவானந்தா
அவர்கள் இம்மண்ணில்
நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறோம்.

J/79, சிறாம்பியடி, மாதர் அபிவிருத்திச்சங்கம். யாழ்ப்பாணம்.

## தரமான 4'' கொங்கிறீற் கல் விற்பனைக்குண்டு

கண்டாவளை மண்ணில் அரிந்த கல்லின் விலை-38/= சல்லிபோட்டு அரிந்த கல்லின் விலை 41/=

தேவையான இடத்திற்கு நேரடியாகக் கொண்டு வந்து தரப்படும்.

தொடர்பு:- 0777531344

## காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,மே 9

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை விளையாட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி. ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம், தியாகராசா ம.ம.வி. பதில் அதிபர் திருமதி யு.ஸ்ரீஸ்கந்தராசா, இலங்கை வங்கி முகாமையாளர் சி.சிவகுமார், வர்த்தகர் சி.ஜெயராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (50-250)

## ஓராண்டு நினைவஞ்சலி

வலைஞர் மடத்தில் பறிக்கப்பட்ட
ஒரு கொடியின் இரு மலர்கள்

மலர்வு: 1985.11.02

மலர்வு: 1987.05.21



உதிர்வு: 2009.04.20



திதி: 2010.05.09
ஏகாதசி

அமரர் சந்திரேஸ்வரன்
**கிந்துநாளன்**

செல்வி சந்திரேஸ்வரன்
**சிந்துஜா**

கொடூர யுத்தத்தால் இடைநடுவில் உயிர்பறிக்கப்பட்ட எமது உயிரினும் உயிரான அன்புச் செல்வங்களான உங்கள் நினைவு என்றும் எங்கள் மனதில் நிறைந்துள்ளது. உங்களுடன் அன்புச் சித்தப்பா அமரர் சிவக்கொழுந்து மகேஸ்வரன் (உதிர்வு: 22.04.2009) மற்றும் உடன் பிறவாச் சகோதரன் அமரர் ஜெகதீஸ்வரன் மயூரகாசன் (உதிர்வு: 13.02.2009) ஆகியோரின் நினைவும் என்றென்றும் எம் உள்ளங்களை வாட்டி வதைக்கிறதே. உங்களது பிரிவுத் துயரால் தவிக்கும் நாம் உங்களது ஆத்மாக்கள் சாந்திபெற அருளவேண்டி அரன் பாதம் பணிகின்றோம்.

இல.216/2x2
திருவையாறு, கிளிநொச்சி.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
தந்தை: சிவக்கொழுந்து சந்திரேஸ்வரன்.
தாய்: சந்திரேஸ்வரன் [illegible]

## யோகாசனப் பயிற்சி வகுப்பு

உடல் உள ஆரோக்கியத்துக்கான யோகாசனமும் தளர்வுப் பயிற்சிக்குமான் புதிய வகுப்பு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சைவ பரிபாலன சபை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

கிழமை நாள்களில் காலை 6 மணி முதல் 7 மணிவரை இடம்பெறவிருக்கும் இந்தப் புதிய பயிற்சி வகுப்பில் துறைசார்ந்த வளவாளர்களின் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

வயது வேறுபாடின்றி இருபாலாருக்கும் மற்றும் நோயாளர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படவிருக்கின்றன.

பயிற்சியைத் தொடரவிருப்போர் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-14)

## வீடு வாடகைக்கு

**கொக்குவில் கிழக்கில் 4½ பரப்புக் காணியில் 3 அறை மற்றும் 5 அறைகள் கொண்ட இரண்டு வீடுகள் நீண்டகால வாடகைக்கு உண்டு.**

**தொடர்பு: 0712745991**

(97977)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**மாணிக்கவாசகர்**
**விஜயகாந்தன்**
(காந்தன்)
09.05.2010

பிறப்பு:
13✱08✱1974

இறப்பு:
09✱05✱2009

எங்கள் அன்புத் தெய்வமே
காந்தம் போல் வந்த - எம்
குடும்ப விளக்கே - காந்தா
எமை விட்டு எங்கு சென்றாய்
சென்ற பாதையை எமக்குக் காட்டுமையா
உமை வந்து பார்ப்பதற்கு - அப்பா
நாங்கள் கதறும் சத்தம் கேட்கவில்லையோ
அப்பா அப்பா என ஏங்கித் தவிக்கின்றோம்
எங்கள் ஏக்கத்தை எப்போது தீர்ப்பீர்கள் - அப்பா
ஏக்கத்துடன் நாம் அனைவரும் காத்திருக்கிறோம்
எம் வீட்டின் ஒளி விளக்கே...

நி.மு - 4ஆம் வட்டாரம், மண்கும்பான்.
த.மு - கரிகாலை, நாகபடுவான்.

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.
தொ.பே: 0779595200

(97963)

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு
29
✱
07
✱
1929



உதிர்வு
21
✱
04
✱
2009

**அமரர் துரைராசா கன்றீ மகேஸ்வரி**
(சாவகச்சேரி)

கண்ணிமைபோல் காத்திட்ட எம் ஆருயிர் அம்மாவே
உங்கள் உயிர் எம்மை விட்டு பிரிந்த மர்மம் தான் என்னவோ!
எம்மை விட்டு சென்று ஆண்டொன்று சென்றாலும்
உம் நினைவுகளால் துடியாய் துடிக்கின்றோம்
ஆறுதல் தர ஓடி வருவீரோ அம்மா!
தங்கள் ஆத்மா சாந்தி வேண்டி பிரார்த்திக்கும்.....

இல.212, கண்டி வீதி,
சாவகச்சேரி.

[சி/567505]

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**மாணிக்கம்**
**இராஜேஸ்வரன்**
(உரிமையாளர்,
வேல்முருகன் றேடர்ஸ்)

அவர்களது பிரிவு குறித்து துயருறுவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.55, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்.

[97968]

தகவல்:
சோ.நவநாதன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் கோலாகலம்

T/20 ICC WORLD TWENTY20 WEST INDIES 2010

30.04.2010 - 16.05.2010

# இறுதிப் பந்து வரை கலைத்தது பாகிஸ்தான்; ஆயினும் ஒரு ஓட்டத்தால் அரையிறுதி வாய்ப்பை இழந்தது!

பார்படோஸ், மே 9

இறுதிப் பந்து வரை வெற்றி இலக்கைக் துரத்திய பாகிஸ்தான் அணி, ஒரு ஓட்டத்தினால் வெற்றி வாய்ப்பை இழந்ததால் அதன் அரையிறுதிக் கனவு தகர்ந்தது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் ஐ.சி.சியின் மூன்றாவது ருவென்ரி - 20 உலகக் கிண்ணப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத் தடுப்பைத் தேர்ந்தெடுத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பம் கிடைத்த நியூசிலாந்து அணியின் ஆரம்ப வீரர்களாக பிரண்டன் மக்கலம், ரைடர் இணை களமிறங்கியது. ரைடர் 5 ஓட்டங்களுடன் சமியின் பந்தில் ஆட்டம் இழக்க மக்கலம் 5 பௌண்டறிகளுடன் 29 பந்துகளில் 33 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து வந்த குப்தில் 2, ரெய்லர் 3 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்து செல்ல அணித்தலைவர் விற்ரோரி 34 பந்துகளில் ஒரு பௌண்டறி, 2 சிக்ஸர்களுடன் 38 ஓட்டங்களைப் பெற்று 'ரன் அவுட்' ஆனார்.

ஸ்ரைரிஸ் 21 ஓட்டங்களுடனும் ஹொப்கின்ஸ் 2 ஓட்டங்களுடனும் அப்ரிடியின் பந்தில் ஆட்டம் இழந்தனர். நெதன் மக்கலம் 12 ஓட்டங்களுடனும் பட்லர் பந்துகளை சந்திக்காத நிலையிலும் ஆட்டம் இழக்காது இருந்தனர்.




20 ஓவர்கள் நிறைவடைந்த நிலையில் 7 விக்கெட்டுக்களை இழந்த நியூசிலாந்து அணி 133 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் அணியின் சமி, ரஹ்மான், அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

134 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கைத் துரத்திய பாகிஸ்தான அணி இறுதிப்பந்துவரை கடுமையாகப் போராடியது. இரு அணிகளுமே சுப்பர் - 8 சுற்றின் முதல் போட்டிகளில் தோல்வி அடைந்து இருந்ததால் இப்போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாய நிலையில் இருந்தன.

வெற்றிக்கனவை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடனேயே ஆட்டம் இழந்து பெவிலியன் திரும்பினர்.

ஆரம்ப வீரரான கம்ரன் அக்மல் 5 ஓட்டங்களுடன் மில்ஸின் பந்தில் ஆட்டம் இழக்க மற்றொரு ஆரம்ப வீரரான சல்மான் பட் பொறுப்புணர்ந்து அபாரமாக ஆடினார்.

பட்டுடன் ஜோடி சேர்ந்த ஹபீஸ் 8 ஓட்டங்களுடன் பொன்டின் பந்தில் ஹொப்கின்ஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார். உமர் அக்மல் ஓட்டம் எதனையும் பெறாமலேயே மில்ஸின் பந்தில் ஹொப்கின்ஸிடம் பிடிகொடுத்துப் பெவிலியன் திரும்பினார்.

மிஸ்பா - உல் ஹக் (3) அப்ரிடி (11) அப்துல் ரஸாக்(29) ரஹ்மான் (2) என வேகமாக ஆட்டம் இழக்க சல்மான் பட் 67 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காது களத்தில் இருந்தார்.

கடைசி ஓவரை அசத்தலாக வீசினார் பட்லர். அவரின் இறுதிப் பந்தை ரஹ்மான் எதிர்கொண்டார். இரண்டு ஓட்டங்களைப் பெற்றால் போட்டியை வென்றுவிடலாம் என்ற எண்ணத்தில் பந்தை ரஹ்மான் அடிக்க அப்பந்தை லாவகமாகப் பிடி எடுத்தார் குப்தில்.

பாகிஸ்தான் அணி இறுதிப் பந்தில் தனது விக்கெட்டை இழந்ததால் ஒரு ஓட்டத்தினால் தோல்வி அடைந்ததால் அரை இறுதிக்கு முன்னேற முடியாத நிலை ஏற்பட்டது.

பாகிஸ்தான் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் பட்லர் 3 விக்கெட்டுக்களையும், மில்ஸ் 2 விக்கெட்டுக்களையும், பொன்ட், நெதன் மக்கலம் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக நியூசிலாந்தின் பட்லர் தெரிவானார்.,

(6)

NALIN இன் காட்சியறையில் INTEL CORE i3 DESKTOP & LAPTOP அறிமுகம்
2.7 DUAL CORE/ ASUS G31 MB/ 1GB KINGSTON (800)/ 320 SAMSUNG HDD/ DVD WRITER SAMSUNG/
LCD 17' DELL GLOSY/ CASING POWERLOQIC/ POWERLOQIC KEYBORD MOUSE (BRANDED)/
LUMINOUS UPS (3 OUT)BRANDED FREE COMPUTER TABLE (BLACK)
52,000 மட்டுமே
PRO,LCD,HDD,RAM,DVD WRITER,CASING,WEB CAM, HEAD PHONE,HSDPA,ROUTER,UPS,PRINTER,SCANNER.
1.6 ATOM/ 2.93 CORE DUO கணனிகள் விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது
மூன்று வருட உத்தர வாதத்துடன் எங்கள் கணனிகள் உங்களுக்காக
195/4 Parameswarra Junction TP / Fax : 0212221166, 0777667974
NALIN Information Technologies Pvt Ltd

# ஜெயவர்த்தனா – சங்கக்கார ஓட்டமழை; வெற்றியில் நனைந்தது இலங்கை அணி!

பார்படோஸ், மே 9

ஜெயவர்த்தனா - சங்கக்கார ஜோடியின் அபாரமான சாதனை இணைப்பாட்டத்தினால் இலங்கை அணி மேற் கிந்தியத் தீவுகள் அணியை 57 ஓட்டங்களால் வீழ்த்தியது.

மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் ஐ.சி.சியின் மூன்றாவது ருவென்ரி - 20 உலகக்கிண்ணப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுப்பர் - 8 சுற்று ஆட்டத்தில் இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித் தலைவர் சங்கக்கார தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாகத் தெரிவித்தார்.

முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்ந்தெடுத்த இலங்கையணி ஆரம்ப வீரர்களாக ஜெயவர்த்தனாவையும் சனத் ஜெயசூரியாவையும் களமிறக்கியது. மூன்றாவது உலகக் கிண்ணப் போட்டியின் ஆரம்ப முதலே சிறப்பாக ஆடிவரும் ஜெயவர்த்தனா மீண்டும் தமது திறமையை வெளிப்படுத்தினார்.

ஆனால் அண்மைக் காலமாக ஓட்டங்களைக் குவிக்கத் திணறி வரும் சனத் ஜெயசூரியா இம்முறையும் 6 ஓட்டங்களுடன் ரோச்சின் பந்தில் ரெய்லரிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

ஜெயவர்த்தனாவுடன் ஜோடி சேர்ந்த அணித் தலைவர் சங்கக்காரவும் அதிரடியாக ஆட இருவரும் இணைந்து ஓட்ட மழை பொழிந்தனர். இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டத்திற்காக சாதனை ஓட்டமான 166 ஓட்டங்களைச் சேர்த்தனர்.

சங்கக்கார 49 பந்துகளில் 5 பௌண்டறிகள் 3 சிக்ஸர்களுடன் 68 ஓட்டங்களைப் பெற்று பிராவோவின் பந்தில் பொல்லார்ட்டிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார்.

கண்டம்பி 6 ஓட்டங்களுடன் ரோச்சின் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுக்க டில்ஷான் ஒரு பந்தில் 4 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழக்காது இருந்தார்.

அதிரடியான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய ஜெயவர்ததனா 2 ஓட்டங்களால் தனது சத வாய்ப்பைத் தவறவிட்டார். இவர் 56 பந்துகளில் 9 பௌண்டறிகள், 4 சிக்ஸர்களுடன் ஆட்டம் இழக்காது 98 ஓட்டங்களைப் பெற்றார்.

20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 3 ஆவது உலகக் கிண்ணப் போட்டிகளின் அதிகூடிய ஓட்டமான 195 ஓட்டங்களைக் குவித்தது.

மேற்கிந்தியத் தீவுகளின் ரோஜ் 2 விக்கெட்டுக்களையும் பிராவோ ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

196 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்ப வீரர்களாக கிறிஸ் கெய்ல் - சந்தர்போல் ஜோடி களமிறங்கியது.

கெய்ல் 5 ஓட்டங்களுடனும் சந்தர்போல் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

அடுத்துக் களமிறங்கிய சர்வான் 28 ஓட்டங்களைப் பெற்று மெண்டிஸின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். பிராவோ 23 ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்தில் மத்தியூசிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார்.

பிளிட்சர் 16 ஓட்டங்களுடன் மலிங்கவின் வேகத்தில் பெவிலியன் திரும்ப, பொல்லார்ட் (9) மெண்டிஸின் வேகத்தில் வெளியேறினார் சமி (2) ஹைன்ட்ஸ் (5) மலிங்க, மெண்டிஸின் பந்துகளில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டம் இழந்தனர்.

ரெய்லர் (16) பின் (6) ஆட்டமிழக்கா மல் 20 ஓவர்கள் நிறைவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று 57 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இலங்கை அணியின் மலிங்க, மெண்டிஸ் தலா 3 விக்கெட்டுக்களையும் குலசேகர மத்தியூஸ் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இலங்கையின் ஜெயவர்த்தன (98) ஆட்ட நாயகன் ஆனார்.

(6)

**போட்டி இல.08**

**2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்தும் பரிசுப்போட்டி**

★அனுப்புபவர் பெயர் :.......................................

★ முகவரி :.......................................

★ தொ.பே.இல. :.......................................

**கேள்வி:**

1. 2ஆவது உலகக்கிண்ண ருவன்ரி -20 போட்டியில் நெதர்லாந்து அணிக்காக விளையாடிய வீரர் ஒருவர் இம்முறை அவுஸ்ரேலிய அணிக்கா விளையாடுகிறார். அவர் யார்?

.......................................

2. சர்வதேச ருவன்ரி - 20 போட்டிகளில் முதலாவது சதம் அடித்த வீரர் யார்?

.......................................

3. லப்ரொப் கண்னிஆனது எத்தனையாம் ஆண்டு யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?

.......................................

போட்டி இலக்கம் 08 இல் வெற்றி பெறும் போட்டியாளருக்கு இல.305, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்திருக்கும் **PC Solutions** சார்பாக ரூபா 1700/- பெறுமதியான பரிசுப்பொதி வழங்கப்படும்.

★ பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை 'உதயன்பணிமனை', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி இலக்கத்துடன் T-20 உலகக் கிண்ணப் போட்டி எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

TCN EXPRESS INTERNATIONAL
உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை
★ விரைவு ★ பாதுகாப்பு ★ நம்பகத்தன்மை
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ப.நோ.சங்கம் முன்பாக)
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் உயிர் நீத்த ஈழத் தமிழர்களுக்கு தமிழகத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி

## வரும் 12 முதல் 18 வரை நடத்த புதிய தமிழகம் ஏற்பாடு



சென்னை, மே 9

இலங்கைப் போரில் உயிர் நீத்த ஈழத் தமிழர்களுக்கு வரும் 12 ஆம் திகதிமுதல் 18 வரை தமிழகத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தப்படும் - என்று புதிய தமிழகக் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

மேலும், உலகத் தமிழர்களை ஒன்றிணைப்பதற்காக உலகத் தமிழர் பாதுகாப்பு செயலகம் மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் தொடங்கப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் பேட்டியளித்தபோதே அவர் இவற்றைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

கடந்த ஆண்டு மே மாதம் கொத்துகுண்டுகளால் பலியான ஈழத் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வரும் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தப்படும்.

வரும் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை மதுரை, நெல்லை, திருச்சி, கோவை, விழுப்புரம், சென்னை ஆகிய நகரங்களில் மாலை 6 மணி முதல் 7 மணிவரை மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தப்படும்.

மதுரையில் எனது தலைமையில் 12 ஆம் திகதி மௌன அஞ்சலி தொடக்கி வைக்கப்படும். தமிழ் அமைப்புகள் இதில் கலந்து கொள்ள வேண்டும்

கடந்த பெப்ரவரி மாதம் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் கோவையில் எனது தலைமையில் நடந்த உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி உலகத் தமிழர் பாதுகாப்பு செயலகம் கடந்த 3 நாட்களுக்கு முன்பு கோலாம்பூரில் தொடங்கப்பட்டது. இங்கு, உலகத் தமிழர்களை ஒன்றிணைப்பது குறித்தும், ஈழத்தமிழர் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்தும் பேசப்படவுள்ளது.

வரும் 2012 ஆம் ஆண்டு 2 ஆவது உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு கோலாலம்பூரில் நடத்தப்படும்.

மதுரை விமான நிலையத்திற்கு சுதந்தர போராட்ட வீரர் இமானுவேல் சேகரன் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வரும் 12ஆம் திகதி மதுரையில் புதிய தமிழகம் கட்சி சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடத்தப்பட உள்ளது - என்றார்.

## முஸ்லிம் மக்களின் வீடுகள் இடித்து அகற்றப்பட்டன

கொழும்பு, மே 09

கொழும்பு, கொம்பனித்தெருவில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்து அந்தப்பகுதியில் உள்ள 20 வீடுகள் இடித்து அகற்றப்பட்டன. இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோரின் உதவியுடன் கொழும்பு மாநகரசபை அதிகாரிகள் வீடுகளை இடித்து அப்புறப்படுத்தினர்.

வீட்டு உரிமையாளர்கள் கண்ணீர் வடித்துக் கதறியழுதபோதும், வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. இதுகுறித்து முஸ்லிம் அமைச்சர்களுக்கும், எம்.பிக்களுக்கும் பாதிக்கப்பட்டோர் தரப்பால் அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்களில் எவரும் அந்த இடத்துக்கு வரவில்லை என்று சம்பந்தப்பட்டோர் கருத்துத் தெரிவித்தனர். 20 குடியிருப்புக்களில் வசித்த 35 குடும்பங்களைச் சேர்ந்த 162 பேர் இதனால் பாதிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்புகள் தகர்க்கப்பட்டபோது புகைப்படம் எடுத்த பத்திரிகையாளர்களின் ''சிம் கார்ட்டுகளை'' இராணுவத்தினர் பறித்துவிட்டுத் திருப்பி அனுப்பினர் எனவும் தெரிவித்தனர். (அ-1)

## யாழ். சக்தி 'ரி.வி'க்கு புதிய அலைவரிசை

கொழும்பு, மே 9

வரையறுக்கப்பட்ட எம்.ரி.வி. தனியார் நிறுவனத்தின் சக்தி தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு யூ.எச்.எப் 46 அலைவரிசையை வழங்க இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

சக்தி தொலைக்காட்சி யாழ்ப்பாணத்தில் ஒளிபரப்பு செய்த அலைவரிசையை அரசாங்கம் மீளப்பெற்றுக்கொண்டமைக்கு எதிராக எம்.ரி.வி. தனியார் நிறுவனம் தாக்கல் செய் திருந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் (வெள்ளி) நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அரச சிரேஷ்ட சட்டத்தரணி சுமதி தர்மவர்த் தன இதனைத் தெரிவித்தார்.

யூ.எச்.எப். 46 அலைவரிசையூடாகச் சக்தி தொலைக்காட்சிச் சேவை ஒளிபரப்பை தடங்கலின்றி மேற்கொள்ள முடியுமா என முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென நிறுவனத்தின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர்.

அந்த அலைவரிசையில் தடங்கல் இன்றி ஒளிபரப்புச் செய்யமுடியாதிருந்தால் அது பற்றி நீதிமன்றத்துக்கு அறிவிப்பதாகச் சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு தெரிவித் தனர்.

இதுதொடர்பாக இம்மாதம் 18 ஆம் திகதி நீதிமன்றத்துக்கு தெரிவிப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

# தமிழ் யூனிகோட் எழுத்துரு: தமிழக அரசு அங்கீகாரம்

சென்னை, மே9

யூனிகோட் தமிழ் எழுத்துருவை பொதுவான எழுத்துருவாக அங்கீகரிக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து தமிழக தகவல் தொடர்புத் துறை அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா சட்டசபையில் தெரிவிக்கையில்-

தமிழக அரசு தகவல்தொடர்பு பாதுகாப்பு கொள்கை, மின் ஆளுமைக் கொள்கை, மின் குப்பை கொள்கை உள்ளிட்டவை குறித்து திட்டமிட்டு வருகிறது. விரைவில் இவை வெளியிடப்படும். முதல் படியாக அனைத்து அரசுத் துறைகளும் மூன்று ஆண்டுகளுக்கான மின் ஆளுமைத் திட் டத்தை தீட்டுமாறு கேட்டுக் கொள்ளப்படும்.

தற்போது தமிழில் ஏராளமான எழுத்துருக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் இணையத்தில் தமிழின் வளர்ச்சி குறைகிறது. எனவே தமிழை இணையத்தில் பரவலாக்கவும், விரிவுபடுத்தவும் யூனிகோட் எழுத்துருவை பொதுவான எழுத்துருவாக அங்கீகரிக்க திட்டமிடப்பட் டுள்ளது. இதன் மூலம் உலகெங்கும் உள்ள தமிழர்களால் தமிழக அரசின் அனைத்து திட்டங்களையும் இணையத் தளங்கள் மூலம் எளிதில் காணமுடியும்.

மேலும், விக்கிஷனரியில், சர்வதேச இணையத் தமிழ் அக்கடமி உருவாக்கியுள்ள தமிழ்சொல்லகராதி இணைக்கப்படும். மேலும் தமிழை வளர்க்க ஆண்டு தோறும் இணையத் தளங்கள் மூலம் போட்டிகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார்.

## மடு பிரதேச செயலகக் கட்டடம் அமைச்சர்களால் திறந்துவைப்பு

கொழும்பு, மே9

மன்னார், மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேச செயலகம் அமைச்சர்களான ரிஷாட் பதியுதீன், மில்ரோய் பெர்னாண்டோ ஆகியோரால் வியாழனன்று திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் ஏ.நிக்கலஸ்பிள்ளை, இராணுவத்தின் 612 ஆவது படைப்பிரிவு கொமாண்டர் கெட்டுவகொட, நாடாளுமன்ற உறுப்பினர் உவைஸ், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தம்பனைக்குளத்தில் கடந்த 3 வருடகாலமாக இயங்கி வந்த மேற்படிச் செயலகத்துக்குப் புதிதாகக் கட்டடம் ஒன்று அண்மையில் நிர்மாணிக்கப்பட்டது. இச்செயலகத்தில் 14 கிராமசேவையாளர் பிரிவுகள் அடங்குகின்றன.

## இறால் பிடிப்பதில் மீனவர்கள் ஆர்வம்

குருநகர்ப் பகுதி மீனவர்கள் தற்போது இறால் பிடிப்பு தொழிலில் அதிக ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'றோலர்' படகுகளில் பாலைதீவுக் கடற்பகுதிக்குச் சென்று மீனவர்கள் இறால் பிடிப்பதில் பெரும் அக்கறை செலுத்திவருகின்றனர்.

தற்போது அதிகளவில் இறால் பிடிபடுவதாகவும் பருவக்காற்று ஆரம் பித்த பின்னரே மீன்பிடிப்பதில் கவனம் செலுத் தவுள்ளதாகவும் மீனவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். (04-224)

## பிரிட்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிக் கிளெக் தம்மிடையிலான கூட்டத்திலிருந்து சற்று நேரம் வெளிவந்து பிரிட்டனின் தேர்தல் முறையில் விகிதாசார பிரதிநிதித்துவ சீர்திருத்தங்கள் வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் செய்த ஆயிரக் கணக்கானோர் முன்பு உரையாற்றிவிட்டுச் சென்றுள்ளார்.

தேர்தல் சீர்திருத்தம் வேண்டும் என்ற கோரிக்கையில் தனக்கு ஈடுபாடு குறையவில்லை என்றும், ஆனால் தற்போது கன்சர் வேடிவ் கட்சியுடன் தாம் ஈடுபட்டுவரும் பேச்சுவார்த்தைகளின் விவரங்களை வெளியிட முடியாது என்றும் நிக் கிளெக் கூறினார்.

ஆனால் தேர்தல் முறையில் சீர்திருத்தம் வேண்டும் என்ற லிபரல் ஜனநாயகக் கட்சியின் முக்கிய லட்சியம் தொடர்பில் கன்சர்வேடிவ் கட்சியினர் எந்த ஒரு வாக்குறுதியையும் வழங்கியிருக்கவில்லை என்பது குறிப்படத்தக்கது.

கன்சர்வேடிவ் - லிபரல் ஜனநாயகக் கட்சிகள் இடையில் ஒப்பந்தம் ஒன்று ஏற்படலாம்; ஆனால் இரண்டுமே ஆட்சியில் பங்குகொள்ளும் கூட்டணி அரசு உருவாவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். (அ-1)


**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி றோட், யாழ்.

32 ஆவது வருட சேவை

பிரிவு 5

O/L DAY CLASS (8 - 2)

ஆரம்பம்- 10.05.2010 - 8 மணி - Mon.

★O/L DAY CLASS க்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்
★ இம்முறை 6 பிரிவுகள் மட்டும்
★ விடுதி வசதி உண்டு
★ ஆண்டு 11 மாணவர்களுக்குத் தனிப்பிரிவு
★ அனுமதிகள் இன்று முதல்

உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்களகரமான நிகழ்வுகளுக்கு ...

**திருமண அழைப்பிதழ் காட்சியறை**

**மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்**

**Wedding Card Show Room**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 100க்கு மேற்பட்ட பல வர்ண புத்தம்புதிய டிசைன்களுடன் எமது காட்சியறையில் உங்களுக்காக ...

10/= இருந்து

இணையத்தளம் : www.mathicolours.com

15/2B, முருகேசர் லேன், நல்லூர், [முத்திரைச்சந்தி] யாழ்ப்பாணம்.

தொ.இல : 021 2229285, 0777 222524

**படிவங்கள் விற்பனையாகிறது**

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் கல்வி சாரா ஊழியர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பப்படிவங்கள்

1. பாடசாலை தொழிலாளி
2. ஆய்வுகூட பரிசாரகர்
3. நூலகப் பரிசாரகர்
4. விருதித் தொழிலாளி
5. சமையல் தொழிலாளி
6. சுகாதாரத் தொழிலாளி

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம். 021 222 1637

ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். 021 222 6693

**MEGA விலைக்கழிவு!!!**

MW I
Intel 2.6 Ghz Duo Core
Intel Asrock G 31 Mortherboard
80 GB SATA Hard Disk
Kingston 1 GB 800 DDR II RAM
Samsung SATA DVD Writer
ATX Casing 500 W
Monitor 17" Flat
Keyboard
Optical Mouse
Multimedia Speaker
FREE Pen Drive, Head Phone, Card Reader, Dust Cover (4 Items)
34900/-

MW II
Intel 2.6 Ghz Duo Core
Intel Asrock G 31 Mortherboard
160 GB SATA Hard Disk
Kingston 1 GB 800 DDR II RAM
Samsung SATA DVD Writer
ATX Casing 500 W
Monitor 16" LCD
Keyboard
Optical Mouse
Multimedia Speaker
FREE Pen Drive, Head Phone, Card Reader, Dust Cover (4 Items)
39900/-

MW III
Intel 2.7 Ghz Duo Core
Intel Foxconn G 31 Mortherboard
250 GB SATA Hard Disk
Kingston 1 GB 800 DDR II RAM
Samsung SATA DVD Writer
ATX Casing 500 W
Monitor 16" LCD
Keyboard
Optical Mouse
Multimedia Speaker
FREE Computer Table, Pen Drive, Head Phone, Dust Cover (4 Items)
49900/-

MW IV
Intel 2.7 Ghz Duo Core
Intel Intel DG 31 PR Mortherboard
320 GB SATA Hard Disk
Kingston 1 GB 800 DDR II RAM
Sony SATA DVD Writer
ATX Casing 500 W
Monitor 19" LCD
Keyboard
Optical Mouse
Multimedia Speaker
FREE Computer Table, Computer Chair, Pen Drive, Head Phone, Dust Cover (5 Items)
52900/-

கணனிகளை கொள்வனவு செய்பவர்களுக்கு அனைத்து வகையான UPS (650 W) 3800/-

VISA

MUSIC WORLD & COMPUTERS

**TOYOTA HIACE வான் விற்பனைக்குண்டு.**

மிகவும் நல்ல நிலையில் உள்ள 53- XXXX தொடரிலக்கமுடைய 17 இருக்கைகளைக் கொண்ட TOYOTA HIACE வான் விற்பனைக்குண்டு.

0774528818





Video Editing துறையில் ஈடுபாடு உள்ளவர்களே...!

NALIN கணணி நிறுவனத்தினால் உங்களுக்காக HOLLYWOOD STAR 3D EFFECTS அறிமுகஞ்செய்துள்ளோம்.

தொடர்புகளுக்கு

**நளின் காட்சியறை**

195/4, பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.

H.P: 0777667974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.